Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 30 புதன்கிழமை (16.10.2013) பக்கங்கள் 20 ஓசை – 016

Tilko Jaffna City Hotel
❖ Banquet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3110)

# சம்பூர் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்துமாறு உத்தரவு

(திருகோணமலை)

திருகோணமலை சம்பூர் பகுதியில் அனல் மின்நிலையம் ஒன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ள உச்சநீதிமன்றம், அந்தப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு துரிதமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

2006ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்த தம்மை, தமது இருப்பிடங்களில் மீளக்குடியமர நடவடிக்கை எடுக்குமாறு கோரி சம்பூர் வாசிகள் சிலரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த போதே இந்த உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

சம்பூர் மக்களில் பெரும்பாலானோர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும், மிகச் சிலரே குடியமர்த்தப்படவில்லை என்றும் கூறிய அரச தரப்புச் சட்டத்தரணி, அவர்களையும் விரைவில் மீளக்குடியமர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அதற்கான இடங்கள் அடையாளம் காணப்பட்டுவிட்டதாகவும் நீதி மன்றத்தில் குறிப்பிட்டார்.

19 ஆம் பக்கம் பார்க்க


## கன்னியமர்வு கைதடியில்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் கன்னியமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. கைதடியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அலுவலகத்தில் இந்த அமர்வு நடைபெறவுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பின் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

அத்துடன், தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர் தெரிவுகள் வடமாகாணசபையின் ஆரம்ப அமர்வு நாளன்று இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

03



பலமடையாத மக்கள்

12



பரிதாபம்

18



'நாரி'

## பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பு

# தமிழரின் உணர்வுகள் கருத்தில் எடுக்கப்படும்

## பிரதமர் மன்மோகன்சிங் அறிவிப்பு

(சென்னை)

இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய மாநாட்டில்தான் பங்கேற்பது தொடர்பான எந்த முடிவும் தமிழ் மக்களின் உணர்வுகளைக் கருத்தில் கொண்டே எடுக்கப்படுமென இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திராவிட முன்னேற்றக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கை தி.மு.க. நாடாளுமன்றக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு சந்தித்து இலங்கையில் நடைபெற்ற இறுதிக் கட்ட உள்நாட்டுப் போரின்போது பெருமளவு தமிழர்கள் கொல்லப்பட்ட நிலையில், அங்கு நடைபெறும் கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என்ற தமிழகத்தின் ஒருமித்த குரலுக்கு பிரதமர செவிசாய்க்க

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பில் தோன்றிய முறுகல் நிலைக்குத் தீர்வு

### என்கிறார் சுமந்திரன்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் அண்மையில் ஏற்பட்டிருந்த முறுகலான சூழ்நிலை தீர்க்கப்பட்டு விட்டதாக அந்தக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையைக் கூட்டமைப்பு கைப்பற்றிய நிலையில் அமைச்சுப் பங்கீடு தொடர்பில் கூட்டமைப்பில் கருத்து முரண்பாடுகள் தோன்றின. இதனால் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற மாகாணசபை உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வை 9 உறுப்பினர்கள் புறக்கணித்திருந்தனர்.

எனினும், நேற்று முன்தினம் இந்த 9 பேரில் ஐவர் மூன்று வெவ்வேறு இடங்களில் தமது பதவிப் பிரமாணத்தை செய்து கொண்டனர். மிகுதியாக உள்ள நால்வர் எங்கே, எப்போது பதவிப் பிரமாணம் செய்யவுள்ளனர் என்பது தொடர்பாக எவ்வித அறிவித்தலும் விடுக்க வில்லை.

இந்த நிலையிலேயே கூட்டமைப்பிற்குள் ஏற்பட்டிருந்த முறுகல் நிலை தீர்க்கப்பட்டு விட்டதாக சுமந்திரன் எம்.பி.தெரிவித்துள்ளார். தூரதிஷ்டவசமாக முறுகல் நிலை ஏற்பட்டதாகவும், அது தற்போது முடிவிற்கு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பட்டினியில் இலங்கை

(கொழும்பு)

பட்டினியில் ஆபத்தான நிலையில் தற்போதும் இலங்கை உள்ளதாகவும் 2013 பட்டினி சுட்டியில் இலங்கை 43 ஆவது இடத்திலுள்ளது என்றும் அந்த சுட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீழ்மட்டத்திலிருந்து முன்னேறி உலக பட்டினி சுட்டி 2013 இல் 63 ஆம் இடத்துக்கு வந்துள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

### உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம்

## அபிவிருத்தி திட்டங்களுக்கு உதவி வழங்க இணக்கம்

இலங்கையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு எதிர் காலத்தில் ஒத்துழைப்பு வழங்க உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் இணக்கம் தெரிவித்துள்ளன.

பிரதி நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, சர்வதேச நாணய நிதியத்தின் விசேட கூட்டத்தொடரில் அண்மையில்

19 ஆம் பக்கம் பார்க்க

# எழுவைதீவு, மன்னார் கடலில் கைதான 37 இந்திய மீனவருக்கு விளக்கமறியல்

யாழ். எழுவைதீவு மற்றும் தலைமன்னார் ஆகிய கடற்பரப்புக்களில் வைத்து கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 37பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை மற்றும் மன்னார் நீதவான் நீதிமன்றங்கள் உத்தரவிட்டுள்ளன.

யாழ். எழுவைதீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 15 பேரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எஸ்.மகேந்திரராஜா உத்தரவிட்டார்.

புதுக்கோட்டை, ஜனதாப் பட்டினத்தைச் சேர்ந்த 15 மீனவர்கள் 4 படகுகளுடன் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் எழுவைதீவு கடற்பரப்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களும் அவர்களது படகுகளும் யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதுடன், நீரியல் வளத்துறையினர் குறித்த 15 மீனவர்களையும் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

இவர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், 4 படகுகளையும் காரைநகர் கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கு மாறு நீதவான் உத்தரவிட்டதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரி ரமேஸ் கண்ணா தெரிவித்தார்.

இதேவேளை, தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 22 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் பதில் நீதவான் இ.கயஸ் பல்டானோ நேற்று உத்தரவிட்டார்.

தலைமன்னார் கடற்பரப்பில்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கான விஜயத்தை உறுதி செய்தார் சார்ள்ஸ்



(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கவுள்ளதை பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் உறுதி செய்துள்ளார்.

இது தொடர்பில் பிரித்தானிய இளவரசர் விடுத்துள்ள உத்தியோகபூர்வ அறிவிப்பை இலங்கையில் உள்ள பிரித்தானிய தூதரகம் வெளியிட்டுள்ளது.

அதன்படி நவம்பர் 14 ஆம் திகதி

19 ஆம் பக்கம் பார்க்க

# சீன, இலங்கை உறவை வலுப்படுத்த நடவடிக்கை



(கொழும்பு)

சீனாவிற்கும், இலங்கைக்குமிடையில் இரு தரப்பு உறவினை வலுப்படுத்தும் வகையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீனாவின் சமாதானம் மற்றும் நிராயுத மக்கள் சங்கத்தின் உபதலைவரும், தேசிய மக்கள் காங்கிரஸின் உபதலைவருமான யங்ஜீன்கி நேற்றுக்காலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின் போது, ஜனாதிபதி தலைமையில் இலங்கை அடைந்துள்ள வெற்றிகள் குறித்தும் அவர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலான நல்லுறவு மேலும் வலுவடையக்கூடிய நடவடிக்கைகளை தாம் மேற்கொள்ள விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்த திருமதி.கமலாம்பிகை குமாரசாமி, மன்னார் மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜனாப் மொகமட் மக்கி முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை களுத்துறை சென். மேரிஸ் கல்லூரி, மன்னார் புனித சவேரியார் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கற்றதோடு யாழ்.பல்கலைக்கழக வணிக மாணி பட்டதாரியும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையின் முதுமாணி (M.A) பட்டம் பெற்றவருமாவார்.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற இவர் வட மாகாணத்தில் பல மாவட்டங்களிலும் கடமை புரிந்ததுடன், கொழும்பு கூட்டுறவு அமைச்சின் திணைக்களத்தில் வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டம், சிங்கள மொழிபெயர்ப்பு ஆகியவற்றையும் தனது கடமையாகக் கொண்டிருந்தார்.

## சங்கக் கிளையில் திருட்டு

சிறுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கக்கிளையொன்றில் பூட்டினை உடைத்து 22 ஆயிரத்து 285 ரூபா பெறுமதியான பொருட்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருடப்பட்டுள்ளன.

இங்கு வைக்கப்பட்டிருந்த 22 ஆயிரத்து 285 ரூபா பெறுமதியான பால்மா உட்பட ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (15)

# இளைஞர் கழகங்களை விரிவாக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஆண்டில் யாழ். மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இளைஞர் கழகங்களை விரிவாக்கவுள்ளதுடன், கழகங்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்கத் திட்டமிட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கடந்த ஆண்டு செயற்றிட்டம் மற்றும் இந்த ஆண்டு செயற்றிட்டம் தொடர்பாகவும் எதிர்காலத்தில் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கும் திட்டங்கள் தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு ஒன்று நேற்று முற்பகல் யாழ்.இளைஞர் சேவைகள் மன்றக் கட்டடத்தில் நடைபெற்றது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் சி.வினோதினி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தலைமை இளைஞர் சேவை அதிகாரி கோகுலராஜா, மேலதிக மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி சண்முகவடிவேல், நிஸ்கோ முகாமையாளர் பஞ்சலிங்கம், தேசிய இளைஞர் மன்றத்தின் மாவட்ட தலைவர் எஸ்.லக்ஸ்மன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் இளைஞர்களை தேசிய அபிவிருத்தியில் பங்கெடுக்க ஊக்குவிக்கும் வகையில் தேசிய இளைஞர் சேவை மன்றம் தனது செயற்றிட்டத்தை வகுத்துவருகின்றது என்று தெரிவித்த தலைமை இளைஞர் சேவை அதிகாரி கோகுலராஜா யாழ்.மாவட்டத்தில் உள்ள கிராம சேவகர் பிரிவுகள் தோறும் இந்த செயற்றிட்டத்தை மேற்கொள்வதற்கு இளைஞர் கழகங்கள் நிறுவப்பட்டுவருவதாகவும், யாழ்.மாவட்டத்தில் 435 கிராம சேவகர் பிரிவுகளில் 430 கிராம சேவகர் பிரிவுகளில் இந்த இளைஞர் கழகங்கள் நிறுவப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர் இவை தவிர பாடசாலைகளிலும், பொது நிறுவனங்களிலும் இத்தகைய இளைஞர் கழகங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன எனத்தெரிவித்தார்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட இளைஞர் கழகங்களின் எண்ணிக்கை 2013 இல் 516 ஆக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. எதிர்வரும் ஆண்டில் இதனை மேலும் விஸ்தரிக்க திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்தார். அத்துடன் ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக 15 இளைஞர் சம்மேளனங்கள் உருவாக்கப்பட்டிருப்பதுடன், அதில் இருந்து யாழ். மாவட்ட சம்மேளனம் அதிலிருந்து தேசிய சம்மேளனம் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் இந்த தேசிய சம்மேளத்திற்கு உபதலைவராக உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த லக்ஷசன் என்பர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இளைஞர்களுக்கான தொழில் விருத்திக் கடன் வழங்கல், தொழில் பயிற்சி, விளையாட்டு விருத்தி, கலாசார நிகழ்வுகளுக்கான பயிற்சிகள் முதலியன தமது அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். (பா)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

உப மின்நிலையங்களை நிறுவுதல் மற்றும் கட்டமைப்பு இணைப்பு வேலைகள், பராமரிப்பு வேலைகளுக்காக இன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கலிகை பிரதேசத்தின் ஒரு பகுதி, யாக்கரு பிரதேசம், அந்ததணந்திடல் ஆகிய இடங்களிலும்,

18.10.2013 வெள்ளிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கொடிகாமம் பிரதேசத்தின் ஒருப்குதி, உசன், மிருசுவில், கெற்பலி, சுன்னாகம், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி, இணுவில், கோண்டாவில், கொக்குவில், நாச்சிமார்கோவிலடி, பூநாரிமரத்தடி, கோம்பையன்மணல் பிரதேசம், உரும்பிராய், மருத்துவபீடப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

19.10.2013 சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், அராலி, காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்

20.10.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை உரும்பிராய், மருத்துவபீடப் பிரதேசம், கொக்குவில் பிரதேசம், பூநாரி மரத்தடி, கோம்பையன்மணல் பிரதேசம், காக்கைதீவு, மீனாட்சிபுரம், கொட்டடி, நாவாந்துறை, குருநகர், பாசையூர், முஸ்லிம் கல்லூரி வீதி, பொம்மைவெளி பிரதேசம், ஆறுகால்மடப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.


ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 999
திகதி 14.10.2013

வெற்றி எண்கள் 04 14 28 38
ஆங்கில எழுத்து Q

ஜக்பொட் பரிசு ரூ. 10,614,420/= வெல்லப்படவில்லை

| பரிசு விபரம் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 10,614,420/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 10 | 50,000/= | ரூ. 5,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 264 | 1,000/= | ரூ. 2,64,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 496 | 1,000/= | ரூ. 4,96,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12205 | 60/= | ரூ. 7,32,300/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6317 | 40/= | ரூ. 2,52,680/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 159245 | 20/= | ரூ. 31,84,900/= |
| ஆங்கில எழுத்து | 23102 | 20/= | ரூ. 4,62,040/= |
| | | மொத்த தொகை ரூ. | 68,91,920/= |
| [illegible] | 08 | 50,000/= | 400,000/= |

| | |
|---|---|
| [illegible] | 605013920-1-11 |
| [illegible] | 605008448-0-10 |
| [illegible] | 605009134-0-20 |
| [illegible] | 605001922-2-12 |
| [illegible] | 605011005-7-37 |
| [illegible] | 605001315-2-12 |
| [illegible] | 605006676-2-22 |
| [illegible] | 605000247-7-37 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 72,91,920/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 10,926,100/=

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3103)


# சிவபூமி முதியோர் இல்ல மண்டபத்திறப்பு விழா

(திருநெல்வேலி)

தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தின் முதியோர் விழாவும், அமரர் கே. பத்மநாதன் மண்டபத் திறப்புவிழாவும் முதியோர் இல்லத்தில் நடைபெற்றது. சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி அறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்தியத் தூதுவராலயத் துணைத் தலைவர் வி.மகாலிங்கம் கலந்துகொண்டார்.

ஆசியுரைகளை நல்லூர் ஆதினம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார், வழக்கம்பராய் அம்மன் கோயில் சிவஸ்ரீ சு.சுந்தரராஜக் குருக்கள் ஆகியோர் வழங்கினர். புதிய மண்டபத்தை ஸ்ரீதர் பத்மநாதன் மற்றும் வி.மகாலிங்கம் தம்பதிகள் திறந்து வைக்க, திருமதி சிவபத்மராணி பத்மநாதன் அமரர் பத்மநாதனின் நினைவுருவப்படத்திற்கு மாலை அணிந்து மரியாதை செலுத்தினார். (137)



**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையின் ஆசிரியர் தின விழாவை பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும், விழாத்தலைவருமான எஸ். கிருபாலசிங்கம் மங்களவிளக்கேற்றி ஆரம்பிப்பதனையும், மாணவத்தலைவி எம்.மாதுரி வரவேற்புரை நிகழ்த்துவதையும், விருது பெற்ற அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசனுக்கு பிரதம விருந்தினர் வடமராட்சி கல்விவலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஏ.ஸ்ரீதரன் கேடயம் வழங்குவதையும் காணலாம். (01)**

# ஈதுல் அல்ஹா இனிய வாழ்த்து

உலக ஒற்றுமைக்காய் எம்பெருமானார் (ஸல்லல்லாஹி அலை ஹி வஸல்லம்) அவர்கள் எடுத்து நடைமுறைப்படுத்திய சகோதரத்துவ, சமத்துவத்தைப் பேணி சந்தோசமாக சங்கமித்திருக்கும் ஹஜ் பெருநாளாம் ஈதுல் அல்ஹாவை தியாக உள்ளத்துடன் கொண்டாடும் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றறேன்.

தியாகங்கள் பலவற்றை தீட்சண்யமாக்கிய அலையில் அடிபட்ட கப்பலாய் பல அவதிகள் வந்தும் அசந்துவிடாத ஹஸரத் இப்ராஹிம் (அலை ஹிஸ்ஸலாம்) அவர்களையும், தீன்கோள் வீண்கோளாகமல் வித்திட்டு விடைதேடி நின்று வெற்றி பெற்ற இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், தூண்டிலிட்ட புழுவாய் துடித்து புலம்பிய ஹாஜராநாயகியின் தியாகங்களும் இந்நாளிலே ஈண்டு நினைவு கூறப்படவேண்டியது மட்டுமல்ல

ஆண்டுகள் பலவாகி நீண்டு கோடியானாலும் இந்த தியாககங்களின் தீர்க்க தரிசனங்கள் அனைத்தும் எமக்கோர் படிப்பினையாகும்.

எனவே நாம் இனிவரும் காலங்களிலும, ஒற்றுமையுடனும், சாந்தி சமாதானத்துடனும் எமக்குரிய அனைத்துக் கடமைகளையும் அமைதி காத்து பெருமை சேர்த்தவர்களாக செய்தது எம்மவர் செய்து சென்ற தியாககங்களுக்கு வித்திட்டவர்களாக அதனை விருட்சமாக்க வாழ வழி வகுக்க வள்ளுவனாம் அல்லாஹ்வை பிராத்திக்கின்றேன். அத்தோடு இதனை எமது வேண்டுகோளாகவும் கேட்டுக் கொள்கின்றேன்.

மௌலவி ஏ.எம்.ஏ.அஸீஸ் (காஸிமி)
யாழ்.கிளிநொச்சி மாவட்ட உலமா சபைத் தலைவர்.

# தேசிய கூட்டுறவு சபையினால் பணியாளர்களுக்கு தமிழில் பயிற்சி

## கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையினால் கூட்டுறவு பணியாளர்களுக்காக வழங்கும் பயிற்சி பாடநெறிகளை தமிழ் மொழியிலும் நடத்துவது குறித்து கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு யோசனை தெரிவித்துள்ளதாக இலங்கை தேசிய கூட்டுறவு சபை கருத்து முன்வைத்துள்ளது.

இலங்கை தேசிய கூட்டுறவு சபையினால் சிங்களம் பேசும் பிரதேசங்களில் கூட்டுறவு ஊழியர்களின் அறிவு மனப்பாங்கு திறன்களை விருத்தி செய்து கூட்டுறவுச் சங்கங்களில் அறிவுத்திறனுடைய முகாமைத்துவத்தினை முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு கூட்டுறவு அபிவிருத்தி சான்றிதழ் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான தேசிய சான்றிதழ் (உயர்தரம்) பாடநெறி என்னும் பெயரில் இரு பாடநெறிகளை நடத்தி பரீட்சையில் பின்னர் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

அத்துடன் கூட்டுறவுச் சேவையில் இணையும் பொருட்டும் உயர்பதவியினை பெற்றுக்கொள்ளும் பொருட்டு இந்தச் சான்றிதழ்கள் தகைமைகளை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது.

இதன்பொருட்டு தேசிய கூட்டுறவுச் சபையின் கல்வி உபகுழு ஆராய்ந்து இந்தப் பாடநெறியின் பாடவிதானத்தினை தமிழில் மொழிபெயர்த்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் பயிற்சியை நடத்தி சான்றிதழ் வழங்குவதற்கு சிபார்சு செய்துள்ளது. இதுதொடர்பான வாய்ப்புக்களையும் வசதிகளையும் ஏற்படுத்துவதற்கு இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இதுவரை இத்தமிழ் மொழி மூலமான பயிற்சிநெறிகள் முன்னர் வடகிழக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தாலும் தற்போது வடமாகாண கூட்டுறவுத் திணைக்களத்தால் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கூமாங்குளம் கிராமத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



(வவுனியா)

தேசியடெங்கு ஒழிப்புவாரத்தை முன்னிட்டு கூமாங்குளம் இளைஞர் கழகத்தினால் (KYC) டெங்குஒழிப்பு தொடர்பா[illegible] விழிப்புணர்வு பிரசாரநடவடிக்கை ஒன்று கூமாங்குளம் கிராமமட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

இந் நிகழ்வில் கூமாங்குளம் இளைஞர் கழகத்தினருடன் வவுனியா பொலிஸாரும், கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலய மாணவர்களும் கலந்துகொண்டனர். இதன்போது மக்களுக்கு டெங்குநோய் தொடர்பாகவும் டெங்கு நோய் ஒழிப்புதொடர்பாகவும் துண்டுப் பிரசுரம் வாயிலாக விளக்கமளிக்கப்பட்டது.

டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டுமக்கள் மத்தியில் டெங்கு தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இச் செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐந்து நூலகங்கள் விருதுக்கு தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் 5 நூலகங்கள் தேசிய நூலக ஆவணமாக்கல் சபையின் விருது பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கைதடி, சரசாலை , நாவற்குழி, வரணி, மிருசுவில் ஆகிய இடங்களில் அமைந்த நூலகங்களே இவ்விதம் விருது பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் மிகச் சிறந்த நூலக சேவை செயற்பாடுகளைக் கருத்தில் கொண்டே கொழும்பிலுள்ள தேசிய நூலக ஆவணமாக்கல் சபை சென்ற 2012 ஆம் ஆண்டைப் போல இவ் வருடமும் இந்த நூலகங்களுக்கு பரிசில்களை வழங்கவுள்ளது.

இந்த நூலகங்களின் நூலகர்கள் தமக்குரிய பரிசை எதிர்வரும் 29 ஆம திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு 07 இல் அமைந்துள்ள தேசிய நூலக ஆவணமாக்கல் சபையின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ள பரிசளிப்பு நிகழ்வில் பரிசைப் பெறவுள்ளனர். (90)

# பழைய மாணவர்சங்க பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 20.ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உறுப்புரிமையினை உறுதிப்படுத்த விரும்பும் பழைய மாணவர்கள் பாடசாலை நேரத்தில் பாடசாலையினுள் அமைந்துள்ள பழைய மாணவர் சங்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பதிவு செய்து உறுப்புரிமை பெற்ற அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது சமூகம் தருமாறும் பழைய மாணவர் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (48)

# காணாமல்போன சிவில் சமூகமும், சமூக சிற்பிகளும்




தேர்தல் காலத்தில் அறிக்கைகளை விடுவதற்கென்று ஒரு கூட்டம் இருக்கிறது. இந்தக் கூட்டத்திற்கும் சமூகத்திற்கும் இடையில் நெருக்கமான உறவு இருப்பதில்லை.

குறைந்தபட்சம் ஒரு நல்ல தொடர்பாடல் கூட இந்தக் கூட்டத்திற்கும் மக்களுக்கும் இடையில் கிடையாது. அது மட்டுமல்ல, யதார்த்தத்திற்கும் நடைமுறைக்கும் கூட சிறு துளியளவு உறவு கிடையாது. முற்று முழுதாகக் கற்பனை உலகத்திலே மிதந்து கொள்கின்ற இவர்கள், மக்களுக்காக ஒரு சிறு உதவியைக் கூட சேவை மனத்தோடும் தியாக சிந்தையோடும் செய்வதில்லை.

பதிலாகத் தம்மை புத்திஜீவிகள், ஆய்வாளர்கள், மேலாளர்கள், வழிகாட்டிகள், சிந்தனைச் சிற்பிகள் எனக் கருதிக்கொண்டு ஒட்டுமொத்த சமூகத்தின் கருதுகோள்களாக தமது கருத்தையே நிறுவ இவர்கள் முயற்சிப்பதுண்டு.

மக்களுடைய வாழ்வின் நெருக்கடிகளிலோ. அவர்களுடைய விடுதலைப் போராட்டத்திலோ நேரடிப் பங்கை வகிக்காமல் தமது வாழ்வையும், அந்தஸ்தையும், பேணி தம்மை வளர்த்துக்கொள்ளும் இவர்கள் அந்த மக்களுக்கு உதவ ஒருபோதும் தயாராக இருப்பதில்லை.

அதேவேளை அந்த மக்களை ஆண்டு நடத்த முயற்சிக்கின்றார்கள். தங்களுடைய ஆதிக்க சிந்தனையை பாதிக்கப்பட்ட மக்களின் மீது பிரயோகிக்க முனைகிறார்கள். இதற்கு அவர்கள் கூறுகின்ற நியாயம் வேடிக்கையானது.

படித்த, சிந்திக்கத்தெரிந்த புத்திஜீவிகளாகிய தாமே சமூகத்தை வழிநடத்துவதற்குப் பொறுப்பானவர்கள், அந்தக் கடமை தமக்கே உண்டு. ஆகவே ஒட்டுமொத்த சமூகத்திற்காக தாமே சிந்திக்கின்றோம் என்று தம்மைத்தாமே பிரகடனம் செய்துகொள்வார்கள்.

இவர்கள் கடுந்தேசியவாதம் பேசுவார்கள். ஆனால், அவர்கள் பேசுகின்ற தேசியத்திற்காக ஒரு பொழுதையேனும் தங்கள் வாழ்வில் அர்ப்பணிக்கத் தயாராவதில்லை. தங்கள் குடும்பத்தையோ தங்களின் பிள்ளைகளையோ தாம் வலியுறுத்துகின்ற தேசியத்திற்காக உழைக்க இவர்கள் அனுமதிப்பதுமில்லை.

ஆகவே நடைமுறையில் இவர்கள் போலித் தேசியவாதிகளாகவும். சொந்த இனத்தையே ஏமாற்றுவோராகவும், நடிப்புச் சுதேசிகளாகவும், ஆதிக்கவாதிகளாகவும் உள்ளனர்.

உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாறாகவும், முதலுதவி தேவைப்படும் மக்களுக்கு எதிராகவும் செயற்படுகிறார்கள்.

இல்லையென்றால், தேர்தற்காலத்தில் மக்களை தமிழ்த்தேசியத்திற்காக அணிதிரளுமாறு கோரிக்கை விடும் புத்திஜீவிகளும் சமூக சிற்பிகளும் பல்கலைக்கழக சமூகத்தினரும் மதகுருமாரும் தற்போது வடபகுதியில் நடக்கும் அரசியற்கூத்துக்களை கண்டும் காணாமலும் கள்ளத்தனமாக இருப்பது ஏன்?

மக்களுடைய வாக்குகளை தந்திரமாக கொள்ளையடித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் காலடியில் குவித்த இவர்கள் அந்த மக்களுடைய நம்பிக்கைக்கு மாறாக கூட்டமைப்பின் உள்ளே நடக்கும் குத்துவெட்டு களையிட்டு பேசாது இருப்பது ஏன்?

மட்டுமல்ல, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழுள்ள பிரதேச சபைகள், நகரசபைகள் போன்றவை சீரழிந்த நிலையில் உள்ளதைக் கண்டும் மௌனம் காப்பது ஏன்?

முதலுதவி தேவைப்படும் நிலையிலிருக்கும் பாதிக்கப்பட்ட சமூகத்தின் தேவைகளையும், எதிர்காலத்தையும் சிந்திக்காமல் இனவாத ரீதியில் ஆதிக்க சக்திகளை மேலோங்கச் செய்யும் அகங்காரம் ஒருபோதும் நீதியானதுமல்ல. ஜனநாயகத்தை அடித்தளமாக கொண்டதுமல்ல. அறிவுஜீவித்தனமானதுமல்ல.

எனவேதான் தமிழ் மக்கள் ஒற்றுமையாக எத்தனையோ தடவைகள் தமிழ் அடையாளத்திற்காக வாக்களித்த போதும் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை.

இந்தத் தடவையும் தமிழ் மக்கள் பலமடையவில்லை. பதிலாக தமிழ்த் தலைவர்களே பலம் பெற்றிருக்கிறார்கள்.

வெற்றி பெற்றுக்கொண்டவர்கள், மக்கள் எதிர்பார்ப்புகளுக்கு முரணாக தங்களுக்குள் பிடுங்குப்பட்டுக் கோமாளிக்கூத்துக்கள் ஆடிக்கொண்டிருக்கையில், இவர்களை வெல்லவைத்த புத்திஜீவிச் சமூகத்தினர் எங்கே ஓடி ஒளித்துவிட்டார்கள்?

ஒவ்வொரு தேர்தலின் பிறகும் மக்களை ஏமாற்றிக்கொண்டிருப்பவர்கள் அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல, இந்த புத்திஜீவிச் சமூகத்தினர் என்று சொல்லிக்கொள்ளும் வெறும் பேச்சுச் சுயநலவாதிகளும்தான்!

நாம் நன்மையடைய மற்றவர்களை எதிர்பார்க்கும் வரை நாம் அடிமைகளே. - சுவாமி விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## அவர்களை அவர்களாக மதித்தல்!

ஏனைய சமூகத்தவர்களை நம்மைவிட மட்டமானவர்களாக நினைப்பதும், இழித்து ஒதுக்குதலும் நமது மரபாயிருந்துவரும் பழக்கங்களிலொன்றாக இன்றும் தொடர்கிறது. வடக்கத்தியான், மோட்டுச் சீனா, தொப்பி பிரட்டி, காப்பிலி, பறங்கி, பாம்புதின்னி என்பதெல்லாம் ஏனைய சமூகத்தைச் சேர்ந்தவர்களை விளிப்பதற்காக நாம் தமிழில் வைத்திருக்கும் வார்த்தைகள்.

இதிலுள்ள பாசிஸ மனோநிலையை இன்னும் உணராதவர்களாகவே நம்மில் பலர் இன்றும் இதே பாணியில் பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் நினைத்துக்கொண்டும் இருக்கிறார்கள். அதையே தமிழ்ப் பெருமையாகவும் எண்ணிக்கொள்ளும் கடந்தகாலத்தவர்களாக மாறாமனிதர்களாய் இன்னுமிருக்கிறோம்.

இன்னும் ஒருபடி மேலே போய், அந்த சமூகங்கள் நாம் நினைத்த மாதிரி நடக்கவில்லை என்றால், மிரட்டுவதும் சாபமிடுவதும் குதிப்பதுமாக மிகக் கேலிக்கிடமாகவும் நடந்துகொள்கிறோம். நம்மை நாமே உயர்வாய் நினைத்துக்கொண்டு பிறரை விலக்குதல் மிரட்டுதல் ஒழித்துவிடுதல் என்ற எண்ணப்பாங்கிலேயே இன்னமும் நமது ஊடகங்களும் கட்டுரையாளர்களும் இலக்கியவாணர்களும் செயற்பட்டு வருவதை கூர்ந்து அவதானித்தால் யாரும் புரிந்துகொண்டு விடலாம்.

சிங்கள இனவாதிகளை விட தமிழ் இனவாதிகள் ஆபத்தானவர்களாகவும் மோசமானவர்களாகவும் இருக்கிறார்கள் என்று முஸ்லிம் சமூகத்தவர் குற்றம் சாட்டிவருவது இதனால்தான். அடிப்படையில் தமிழ் ஆதிக்கக் குணம் என்பது, இந்தத்தீவில் அதிகாரங்களை அதிகளவில் கொண்டிருக்கக்கூடிய பெரும்பான்மைச் சமூகத்தைவிட ஒப்பீட்டளவில் மிகையானது என்பதை உணர்ந்தவர்களாக முஸ்லிம்கள் செயற்பட்டதை 90களுக்குப் பிறகு நாம் கண்டோம்.

உண்மையில் அதை இனியேனும் மாற்றிவிட வேண்டும் என்று அக்கறையெடுத்துச் செயற்படுவதற்கான மனப்பாங்கு இன்னும் நம்மிடம் உருவாகவில்லை. மற்றவர்களை விலக்கியே சிந்தித்தல் அல்லது அவர்கள் நமக்குச் சார்பாக நடந்துகொண்டால்தான் அங்கீகரிப்போம் என்று நம்மைத் தனியாக்கிப் பார்ப்பதால்தான் பிற சமூகங்களுடனான இணக்கமான உரையாடல் நமக்கு இன்னும் சாத்தியமாகாமல் இருக்கிறது.

வடக்கு கிழக்குத் தமிழ்த் தலைமைகளோடு சேர்ந்து ஒற்றுமையைக் காண்பிப்பதைவிட சிங்களக் கட்சிகளோடு இணைவதையே முஸ்லிம் கட்சிகளும் மலையகத் தமிழ்க் கட்சிகளும் தேர்ந்து வருவது இதனால்தான். இதை உணர்ந்துகொள்ளக் கூட முடியாத மமதை மிக்கவர்களாகவே நம்மில் பலர் பேசியும் எழுதியும் வருகிறோம்.

நமக்குச் சார்பாக பேசுகின்ற முஸ்லிம்களையே உண்மையான முஸ்லிம்கள் என்கிறோம். நமக்குச் சார்பாகப் பேசுகின்ற சிங்களவர்களையே சரியாகச் சிந்திப்பவர்கள் என்று வரையறுக்கிறோம். நமக்குச் சார்பாக நடந்துகொள்ளும் வெளிநாடுகளையே சர்வதேசத்தினர் என்று அங்கீகரித்துச் சொல்லிக் கொள்கிறோம்.

உண்மையில் அவர்களது தரப்பைப் பரிசீலிக்க நாம் எண்ணுவதில்லை; விரும்புவதில்லை. அப்படியே, அவர்களும் தங்களுக்குச் சார்பாகப் பேசாத தமிழர்கள் யாரையும் தாங்கள் தமிழர்களாக அங்கீகரிக்கப் போவதில்லை என்று சொல்லி விடுவார்களானால், பிறர் பார்வையில் நம்மில் யாரும் தமிழர்களாகவே இருக்க மாட்டோம் என்பதுதான் உண்மைநிலையாக இருக்கும்.

நம்மில் பலர் இனவாதத்தன்மை மாறாமலேயே சிந்திக்கிறோம்; எழுதுகிறோம். அதுபற்றிய புரிதலும் குற்றவுணர்வும் நம்மிடமில்லை. எப்போது நாகரிகமடைந்த மனித சமுதாயங்களில் ஒன்று என நாமும் ஆகப்போகிறோம்?

எந்த ஒன்றின் மீதும் நாம் வைக்கும் பற்று மிக மிக தற்காலிகமானது. மதம், தேசம், இனம் போன்றவையெல்லாம் கற்பிதங்களே. நாம் இந்த மதத்தில் இந்த தேசத்தில் இந்த மொழியைப் பேசுகிறவர்களாக வந்து பிறந்ததெல்லாம் தற்செயலானதுதான். இந்தப் புரிதல் இருந்தால் யாரையும் எதையும் வெறுக்கவோ வன்மம் கொள்ளவோ தோன்றாது.

- *ஆசிரியர்*

# ஐ.தே.க. தலைவர் பதவியிலிருந்து வெளியேற வேண்டும் ரணில்

## ஐக்கிய பிக்குகள் முன்னணி வலியுறுத்து

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் ஐக்கிய பிக்குகள் முன்னணி, சஜித் பிரேமதாஸ மற்றும் கரு ஜயசூரிய ஆகியோருக்கு இடையில் நேற்று முற்பகல் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய பிக்குகள் முன்னணி இலங்கை ராமாஞ்ஞ பீடத்தின் ஆனந்த தேரர் அதன் தேசிய அமைப்பாளர் உலப்பனை சுமங்கல தேரர் உள்ளிட்ட 12 தேரர்கள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து ரணில் விக்ரமசிங்க வெளியேற வேண்டும் என்ற முதலாவது யோசனை முன்வைக்கப்பட்டது.

அதனை அடுத்து ஐக்கிய பிக்குகள் முன்னணி ஐக்கிய தேசியக் கட்சிக்கு பரிந்துரை செய்துள்ள யோசனைகளை செயற்படுத்த வேண்டும் என தேரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் ஐக்கிய பிக்குகள் முன்னணியின் தேரர்களுக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதாக உலப்பனை சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் இருந்து ரணில் விக்ரமசிங்க வெளியேற வேண்டும் என தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் ஐக்கிய பிக்குகள் முன்னணி, கட்சியின் வெற்றிக்காக பிக்குகள் முன்னணி தற்போது முன்வைத்துள்ள யோசனைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளதாக தேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# ஈழக் கனவை நனவாக்க முன்னேறுகிறது கூட்டமைப்பு

## என்கிறார் முஸம்மில்

(கொழும்பு)

புதிய ஈழத் திட்டம் படிமுறை படிமுறையாக முன்னோக்கிச் செல்வதாக தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லவில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தனது கண்டுபிடிப்பு பற்றி கருத்து வெளியிட்டார்.

பிரிவினைவாத அதிகாரத்துடன் வடக்கு, ஆட்சியை கைப்பற்றிய கூட்டமைப்பு ஈழக் கனவை நனவாக்கிக் கொள்ளவென செயற்படுகிறது. அதன் இரண்டாம் கட்ட நடவடிக்கை தற்போது பிரிந்து இருக்கும் வடக்கு, கிழக்கை ஒன்றிணைப்பதாகும். இதனை வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் அண்மையில் கூறியிருந்தார்.

உள்நாட்டில் சுயாட்சி வழங்கப்படாவிட்டால் சர்வதேச ஆதரவுடன் அதனைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

எனவே கூட்டமைப்பினர் தமது இலக்கை நோக்கி படிப்படியாக முன்னேறிச் செல்கின்றனர். இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.

# எச்.ஐ.வி.ஐ கண்டறிய தொழில்நுட்பக் குழு

நாட்டில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றமை தொடர்பில் கண்டறிவதற்காக விசேட தொழில்நுட்ப குழுவொன்றை நியமிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக்க தலைமையில் கூடிய கூட்டத்தில், இந்தக் குழு நியமிக்கப்பட்டதாக தேசிய பாலியல் நோய்கள் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் சிசிர லியனகே குறிப்பிட்டுள்ளார்.

எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதற்கான காரணங்களை கண்டறிதல் மற்றும் அதனை இல்லாமற் செய்வதற்குத் தேவையான பரிந்துரைகளை முன்வைத்தல் என்பன இந்தக் குழுவின் பொறுப்பென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் பாலியல் தொடர்புகள் மூலமே எச்.ஐ.வி. தொற்று அதிகளவில் பரவுகின்றமை கண்டறியப்பட்டுள்ளதாகவும் டாக்டர் சிசிர லியனகே கூறியுள்ளார். நாட்டில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்களில் 50 வீதமானவர்கள் வெளிநாடுகளுக்கு தொழில் நிமிர்த்தம் சென்றவர்கள் எனவும், 9 வீதம் தாயில் இருந்து குழந்தைக்கு பரவியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, அவ்வாறானவர்களுக்கு சிகிச்சைகளை வழங்குவது தொடர்பிலும் இந்தக் குழு கவனம் செலுத்தவுள்ளதாக தேசிய பாலியல் நோய்கள் பிரிவின் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சுயதொழில் முயற்சிக்காக காளான் வளர்ப்புப் பயிற்சி

(வவுனியா)

வவுனியா விவசாய திணைக்கள உத்தியோகத்தர்களினால் வவுனியா மாவட்ட சர்வோதைய நிலையத்தில் நேற்றுக் காளான் வளர்ப்பு பயிற்சி இடம்பெற்றது.

சர்வோதய சிரமதான சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் மற்றும் தேசோதய சபை அங்கத்தவர்களுக்கும் சுயதொழில் ஊக்குவிப்பை ஏற்படுத்திக் காளான் வளர்ப்பை கிராம மட்டத்தில் அதிகரிப்பதற்காக இப்பயிற்சி நெறி ஒழுங்கு செய்யப்பட்டதாக சர்வோதய நிலையத்தில் வவுனியா மாவட்ட இணைப்பாளர் எஸ்.உதயகுமாரன் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறியினை விவசாயத்திணைக்கள , பாடவிதான உத்தியோகத்தர் எஸ்.யாமினி, விவசாய போதனாசிரியர் கே. பிரிந்தா ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு காளான் வளர்ப்பு முறை தொடர்பான செய்முறை விளக்கங்களை வழங்கினர்.

# நிர்க்கதியான மீனவர்களை காப்பாற்றியது கடற்படை

தெற்கு கடற்பரப்பில் 18 நாட்களாக நிர்க்கதிக்குள்ளாகியிருந்த 6 மீனவர்கள் கடற்படையினரின் சமுத்திர கப்பலால் காப்பாற்றப்பட்டு தங்காலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

தங்காலையில் இருந்து 84 கடல்மைல் தொலைவில் இந்த மீனவர்கள் பயணித்த படகு தொழில்நுட்ப கோளாறினால் செயலிழந்ததால் அவர்கள் நிர்க்கதிக்குள்ளானார்கள்.

கடற்றொழில் திணைக்களம் வழங்கிய தகவலுக்கு அமைய இந்த மீனவர்கள் காப்பாற்றப்பட்டதாக கடற்படை குறிப்பிட்டுள்ளது.

# 40 புகலிடதாரிகளை திருப்பி அனுப்பியது ஆஸி


அவுஸ்ரேலியாவிற்குச் சட்டவிரோதமாகச் சென்று, அங்கு புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட 40 பேர் நேற்றுமுன்தினம் இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்களில் 12 பெண்களும், 8 சிறார்களும் அடங்குவதாக பொலிஸ் பதில் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் கடந்த மாதம் 7 ஆம் திகதி படகு மூலம் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவிற்குச் சென்றுள்ளதாக பொலிஸ பதில் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

**அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு பொருளாதார நிபுணரான (அவரது வார்த்தைகளில் பொருளாதார அடியாள்) ஜோன் பெர்க்கின்ஸ்ஸ் (John Perkins) எழுதிய 'ஒரு பொருளாதார அடியாளின் வாக்குமூலம்' (Confession of an Economic Hit Man) என்ற அவரது புத்தகத்திற்கு அவர் எழுதிய முன்னுரையின் ஒரு பகுதி இது.இந்நூலில் தான் வேலை செய்த நிறுவனமும், தானும் எப்படி அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்களும், அமெரிக்க அரசும் மூன்றாம் உலக நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தவும், சுரண்டவும் செய்வதற்கு உதவினோம் என்பதைத் தனது சொந்த அனுபவங்கள் மூலம் விளக்கியுள்ளார்.**



# ஒரு பொருளாதார அடியாளின் வாக்குமூலம்

"பொருளாதார அடியாட்கள் என்று அழைக்கப்படுபவர்கள் பல்லாயிரம் கோடி டொலர் மதிப்புள்ள மோசடிகளில் ஈடுபட்டு வருபவர்கள். உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டையும் கொள்ளையிட்டு வருபவர்கள். இந்தக் கொள்ளையடிக்கும் பணிக்காக அவர்களுக்கு பெரும்பணம் ஊதியமாக அளிக்கப்பட்டு வருகிறது. இவர்கள் பொருளாதார நிபுணர்கள். உலக வங்கி, சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க ஐக்கிய நாட்டு நிறுவனம் (US Agency for International Development – USAID) மற்றும் இவற்றைப் போன்ற பன்னாட்டு நிதி "உதவி" அமைப்புகளில் குவிந்திருக்கும் பணத்தை மாபெரும் பன்னாட்டு நிறுவனங்களின் பணப்பெட்டிகளுக்கும், இப்பூமியின் இயற்கை வளங்களைத் தங்கள் பிடியில் வைத்திருக்கும் சில பணம் படைத்த குடும்பங்களின் சட்டைப்பைகளுக்கும் கொண்டு சேர்ப்பதுதான் இவர்களின் வேலை. மோசடியான நிதி அறிக்கைகள், தேர்தல் முறைகேடுகள், லஞ்சம், மிரட்டிப் பணம் பறிப்பது, பாலியல், கொலைமுதலியனஇவர்களுடைய கருவிகள் ஆகும். பேரரசு எவ்வளவு பழமையானதோ அதேயளவுக்கு இவர்களது தந்திரங்களும் பழமையானவைதான். ஆனால் உலகமயமாக்கல் முழுவீச்சில் நடைபெற்றுவரும் இன்றைய 'உலகில் பொருளாதார அடியாட்களின் தந்திரங்கள் புதிய, பயங்கரமான பரிமாணங்களை எட்டியுள்ளன... ஒரு பொருளாதார அடியாளின் மனச்சாட்சி என்ற பெயரில்-1982இல்-நான் எழுதத் திட்டமிட்டிருந்த நூல் இப்படித்தான் தொடங்கியது.

இந்த நூலை ஈக்குவடோரின் குடியரசுத் தலைவரான ஜெய்மே ரோல்டோஸுக்கும், பனாமாவின் அதிபரான ஓமர் டோரிஜேஸுக்கும் அர்ப்பணித்திருந்தேன். இவர்கள் இருவரும் எனது வாடிக்கையாளர்களாக இருந்தவர்கள். என்னால் மிகவும் மதிக்கப்பட்டவர்கள். ஒத்த கருத்துக் கொண்டவர்கள் என்று கருதப்பட்டவர்கள். இந்த இருவரும் அப்போதுதான் பயங்கரமான விமான விபத்துகளில் உயிரிழந்திருந்தனர். அந்த விபத்துகள் தற்செயலானவை அல்ல. உலகப் பேரரசைக் குறிக்கோளாகக் கொண்டிருந்த தொழில் நிறுவனங்கள், வங்கித் தலைமைகள் மற்றும் அரசாங்கங்களுக்கு இடையில் நிலவிவந்த கூட்டணியை எதிர்த்து நின்றதன் காரணமாக அவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களை வழிக்குக் கொண்டு வருவதில் பொருளாதார அடியாட்களான நாங்கள் தோல்வியடைந்ததால், சி.ஐ.ஏவால் இயக்கப்பட்ட இன்னொரு வகையான அடியாட்களான "குள்ளநரிகள்" இப்படுகொலைகளை நிகழ்த்தினர். நான் இப்புத்தகத்தை எழுதுவதை நிறுத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்டேன். அடுத்த இருபது ஆண்டுகளில் மேலும் நான்கு முறை இதை மீண்டும் தொடங்க முயன்றேன்.

1989இல் பனாமா நாட்டின் மீது அமெரிக்கா நடத்திய ஆக்கிரமிப்பு, முதல் வளைகுடாப் போர், சோமாலியா, ஒசாமா பின்லேடனின் எழுச்சி போன்ற முக்கியமான நிகழ்ச்சிகள் நடந்தபோதெல்லாம் புத்தகத்தைத் திரும்பவும் தொடங்கத்தீர்மானிப்பேன்.ஆனால் ஒவ்வொரு முறையும் மிரட்டல்கள் அல்லது கையூட்டுகள் என்னை இடையிலேயே கைவிடும்படி செய்தன.

இந்தக் கதை சொல்லப்பட்டே ஆக வேண்டும். நம் காலத்தில் உள்ள நெருக்கடிகள் கடுமையானவைதான். ஆனால் நமக்கு முன் ஏராளமான வாய்ப்புகளும் உள்ளன. இந்தக் குறிப்பிட்ட பொருளாதார அடியாளின் கதை, நாம் ஏன் இப்போது கடக்கவே முடியாததாகத் தோன்றும் நெருக்கடிகளைச் சந்திக்கிறோம், இந்த நிலை எப்படி ஏற்பட்டது என்பதைப் பற்றியதாகும். நமது கடந்தகாலத் தவறுகள் புரிந்து கொள்ளப்பட்டால் மட்டுமே எதிர்காலத்தில் கிடைக்கும் வாய்ப்புகளை அனுகூலமாக்கிக் கொள்ள முடியும் என்பதாலேயே இந்தக் கதை சொல்லப்பட்டாக வேண்டும். செப்ரெம்பர் 11 தாக்குதலின் காரணமாக, இரண்டாவது ஈராக் போரின் காரணமாக, 2001 செப்ரெம்பர் 11 இல் தீவிரவாதிகளின் கரங்களில் உயிரிழந்த மூவாயிரம் பேர்களோடு, அதே நாளில் உலகெங்கும் பட்டினியாலும் அது தொடர்பான காரணங்களாலும் இன்னொரு இருபத்தி நான்காயிரம் பேர் உயிரிழந்துள்ளார்கள் என்பதன் காரணமாக இந்தக் கதை சொல்லப்பட்டே ஆக வேண்டும். உயிர்வாழத் தேவையான உணவைப் பெற முடியாமல் ஒவ்வொரு நாளும் உலகம் முழுவதும் இருபத்தி நான்காயிரம் பேர் உயிரிழந்து வருகிறார்கள். எல்லாவற்றையும் விட முக்கியமாக இவையனைத்தையும் மாற்றும் வல்லமையையும், செல்வத்தையும் இன்று ஒரு நாடு பெற்றுள்ளது என்பதால், அந்த நாடு நான் பிறந்த, பொருளாதார அடியாளாகச் சேவை புரிந்த அமெரிக்காதான் என்பதால் இந்தக் கதை சொல்லப்பட்டே ஆக வேண்டும்.

அச்சுறுத்தல்களையும், கையூட்டுகளையும் இறுதியாக என்னைக் கடந்து வரும்படி செய்தது எது?

இதற்கு ஒரு சுருக்கமான பதிலைச் சொல்லவேண்டுமானால், பட்டம் பெற்றபின் உலகைத் தனியே எதிர்கொள்ளச் சென்ற என் ஒரே மகள் ஜெஸிகாவைத்தான் குறிப்பிட வேண்டும். நான் சமீபத்தில் இந்தப் புத்தகத்தை வெளியிடுவது பற்றிச் சிந்தித்து வருகிறேன் என்பதை அவளிடம் சொல்லி என் அச்சத்தைப் பகிர்ந்து கொண்டபோது அவள் சொன்னாள், "கவலைப்பட வேண்டாம் அப்பா. அவர்கள் உனக்கு முடிவு கட்டினால், நீ விட்ட இடத்திலிருந்து நான் தொடர்வேன். உனக்கு ஒருநாள் நான் பெற்றுத் தரப்போகும் பேரக்குழந்தைகளுக்காக இதை நாம் செய்தே ஆக வேண்டும்". இதுதான் அந்தச் சுருக்கமான பதில்.

இது ஒரு உண்மைக் கதை. இதன் ஒவ்வொரு நிமிடத்தையும் நான் வாழ்ந்திருக்கிறேன். இதில் இடம் பெற்றுள்ள இடங்கள், மக்கள், உரையாடல்கள், உணர்வுகள் அனைத்துமே என் வாழ்க்கையின் பகுதிகள்தான்.

உண்மையில் எங்களை நாங்களே பொருளாதார அடியாட்கள் என்று அழைத்துக் கொள்கிறோமா என்று என்னுடைய பதிப்பாளர் கேட்டார். ஆமாம் என்று நான் உறுதியளித்தேன். பெரும்பாலும் அதன் முதலெழுத்துகளை (EHMS) கொண்டு மட்டுமே எங்களை நாங்கள் அழைத்துக் கொண்டோம் என்ற போதிலும், உண்மையிலேயே 1971இல் எனது குருவான கிளேடினுடன் வேலை செய்யத் தொடங்கிய முதல் நாளிலேயே அவள், "எனக்கு அளிக்கப்பட்ட வேலை உன்னை ஒரு பொருளாதார அடியாளாக உருவாக்குவதுதான். உன் மனைவி உட்பட இது யாருக்கும் தெரியக்கூடாது" என்று அறிவித்திருந்தாள். நான் செய்ய வேண்டியது என்ன என்பதை விவரித்த போது கிளேடின் ஒளிவுமறைவு எதையும் வைத்துக் கொள்ளவில்லை.

"அமெரிக்க வணிக நலன்களை முன்னிறுத்தும் விரிந்த வலைப்பின்னலின் பகுதியாக மாறுவதற்கு உலகத் தலைவர்களைத் தூண்டுவது, முதலில் இந்தத் தலைவர்கள் மீள முடியாத கடன் வலையில் சிக்கிக் கொள்வார்கள். அது அவர்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்தும் பின்பு நமது அரசியல், பொருளாதார, இராணுவத் தேவைகளுக்காக அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கு மாற்றாக அவர்கள் தங்கள் மக்களுக்குத் தொழில் பூங்காக்கள், மின்சக்தி நிலையங்கள், விமான நிலையங்கள் அமைத்துத் தருவதன் மூலம் தங்கள் நிலையைப் பலப்படுத்திக் கொள்வார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொறியியல், கட்டுமான நிறுவனங்களின் உரிமையாளர்கள் கொள்ளை இலாபம் ஈட்டுவார்கள்" என்று அவள் சொன்னாள்.

இந்த அமைப்பு மூர்க்க வெறிகொண்டு ஓடியதன் விளைவுகளை இன்று நாம் பார்க்கிறோம். எண்ணெய் நிறுவனங்கள் வேண்டுமென்றே விசப் பொருட்களை (toxins) மழைக் காடுகளினூடே ஓடும் ஆறுகளுக்குள் கொட்டுகின்றன. அவை திட்டமிட்டே விலங்குகளையும், தாவரங்களையும் அழிப்பதோடு, பழம் பண்பாடுகளைப் பின்பற்றும் மக்களையும் கூட்டங் கூட்டமாகக் கொன்று குவிக்கின்றன. மருந்துகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கான ஆபிரிக்கர்களுக்கு உயிர்காக்கும் மருந்துகளை அளிக்க மறுக்கின்றன.

அமெரிக்கா ஈராக்கில் போர் நடத்த 87 பில்லியன் டொலர் செலவிடுகிறது. ஆனால் உலக மக்கள் அனைவருக்கும் சுத்தமான நீரும், போதுமான உணவும் மற்ற அடிப்படை வசதிகளும், கல்வியும் அளிக்க இதில் பாதித் தொகையே தேவைப்படும் என்று ஐ.நா. சபை மதிப்பிட்டுள்ளது.


இப்படியிருக்கும்போது தீவிரவாதிகள் ஏன் நம்மை தாக்குகிறார்கள் என்று நாம் அப்பாவித்தனமாக ஆச்சரியப்படுகிறோம்! திட்டமிட்ட சதியே நமது தற்போதைய பிரச்சினைகளுக்குக் காரணம் என்று ஒருசிலர் சொல்கிறார்கள். அது அவ்வளவு எளிமையானதாக இருக்க வேண்டும் என்றுதான் நானும் விரும்புகிறேன். அப்படியிருந்துவிட்டால் இந்தச் சதியாலோசனையில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் வளைத்துப் பிடிக்கப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட்டுவிட்டால் பிரச்சினை முடிந்துவிடும். ஆனால் இந்த அமைப்பு ஒரு சதியை விடப் பல மடங்கு அபாயகரமான ஒன்றால் உந்தித் தள்ளப்படுகிறது. சதியாலோசனையில் ஈடுபட்டுள்ள ஒரு குழுவால் அல்ல, வேத வாக்கியத்துக்குச் சமமாக மதிக்கப்படும் ஒரு கோட்பாட்டாலேயே இந்த அமைப்பு வழி நடத்தப்படுகிறது. எல்லாப் பொருளாதார வளர்ச்சியும் மனிதகுலத்திற்கு நன்மையே செய்கிறது. வளர்ச்சி அதிகரிக்க, அதிகரிக்க நலன்களும் மேலும் பரவலாக்கப்படும் என்பதுதான் அந்தக் கோட்பாடு. அதற்கு ஒரு பின்விளைவும் உண்டு. பொருளாதார வளர்ச்சி என்ற நெருப்பைக் கிளறி விடுவதில் முன்னணியில் உள்ளவர்கள் மேன்மைப்படுத்தப்படவும் பரிசளிக்கப்படவும் வேண்டும். அதே நேரத்தில் பின்னணியில் உள்ளவர்கள் சுரண்டலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் அது.

இந்தக் கோட்பாடு தவறானது. பல நாடுகளில் பொருளாதார வளர்ச்சி என்பது மக்கள் தொகையில் ஒரு சிறிய பகுதியினருக்கே பலனளிப்பதையும், பெரும் பகுதியினருக்கு அது அழிவையும் வறுமையையுமே அளிப்பதையும் நாம் அறிவோம். இந்த அமைப்பை நடத்திச் செல்லும் தலைவர்களுக்குச் சிறப்பு அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தால் இந்த அநீதி நியாயப்படுத்தப்படுகிறது. இந்தக் கருத்தே நமது பிரச்சினைகள் பலவற்றுக்கு அடிப்படைக் காரணமாகவும், சதி பற்றிய கருத்துகள் பரவுவதற்கு ஊற்றுக் கண்ணாகவும் இருக்கிறது. **(18ஆம் பக்கம் பார்க்க)**

(நன்றி : வானவில் 32)

# அரசுடன் இணையும் உறுப்பினர்களால் மக்களுக்கு எவ்வித பலனும் இல்லை

## என்கிறார் ரணதுங்க



(கொழும்பு)

எதிர்க்கட்சியின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டாலும் நாட்டு மக்களுக்கு எவ்வித பயனும் கிட்டப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஏனெனில் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளும் எதிர்க் கட்சியினருக்கு தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இருக்காது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்களின் அனுபவங்கள் பயன்படுத்தப்படுவதில்லை.

மாறாக அவர்கள் தலையாட்டி பொம்மைகளாக செயற்படுகின்றனர். அரசியல்வாதிகள் மேற்கொள்ளும் ஊழல் மோசடிகள் குறித்த ஆவணங்களைக் கைபபற்றி அவர்களை அச்சுறுத்தி அரசாங்கம் அரசியல் காய் நகர்த்தலில் ஈடுபடுகின்றது.

அரசாங்கம் என்ன பிழை செய்தாலும் ஆட்சியாளர்களுக்கு கட்சிக்குள் எதிர்ப்பு கிளம்பாது. சர்வதேச சமூகத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் எதிராக கருத்துக்களை வெளியிடவே ஆட்சியாளர்கள் அமைச்சர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

இந்த ஆட்சியாளர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் பின்னர் நாட்டு மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்க நேரிட்டுள்ளது என அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். பெலேபொல பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# சுற்றுலாப் பயணிகளின் வருகை செப்ரெம்பரில் அதிகரிப்பு



(கொழும்பு)

இலங்கைகக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த செபரெம்பர் மாதம் 26.2 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இதன்பிரகாரம் 89,761 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் முதல் ஒன்பது மாதங்களில் நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையிலும் 15.5 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 693,772 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்தியாவில் இருந்து வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை 30 வீதத்தால் அதிகரித்துள்ளதுடன், தெற்காசிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் வருகை 31 வீதத்தால் உயர்வடைந்துள்ளது.

மாலைதீவுகளில் இருந்து வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 34.5 வீதத்தாலும் அதிகரித்துள்ளது.

# தாமரை பறிக்கச் சென்ற இரு மாணவர்கள் உயிரிழப்பு

(கொழும்பு)

தாமரை மலர் பறிப்பதற்காக நேற்றுமுன்தினம் பிற்பகல் 4 மணியளவில் மகாஓயாவிற்குச் சென்ற 13 வயதான சிறார்களே இவ்வாறு நீரில் மூழ்கியுள்ளதாக பொலிஸ் பதில் ஊடகப் பேசசாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன கூறியுள்ளார்.

இதேவேளை, மட்டக்களப்பு - திருப்பெருந்துறை பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் சிறுவனொருவன் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த சிறுவன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருப்பெருந்துறை பகுதியிலுள்ள கிணறொன்றில் தன் உறவினர் ஒருவருடன் குளிக்கச் சென்ற சந்தர்ப்பத்தில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த வெடிப்புச் சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# விசா இன்றி தங்கியிருந்த 49 வெளிநாட்டவர்கள் கைது

நுரைச்சோலையை அண்டிய பிரதேசத்தில் விசா இன்றி தங்கியிருந்த 49 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 46 பேர் இந்தியர்கள் எனவும், மூன்று பேர் சீனரகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. விசா காலாவதியாதல், வீசா இன்றி நாட்டுக்குள் பிரவேசித்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளினால் குறித்த வெளிநாட்டுப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கப்பலிலிருந்து நுரைச்சோலைக்கு அனல் கரி கொண்டு செலலும் படகுகளில் பணியாற்றிய 24 இந்தியர்களும் உள்ளடங்குகின்றனர். கைது செய்யப்பட்டவர்களில பலர் மிக நீண்ட காலமாக இலங்கையில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்தவர்கள் என்பது குறிபபிடத்தக்கது. சிலர் சுற்றுலா விசாக்களைப பயன்படுத்தி நாட்டுக்குள் பிரவேசித்து நாட்டில் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தில் 2,57,958 வீடுகளில் சோதனை

(கொழும்பு)

தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தில், 337 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட 2,57,958 வீடுகள் சோதனைக் குட்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 07 ஆம் திகதி முதல் கடந்த ஞாயிறு வரை முன்னெடுக்கப்பட்ட தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தில், நுளம்புகள் பெருகும் வகையிலான 46,277 இடங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்போது, டெங்கு நுளம்புக் குடம்பிகள் காணப்படும் 4,395 இடங்கள் இனங்காணப்பட்டதுடன், ஒரு வாரத்திற்குள் அந்த இடங்களை சுத்தப்படுந்துமாறு 6,086 பேருக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டதாக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த 892 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுளளதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# அரசுக்கு உடந்தையாக செயற்படுகிறது தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

## குற்றம் சுமத்துகிறார் அஞ்சன



(கொழும்பு)

தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அனைத்து தனியார் பேருந்து உரிமையாளர்களையும் சிக்கலில் ஆழ்த்தியுள்ளதாக குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

அகில இலங்கை தனியார் பேருந்து சங்கங்களின் சம்மேளத்தின் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்த குற்றச்சாட்டை முன் வைத்தார்.

எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் நடை முறைப்படுத்தும் வகையில் அமைச்சரவையால் அனுமதியளிக்கப்பட்ட 7 சத வீத கட்டண அதிகரிப்பை ஏற்றுக் கொண்டு அரசாங்கத்திற்கு உடந்தையாக செயற்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதனால் அனைத்து தனியார் பேருந்து உரிமையாளர்களும் நெருக்கடியை எதிர்கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த குற்றச்சாட்டு தொடர்பில் கருத்து தெரிவித்த தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன, இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் மக்களுக்காக மாத்திரமே பக்கச்சார்பாக செயற்படுவதாக தெரிவித்தார்.

தாம் எந்தவொரு அமைச்சருக்கும் உடந்தையாக செயற்பட்டு அடிபணியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பிரச்சினைக்கு இன்னும் தீர்வு இல்லை ஹலாலுக்கு எதிராக மீண்டும் போராட்டம்

## பொதுபலசேனா அறிவிப்பு

(கொழும்பு)

ஹலால் சான்றிதழுக்கு எதிராக மீண்டும் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக பொதுபலசேனா அமைப்பு அறிவித்துள்ளது. ஹலால் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாக அறிவிக்கப்பட்டபோதிலும் இதுவரையில் தீர்வு வழங்கப்படவில்லை.

எனவே ஹலால் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் 22 ஆம் திகதி மீண்டும் போராட்டம் நடத்த இருப்பதாக பொதுபலசேனா அமைப்பு அறிவித்துள்ளது.

கிருலப்பனையில் அமைந்துள்ள பொதுபலசேனா அமைப்பின் தலைமைக் காரியாலயத்தின் எதிரிலிருந்து கண்டி சிறிதலாதா மாளிகை வரையில் பாத யாத்திரையொன்று நடத்தப்படவுள்ளது.

தலதா மாளிகையில் அதிஸ்டான பூஜையொன்று நடத்தப்படவுள்ளது. ஹலால் சான்றிதழ் குறித்த பிரச்சினைக்கு எவரது மனதும் வலிக்காத வகையில் தீர்வு காண முயற்சிக்கப்பட்டது என பொதுபலசேனா அமைப்பின் தேசிய அமைப்பாளர் விதான்தெனியே நந்த தேரர் தெரிவித்துள்ளார்.

எனினும், இதனால் பௌத்த மக்களின் மனங்களே பாதிக்கப்பட்டுள்ளன. ஹலால் பண்டங்கள் தொடர்ந்தும் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இந்தப் பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாதுகாப்பு அங்கி அணியாத மீனவர்கள் மீது நடவடிக்கை

## கடற்றொழில் திணைக்களம் அறிவிப்பு



(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு பாதுகாப்பு அங்கிகளை பயன்படுத்தும் முறை தொடர்பில் கடும் சட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற அனர்த்தங்களை கருத்திற்கொண்டு, இந்த நடவடிககை எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிமல் ஹெட்டியாராச்சி தெரிவித்தார. 2008 ஆம் ஆண்டு முதல் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும், மீனவர்கள் பாதுகாப்பு அங்கிகளை அணியாது மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் ஒரு இலட்சத்து 85 ஆயிரத்திற்கும் அதிகமானோர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, பைலின் சூறாவளியால் கடல் கொந்தளிப்பாகியதால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலுள்ள படகுகளின் உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

கடல் கொந்தளிப்பு காரணமாக முல்லைத்தீவில் 22 படகுகளுக்கும், யாழ்ப்பாணத்தில் 29 படகுகளுக்கும் சேதம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடிகாலமைப்பு வேலைகளை துரிதப்படுத்துமாறு கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை யாழ்ப்பாண வீதியின் புனரமைப்பு வேலைகள் முடிவுற்ற போதிலும் வீதியோரமாகவுள்ள வடிகாலமைப்பின் வேலைகள் பூரணமாக முடிவடையாமையால் இதனூடாக பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் வீதியும் வடிகாலமைப்பும் சமாந்தரமாக இருப்பதால் வாகனங்கள். மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கரவண்டிகள் போன்றவற்றில் செல்வோர் விபத்துக்களை சந்திக்க நேரிடுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வீதியின் சில பகுதிகளுக்கு 6 அடிக்கு ஒரு கல் நாட்டப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் வடிகால் அமைக்கப்பட்டுள்ள முழுப்பகுதிக்கும் இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்டால் பயணிகள் அவதானத்துடன் செல்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மருதடியிலிருந்து சிவன்கோவில் வரையான வடிகால் மூடிபோட்டு மூடப்பட்டுள்ளதால் அண்மையில் பெய்தமழை காரணமாக வெள்ளநீர் தேங்குவதுடன் கழிவு நீரும் தேங்கி துர்நாற்றம் வீசுவதாகவும் இதனால் டெங்கு தொற்று ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவ்வீதியூடாக போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்களின் நலனை கருத்தில் கொண்டு வடிகாலை துப்புரவு செய்வதுடன் வடிகாலமைப்பு வேலைகளை துரிதப்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகிறது. (109)

# சேதமடைந்துள்ள மதகு; அபாயத்தில் போக்குவரத்து

(பருத்தித்துறை)

மாலு சந்தியிலிருந்து வியாபாரி மூலை வரை செல்லும் பிரதான வீதியில் தேவாலயத்திற்கு முன்பாகவுள்ள வீதியின் மதகு உடைந்து 3 ஆண்டுகளாகியும் இதுவரை சீர்செய்யப்படாமையால் போக்குவரத்துக்கள் அச்சத்தின் மத்தியில் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இவ்வீதியால் கனரக வாகனங்கள் செல்லமுடியாதுள்ளதுடன் முன்னர் பேருந்துப் பயணம் இடம்பெற்று வந்தநிலையில் தற்போது பேருந்துகளும் பயணம் செய்ய முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கும் மக்கள் இது தொடர்பாக வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு எடுத்துக்கூறியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையெனத் தெரிவிக்கின்றனர். இனிவரும் மழை காலத்திற்கு முன்னர் உடைந்த மதகை சீர்செய்து தருமாறு மக்கள் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (109)

# நூலகங்களுக்கு விருது

(ஊர்காவற்றுறை)

2012ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாத செயற்றிட்டங்களை சிறப்பாக நடாத்தி அதனை ஆவணப்படுத்தியமைக்காக ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு, நாரந்தனை பொது நூலகங்கள் தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையினால் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றுக்கான விருதுகள் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு ஸ்ரீ லங்கா பவுண்டேசன் மண்டபத்தில் கல்வி அமைச்சர் தலைமையில் நடைபெறும் தேசிய வாசிப்புமாத விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன.

# விஜயதசமியன்று மாணவர் கௌரவிப்பு



மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் விஜயதசமி நிகழ்வுகளும் ஏடு தொடக்கலும் நேற்று முன்தினம் பாடசாலையின் பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி. ச.சிவகுமார் தலைமையில் இடம் பெற்ற இவ் நிகழ்வில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்றன.விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ஏடு தொடக்கும் நிகழ்வு இடம்பெற்றது. ஏடு தொடக்கலினை மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையின் முன்னாள் அதிபர் அருட்பிரகாசபிள்ளை நடாத்தி வைத்தார். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இறுதியாக நவராத்திரியை முன்னிட்டு இடம்பெற்ற பேச்சு, மாலைகட்டல், கோலம் போடுதல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (48)

# மண்டபத்திறப்பு விழா

யாழ்.ஊட க அமையத்தின் தராகி டி .சிவராம் ஞாபகார்த்த மண்டப திறப்பு ஊடகவியலாளர் வாண்மை விருத்தி செயலமவர்வும் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் 84 A , இராசாவின் தோட்டம் வீதியில் உள்ள யாழ் ஊடாக அமையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மறைந்த ஊடகவியலாளர்கள் நினைவு கூரல் . மண்டபத்திறப்பு அறிமுகவுரை ஆசியுரை என்பன இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து செவ்வி காண்பதற்கான முறைகளும் காண்பவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டிய திறன்களும்என்னும் விடயம் பற்றி விசப் சௌந்தரம் ஊடக கல்வி அமையத்தின் இயக்குநர் வண பிதா ரூபன் மரியாம்பிள்ளை விளக்கமளிக்கவுள்ளார்.



# தாமதமான முடிவு



(மும்பை)


சச்சின் ஓய்வு இலட்சக்கணக்கான இரசிகர்களுக்கு ஏமாற்றமானது. இருப்பினும், இம்முடிவு தாமதமானது. 2011இல் உலக கோப்பை வென்றபோதே ஓய்வு பெற்றிருக்க வேண்டும் என வினோத் கம்ப்ளி தெரிவித்தார்.

ஆரம்ப காலத்தில் இருந்ததை போல, இப்போது சச்சின் கிடையாது. கடந்த சில ஆண்டுகளாக எதிர்பார்த்த அளவுக்கு ஓட்டங்கள் சேர்க்கவில்லை. இது சோகமானது.

சச்சினின் குழந்தைப்பருவ கனவு, உலக கோப்பை வெல்வது. இது 2011இல் நிறைவேறியவுடன் ஓய்வு பெற்றிருக்க வேண்டும். அப்படி செய்திருந்தால் சிறப்பானதாக இருந்திருக்கும்.


சச்சினின் ஓய்வு முடிவு என்பது சரியானதுதான். இவர் பங்கேற்கவுள்ள கடைசி இரண்டு டெஸ்ட் போட்டிகள், மிகவும் உணர்ச்சிப் பூர்வமாக இருக்கும். இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என்று நம்புகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கற்றுக்கொண்டவை ஏராளம்



இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரிடமிருந்து ஏராளமாகக் கற்றுக் கொண்டதாக இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதான் தெரிவித்துள்ளார். அத்தோடு, தனது கிரிக்கெட் வாழ்வில் சச்சின் டெண்டுல்கர் ஏராளமாக உதவியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சச்சின் டெண்டுல்கர் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறவுள்ள நிலையிலேயே இர்பான் பதான் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

தனது கிரிக்கெட் வாழ்வின் ஆரம்பத்தில் சச்சின் டெண்டுல்கர் ஏராளமாக உதவியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பந்து வீசும் போதெல்லாம் எங்கே, எவ்வாறு பந்து வீச வேண்டும் போன்ற விபரங்களை சச்சின் டெண்டுல்கர் தனக்குத் தெரிவித்துக் கொண்டிருப்பார் என இர்பான் தெரிவித்தார். வீரர்களின் அறையில் சச்சின் டெண்டுல்கரை 9 வருடங்கள் அருகிலிருந்து அவதானித்ததாகக் குறிப்பிட்ட இர்பான் பதான், அவர் எவ்வாறு மைதானத்திற்கு வெளியே நடந்து கொள்கிறார் போன்ற விடயங்களைக் கற்றுக்கொண்டதாகவும் இர்பான் பதான் குறிப்பிட்டார்.




# ஆரவாரக் கோசத்தில் சாதனை

(நியூயோர்க்)

அமெரிக்க கால்பந்தாட்ட அணிகளிலொன்றான கன்ஸாஸ் சிட்டி சீப்ஸ்- அணியின் இரசிகர்களே திறந்தவெளி மைதானமொன்றில் எழுப்பப்பட்ட மிகப் பெரிய ஆரவார கோசத்துக்குச் சொந்தக்காரர்கள் என்று கின்னஸ் சாதனை படைத்துள்ளார்கள். கடந்த ஞாயிறன்று நடந்த போட்டியில் தமது அணிக்கு பலத்த கோசத்துடன் ஆரவாரம் எழுப்பி கன்ஸாஸ் சிட்டி சீப்ஸ் அணியின் இரசிகர்கள் சாதனை படைத்தனர்.

அரோவ்ஹீட் மைதானத்தில் நடந்த போட்டியின் இறுதிக் கட்டத்தின்போது கன்ஸாஸ் சிட்டி சீப்ஸ் அணியின் இரசிகர்கள் 137.5 டெசிபல்கள் வரை சத்தத்தை எழுப்பி சாதனை நிலைநாட்டியதாக கின்னஸ் சாதனை புத்தக அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னர் படைக்கப்பட்டிருந்த சாதனையை விட ஒரு டெசிபல் மேலே சென்று இந்தச் சாதனை படைக்கப்பட்டுள்ளது. வலியை ஏற்படுத்தக்கூடிய டெசிபல் அளவுகோலை விட சற்றுதான் இந்த சாதனை கோசம் குறைவாக பதிவாகியுள்ளது. அது மிகப்பெரிய சத்தமாக இருந்தது. பூமியே அதிரும்படியாக இருந்தது என்றார் கன்ஸாஸ் சிட்டி சீப்ஸ் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளர்.

# வென்றது நைஜீரியா



(அடிஸ் அபாபா)

உலக கோப்பை தகுதிச்சுற்றுப் போட்டித் தொடரின் மூன்றாவது சுற்றின் முதல் போட்டியில் நைஜீரிய அணி வெற்றி பெற்றது.

பிபா உலக கோப்பை கால்பந்து தொடர், பிரேசிலில் 2014இல் நடக்கிறது. இதில், ஆபிரிக்க நாடுகளுக்கான பிரிவில்,, தகுதி சுற்று போட்டிகள் பல இடங்களில் நடக்கின்றன. எதியோப்பியாவில் நடந்த மூன்றாவது தகுதி சுற்று, முதல் போட்டியில் நைஜீரியா-எத்தியோப்பியா அணிகள் மோதின.

இதில் நைஜீரிய அணியின் இம்மானுவேல், 67, 90ஆவது (பெனால்டி) நிமிடங்களில் தலா ஒரு கோல் அடித்தார். எதிரணி சார்பில் அசெபா மட்டும் (59ஆவது நிமிடம்) ஆறுதல் தந்தார். முடிவில், நைஜீரிய அணி 2-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

இரு அணிகள் மோதும் மூன்றாவது சுற்று, இரண்டாவது போட்டி விரைவில் இடம்பெறவுள்ளது.

# ஹசி பேட்டி



சென்னை சூப்பர் கிங்ஸ் அணியைக் கொண்டு நடாத்தும் பொறுப்பை என்.ஸ்ரீனிவாசன் தனது மருமகனான குருநாத் மெய்யப்பனிடம் வழங்கினார் எனவும் குருநாத் மெய்யப்பனே அணியைக் கொண்டு நடாத்தினார் எனவும் தனது சுயசரிதைப் புத்தகத்தில் எழு-தியமை தவறாக இருக்கலாம் என மைக்கல் ஹசி தெரிவித்துள்ளார்.

ஓய்வுபெற்ற அவுஸ்ரேலியரான மைக்கல் ஹசி சென்னை சூப்பர் கிங்ஸ் அணி சார்பாக விளையாடி வருகிறார். அண்மையில் தனது சுயசரிதைப் புத்தகத்தில் அவர் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி சார்பாகத் தெரிவித்திருந்தார்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை என்.ஸ்ரீனிவாசன் நிறுவனமான இந்தியன் சிமெந்து நிறுவனமே உரிமைப்படுத்தியிருந்ததாகவும் என்.ஸ்ரீனிவாசன் இந்திய கிரிக்கெட் சபையின் முன்னணிப் பொறுப்பில் காணப்பட்டமையால் அணியை நடத்தும் பொறுப்பை அவர் குருநாத் மெய்யப்பனிடம் வழங்கியதாகவும் எனவே அணியை குருநாத் மெய்யப்பனும் அப்போதைய பயிற்றுவிப்பாளருமான கெப்லர் வெசல்ஸும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியைக் கொண்டு நடத்தியிருந்ததாகவும் மைக்கல் ஹசி குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், தற்போது இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள மைக்கல் ஹசி, தான் புத்தகத்தில் எழுதிய விடயம் தொடர்பாக என்.ஸ்ரீனிவாசனிடம் வருத்தம் தெரிவித்ததாகவும் குருநாத் மெய்யப்பன் தொடர்பாக தான் தவறாக எழுதியிருக்கலாம் எனவும் குறிப்பிட்டார்.

குருநாத் மெய்யப்பன் அணியோடு நெருக்கமாகக் காணப்பட்டார் எனவும் பயிற்சிகளின் போதும், அணி தங்கியிருந்த விடுதிகளிலும் அவர் அங்கு காணப்பட்டார் எனவும் பயிற்சியாளரிடமும் வீரர்களிடமும் அவர் கதைத்தார் எனவும் குறிப்பிட்ட மைக்கல் ஹசி, ஆனால் குருநாத் மெய்யப்பனுக்குஎன்ன பதவி காணப்பட்டது என்பது தொடர்பாகத் தனக்குத் தெரியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இன்று ஜெய்ப்பூரில் 2ஆவது ஒரு நாள்

(ஜெய்ப்பூர்)

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டித் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று ஜெய்ப்பூரில் இடம்பெறவுள்ளது.


இந்தியாவுக்கான சுற்றுலாவை மேற்கொண்டுள்ள அவுஸ்ரேலிய அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு ஜெய்ப்பூரிடம் இடம்பெறவுள்ளது.

இதில் ஏற்கனவே, புனேயில் இடம் பெற்ற முதல் போட்டியில் அவுஸ்ரேலிய அணி வெற்றிபெற்று தொடரில் முன்னிலை வகிப்பதுடன் தொடரைக் கைப்பற்றும் வேட்கைளுடன் உள்ளது.

முதல் போட்டியில் அடைந்த தோல்விக்கு பழிதீர்க்கும் வகையில் இந்திய அணி இப்போட்டியில் களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, முதல் போட்டியில் வென்றமை தொடரை வெல்லக்கூடிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதாக அவுஸ்ரேலிய அணிக் கப்டன் பெய்லி தெரிவித்துள்ளார். ஐ.பி.எல். போட்டி அனுபவங்கள் தொடரை வெல்ல பெரும் துணைபுரியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் சிறப்பான ஆரம்பம்



(அபுதாபி)

சான் மசூட், கே. மன்சூர் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது.

பாகிஸ்தான் தென்னாபிரிக்க, அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் அபுதாபியில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அம்லா 118 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் அம்லா பெற்றுக் கொண்ட 20ஆவது சதமாக இது அமைந்தது. மற்றும் டுமினி 57, டிவில்லியர்ஸ் 19, ஸ்மித் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மொகமட் இர்பான் மூன்று, சயிட் அஜ்மல் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் பாகிஸ்தான் அணி நேற்றைய இரண்டாம் நாளின், இரண்டாவது பகுதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை விக்கெட் இழப்பின்றி 112 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சான் மசூட் 60, கே. மன்சூர் 51 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# திருப்தியில்லை



நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றிதோல்வியின்றி நிறைவு பெற்றமை குறித்து திருப்தியடையவில்லை என பங்களாதேஷ் அணித் தலைவர் முஸ்பிகர் ரஹிம் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டியில். தமது அணி வீரர்கள் சிறப்பாக செயற்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

போட்டியின் முதல் இனிங்ஸ்ஸில் 501 ஓட்டங்களைப் பெற்ற பங்களாதேஷ் அணி இரண்டாவது இனிங்ஸ்ஸில் 3 விக்கெட் இழப்பிற்கு 173 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

நியூசிலாந்து அணிக்கெதிரான எந்தவொரு டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலும் பங்களாதேஷ் அணி இதுவரை வெற்றிபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி டாக்காவில் ஆரம்பமாகவுள்ளது.



# சதுரங்கப் போட்டி முடிவு

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை மகாஜன கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் ஜெயரத்தினத்தின் 100ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டி நடைபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் இடம்பெற்ற இப்போட்டி 15 மற்றும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கிடையிலேயே இடம்பெற்றது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பிடித்தோர் விபரம் வருமாறு:

15 வயதுப் பிரிவு: முதலாமிடம் கே. சஜிந்தன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), இரண்டாமிடம் கே.ஆரோன் (யாழ். இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் எம். தேனுஜன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி)

19 வயதுப் பிரிவு : முதலாமிடம் கே. மகிந்தன் (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), இரண்டாமிடம் எம். பிறைசூடி (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), எ. துளசிராம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி)

# இன்று காலிறுதி

(கல்வியங்காடு)

யாழ். அரச அதிபர் வெற்றிக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தினால் நடாத்தப்பட்டுவரும் இப்போட்டித் தொடரின் முதற் சுற்று ஆட்டங்கள் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெற்றது.

இதில் சங்கானை, சண்டிலிப்பாய், கரவெட்டி, உடுவில், சாவகச்சேரி, யாழ். மாவட்டச் செயலகம், வேலணை, ஊர்காவற்றுறை அணிகள் தகுதி பெற்றன.

தொடர்ந்து இடம்பெறும் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டி குறித்த விபரம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.'

இதேவேளை, அரச அதிபர் வெற்றிக் கால்பந்தாட்டப் போட்டித் தொடர் எதிர்வரும் 21,22ஆம் திகதிகளில் இடம்பெற ஏற்பாடாகியுள்ளதாகவும் தெரிவித்தனர். (எஸ்.பி.)

# தேசிய மட்ட கால்பந்தாட்டம் மகாஜன மூன்றாமிடம்



பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கால்பந்தாட்டப்போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

சமபோஷ நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் 15 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான தேசிய மட்ட கால்பந்தாட்டப் போட்டி கடந்த 11,12,13ஆம் திகதிகளில் அநுராதபுரம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

ஆண்கள் பிரிவில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும், பெண்கள் பிரிவில் தெல்லிப்ளை மகாஜனக் கல்லூரி அணியும் யாழ். மாவட்டம் சார்பாகப் பங்குகொண்டன.

இச்சுற்றுப்போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி, பதுளை கன்னங்கர மகா வித்தியாலய அணியுடனான போட்டியை சமநிலைப்படுத்தியதுடன், காலி விவல் மகா வித்தியாலயத்தினை 2:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் கேகாலை கனுஜால அணியும் மகாஜனக் கல்லூரி அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் செயற்பட்டன. இறுதி வரை இரு அணிகளாலும் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. இதன் காரணமாக போட்டி சமநிலையில் நிறைவு பெற்றது. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி 2-3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் மகாஜனக் கல்லூரி அணியும், பொமேரியா அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே சிறப்பாகச் செயற்பட்ட மகாஜனக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (93)




# பற்றிக்ஸ், மத்தி கோட்டச் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ் மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். கோட்ட கல்வி அலுவலகத்தினால் நடாத்தப்பட்ட கோட்ட மட்ட கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில் 14 மற்றும் 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகள் இடம்பெற்றன. இதில் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் இரு அணிகளும் சிறப்பான ஆடின. குறிப்பாக, பாதுகாப்பு முறையிலான ஆட்டத்திலேயே இரு அணிகளும் அதிக கவனம் செலுத்தின. இதனால் கோல் அடிக்கும் சந்தர்ப்பம் இரு அணிகளுக்கும் கிடைக்கப்பெறவில்லை. முடிவில்தண்ட உதை மூலம் வெற்றி தோல்விதீர்மானிக்கப்பட்டது. இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் குருநகர் சென். ஜேம்ஸ் வித்தியாலய அணியும், நாவாந்துறை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அணியும் மோதின. இதில் குருநகர் சென். ஜேம்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் நாவாந்துறை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணியும், யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே சிறப்பான முறையில் செயற்பட்ட யாழ். மத்திய கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் குருநகர் சென். ஜேம்ஸ் அணியும், சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் மோதின.இதில் சென். ஜேம்ஸ் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

# உதயமானது தீவக லீக்



(வேலணை)

தீவகத்திற்கான கால்பந்தாட்டச்சங்கத்தினை ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் தீவக ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

வேல்ணை பிரதேச செயலகம், நெடுந்தீவு பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் போன்ற பிரதேச செயலகங்களுக்குள் பதிவு செய்யப்பட்ட நாற்பத்து ஜந்துக்கு மேற்பட்ட விளையாட்டுக்கழகங்களை உள்ளடக்கி மேற்படி உதைபந்தாட்டச்சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி தீவுகளுக்கான உதைபந்தாட்டச்சங்கத்தினை உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாக திகழ்ந்த ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் தீவக ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) அவர்களின் வழிநடத்தலில் இடம்பெற்ற இவ் அங்குரார்ப்பண நிகழ்வில் மேற்படி சங்கத்திற்கான நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது தலைவராக நாரந்தனை பங்குத்தந்தை அருட்திரு பீற்றர் அவர்களும், செயலாளராக சந்திரசேகரன் சிறீதரன், பொருளாளராக குணசீலன் கிளறன்ஸ், உபதலைவர்களாக முறையே நெடுந்தீவுக்காக ரஜீவ் பிரகாஸ், ஊர்காவற்றுறைக்காக கிருஸ்ணன் புவி, வேலணைக்காக சமீன் முகட் சலீம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதனையடுத்து நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கருத்துத் தெரிவிக்கையில், தீவக விளையாட்டு வீரர்களின் திறமைகளை நாடளாவிய ரீதியில் வெளிக்கொணர்வதற்காகவும் அவர்களிற்கு தேவையான பயிற்சிகளை வழங்கி சிறந்த உதைபந்தாட்ட வீரர்களை உருவாக்குதல் போன்றவற்றிற்காகவே மேற்படி சங்கம் அமைக்கப்பட்டதாகவும் வீரர்கள் ஒற்றுமையாகவும் திறமையாகவும்விளையாடி தமது சாதனைகளை தீவக மண்ணிற்கு நிலைநிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதோடு மேற்படி சங்கத்திற்கு எவ்வாறான உதவிகளையும் வழங்கத் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

வேலணை பிரதேசசெயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் வேலணை பிரதேசசெயலர் திருமதி மஞ்சுளாதேவி, ஊர்காவற்துறை பிரதேசசபை தவிசாளர் ஜெயகாந்தன், வேலணை பிரதேசசபை தவிசாளர் சிவராசா, ஊர்காவற்றுறை உபதவிசாளர் அல்பிரட், கால்பந்தாட்ட அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் வடமாகாண சபையின் எதிர்காலமும்?

- சாலையூரான் -



தமிழ்க் கூட்டமைப்பின் மாகாண சபை நடவடிக்கைகளில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதான அதன் பதவியேற்பு நிகழ்வு பங்காளிக் கட்சிகளது நிராகரிப்பின் மத்தியில் நடைபெற்றிருக்கிறது. மாகாண அமைச்சுக்கான தமது கட்சியின் சிபார்சுகள் தமிழரசுக்கட்சியால் ஏற்கப்படவில்லை என்பது இக்கட்சித் தலைவர்களது வாதம்.

இந்த பதவியேற்பு நிகழ்வை கூட்டுக்கட்சிகள் நிராகரித்துள்ளதை அடுத்து தமிழ்க் கூட்டமைப்புக்குள் இணைந்துள்ள பங்காளிக் கட்சிகளின் கூட்டு எத்தகையது என்பது பற்றி பலத்த வாதப் பிரதிவாதங்கள் இப்போது எழுந்துள்ளன.

புலிகளின் போர்ச் சூழலில் இந்த கூட்டுக்கட்சிகளின் ஆரம்பம் என்பது வடக்கு கிழக்கில் அரசுக்கு சார்பான கட்சிகள் பதவிக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காக புலிகளால் ஏற்படுத்தப்பட்ட ஒரு செயற்கையான ஏற்பாடாகும்.

நீண்ட போருக்குப் பின்னர் இன்று வடக்கிலும் கூடவே தெற்கிலும் இனத்துவ நிலைப்பட்டு பிரச்சினைகளை நோக்குகின்ற நிலை முன்னரை விட மேலோங்கியுள்ள நிலையில் அரசுத்தரப்பிலும் கூடவே தமிழ்க் கூட்டமைப்பின் தரப்பிலும் பங்காளிக் கட்சிகளின் பாத்திரமும் அவற்றின் நிலையும் இன்று மிகவும் சிக்கலான நிலையை எதிர்கொண்டுள்ளன.

தேசிய ரீதியில் தன்னை நிலைப்படுத்திக் கொண்டுள்ள ஒரு கட்சியுடன் சிறிய கட்சிகள் தம்மை இணைத்துக்கொள்ளல் என்பது சுய விருப்பின் அடிப்படையிலானது என வெளியில் கூறிக் கொள்கின்ற போதும் அது உண்மையில் அக்கட்சி தேர்தலில் தனித்து நிற்க முடியாத நிலையில் தனது இருப்புக்காக இணைந்து கொள்ளும் ஒரு தற்காப்பு நிலையிலேயே இந்த கூட்டுக்கள் உருவாக்கம் பெறுகின்றன.

பங்காளிக்கட்சிகளின் இந்த தற்காப்பு நிலையை பிரதான கட்சிகள் தமக்கு வாய்ப்பாக தம்மை வலுப்படுத்துவதிலேயே போய் முடிந்திருக்கின்றன. இந்த நிலை வடக்கில் இப்போதுதான் முனைப்பு பெற்றிருக்கிறது. ஆனால் தெற்கில் 90களின் காலப்பகுதியிலிருந்தே பங்காளிக்கட்சிகள் தமது சுயத்தை இழந்துவிடும் நிலைக்கு சென்று விட்டன.

இதில் தமிழ்க் கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சியின் நிலை வித்தியாசமானது. வடமாகாண சபைத் தேர்தலில் தமிழரசுக்கட்சியால் நிறுத்தப்பட்டவர்களில் 14 பேர் மாகாண சபைக்கு தெரிவாகியிருக்கிறார்கள். ஆனால் இவர்களில் பெரும்பாலானோர் தமிழரசுக்கட்சியை சார்ந்தவர்கள் அல்ல என்பதை இங்கே குறித்துக் கொள்ள வேண்டும்.

விருப்பு வாக்குகளும் கூட தமிழரசுக் கட்சியினரை விட இந்த புதுமுகங்களுக்கே கூடுதலாக அளிக்கப்பட்டிருக்கின்றன. எனவே இந்த வாக்குகள் தமிழரசுக்கட்சிக்கு என்பதை விட தமிழ் தேசியத்துக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் என்பதே உண்மையான நிலைமையாகும்.

சாராம்சத்தில் தமிழ்த் தேசியம் என்பது அரசுக்கெதிராக தன்னை நிலைப்படுத்திக் கொண்டுள்ளதால் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு அளித்துள்ள வாக்குகள் அரசுக்கெதிராக அளிக்கப்பட்ட வாக்குகளேயன்றி தமிழ் கூட்டமைப்பின் எந்தவொரு கட்சிக்கும் அளித்த வாக்குகள் அல்ல என்பதையும் இங்கே குறித்துக்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமன்றி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சரியான தீர்வை முன்னெடுக்கும் பொருத்தமான வேறொரு கட்சி இல்லாத நிலையிலும் தமிழ்க் கூட்டமைப்புக்கு இந்த வாக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

எல்லாவற்றையும் விட நாட்டுக்கு வெளியால் வாழும் தமிழ் இன உணர்வாளர்களின் விருப்பங்களும் இத்தேர்தலில் பிரதான பங்கை வகித்திருக்கின்றன. வடக்கில் தமிழர்களின் வாழ்வு மேம்பாட்டை தீர்மானிக்கும் பிரதான சக்தியாக வெளிநாட்டில் வாழ்பவர்களின் பண உழைப்புக்கள் நிலைபெற்றுவிட்ட பின்பு தமிழ் சமூகம் அவர்களது விருப்பங்களுக்கு தலையசைப்பவர்களாக மாறிவிட்ட சூழலில் இப்போது தேர்தல் வெற்றியை தீர்மானிக்கும் பிரதான சக்திகளாக புலம்பெயர் அமைப்புக்கள் மாறியிருக்கின்றன.

தமிழரசுக்கட்சியின் வெற்றிக்கு கூட்டுக்கட்சிகள் பங்களித்திருப்பதால் பங்காளிக்கட்சிகளுக்கும் அமைச்சுப்பதவியில் பங்குகொடுப்பதற்கு தமிழரசுக் கட்சி இணங்கினாலும் அக்கட்சி தலைவர்களின் விருப்பத்துக்கு அமைச்சர்களை தெரிவதை விட தமக்கு வசதியானவரை அக்கட்சிகளிலிருந்து தெரிவு செய்துகொண்டுள்ளது.

இந்த உள்நோக்கம் வடக்கு மாகாண சபை நிர்வாகத்தில் கூட்டுக்கட்சிகளின் தீர்மானங்களை மட்டுப்படுத்தும் ஒரு முயற்சி என்பதால் பங்காளிக் கட்சிகள் இது விடயத்தில் விழித்துக்கொண்டதாக தெரிகிறது. இதில் எழுந்த முரண்பாடே பதவியேற்பு நிகழ்வை பங்காளிக்கட்சிகள் புறக்கணித்தமைக்கு காரணமாகும். அதாவது 30 உறுப்பினர்களில் 22 உறுப்பினர்களை இப்போது தமிழரசுக் கட்சி தன்வசம் இழுத்துக்கொண்டு விட்டது. உண்மையில் இப் போது மாகாண-சபையின் எட்டு உறுப்பினர்களே எதிரணியில் உள்ளதாகச் சொல்லப்படுகிறது.

இது பங்காளிக் கட்சிகள் குற்றம் சாட்டுவதைப் போல தமிழரசுக் கட்சி சர்வாதிகார தன்மையில் செல்வதாகக் கொள்ளமுடியும். இந்த நிலைமையானது தமிழ் மக்களின் உண்மையான வாழ்நிலை நெருக்கடிகளுக்கு தீர்வைத் தரும் அல்லது அதற்கான முயற்சிகளுக்கு வழிசமைக்கும் ஒரு மாகாண நிர்வாகமாக அன்றி தமது அற்ப நோக்கங்களுக்காக கூறுபட்டுக்கொண்டு தமிழ் மக்களுக்கு கிடைப்பவற்றையும் இல்லாது செய்துவிடும் ஒரு நிர்வாகமாக அமைந்து விடுமோ என மக்கள் அச்சப் படுமளவிற்கு ஆகியிருக்கிறது.

# கேளாமல்

- என். சொக்கன் -



அழகிய தமிழ்மகன் படப் பாடல் "கேளாமல் கையிலே...." பாடலாசிரியர் தாமரை. இசை ரஹ்மான்.

ஆண்டாள், வெள்ளிவீதியார், வெண்ணிக்குயத்தியார் என்று பல்வேறு பெண்பாற் புலவர்களைக் கொண்ட நம் தமிழ் மொழியில், திரைப்பாடல் என்னும் துறையில் மட்டும் ஏனோ பெண்கள் பங்களிப்பு அதிகம் இருந்ததில்லை. இந்த குறையை நீக்க மலர்ந்தவர்தான் தாமரை. கொங்கு தமிழும், குளிரும் மாற்றி மாற்றி கொஞ்சும் கோவை நகரில் பிறந்து வளர்ந்ததாலோ என்னவோ இவருடைய வரிகள் சிறுவாணி நீராய் இனிக்கும்.

தமிழகத்தின் வருங்கால முதல்வர் என்பதற்குரிய தகுதி உடையவராக அவரது இரசிகர்களால் கருதப்படும் இளைய தளபதி விஜய் அவர்களும், உடுக்கை உடலால் உளத்தை உருக்கும், உத்தராகந்து உதிர்த்த உத்தமி ஷ்ரேயா அவர்களும், அழகிய நியூசிலாந்து கிராமங்களில் நடனமாடும்படி படமாக்கப்பட்ட பாடல் இது.

இந்த பாடலின் ஒவ்வொரு அடியுமே குறிப்பிடும்படி அமைந்திருந்தாலும், நீளம், காலம் கருதி இரண்டு இடங்களைப் பற்றி மட்டும் இப்பத்தியில் பார்ப்போம்.

1) பார்த்தும் பாராமலே
ஓடும் மேகங்களே,
ஏதோ நடக்கின்றதே
குதித்துப் போவதேன்?
நில்லுங்களேன்.
பார்த்தும்
பாராமலே ஓடும்
மேகங்களே !

தலைவனும் தலைவியும் ஏதோ செய்துகொண்டிருக்கிறார்கள். மேலே வானத்தில் செல்லும் மேகங்கள் இதனை கண்டும் காணாமலும் ஓடிக் கொண்டிருக்கின்றன. தமிழ் இலக்கணத்தில், இயல்பாய் நிகழும் ஒரு நிகழ்ச்சியின் மேல் கவிஞர் தன் கற்பனையை ஏற்றிப் பாடுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

இந்த அழகான வரிகளை மெட்டில் உட்கார வைப்பதற்காக ரஹ்மான் உச்சரிப்பில் கொஞ்சம் சிதைத்து விட்டார். ஆனால் இயக்குனரோ, பாடலாசிரியரின் கற்பனையை தெளிவாக உள்வாங்கிக் கொண்டு, மிகப் பொருத்தமாக இங்கு ஒரு முத்தக்காட்சியை வைக்கிறார். அதாவது காதலன் காதலியை முத்தமிட முயல்கிறான், இதனை கண்டும் காணாமலும் மேகங்கள் ஓடுகின்றன. காதலி வெட்கத்துடன் மேகங்களை ஓடாமல் நிற்கச் சொல்லுகின்றாள். அப்படி நின்றாலாவது காதலன் முத்தமிடுவதை தவிர்க்கலாம் என்று நினைக்கிறாள். ஆனால் மேகங்கள் ஓடி விடுகின்றன. அதனால் காதலியும், "நனைந்த பிறகு நாணம் எதற்கு" என்று, மேகங்களும் நின்று பார்க்கப்போவதில்லை என்று உணர்ந்து, முத்தமிட்டு வைக்கிறாள்.

2) மேற்கு திசையை நோக்கி நடந்தால்
இரவு கொஞ்சம் சீக்கிரம் வருமா?

இந்த வரியை முதன் முதலில் கேட்ட போதே, மிகவும் ஈர்த்து விட்டது. கிழக்கில் கதிரவன் உதிப்பதால், கிழக்கு நோக்கி நடந்தால் காலையும், மேற்கு நோக்கி நடந்தால் இரவும் சீக்கிரம் வருமா, என்று தலைவி கவித்துவமாய் ஏங்குகிறார். ஆனால் மீண்டும் மீண்டும் கேட்டு யோசித்த போது, இதில் பிழை உள்ளதாகவே தெரிகிறது.

இரவு வர வேண்டும் என்று பெண் ஏங்குகிறாள் எனில், அங்கு இருப்பது பகல் பொழுது என்று அறிந்து கொள்ளலாம். நாள் என்பது கிழக்கில் தொடங்குவதால், நாம் ஜப்பான் நாட்டை Land of Rising Sun என்கிறோம். நம்மூரில் காலை/மாலை என்றால் ஜப்பானில் (கிழக்கில்) மாலை/இரவு இருக்கும். ஆதலால் இந்த வரியில் நயம் மிகுந்திருந்தாலும் பொருட்பிழை உள்ளது. இது,


கிழக்கு திசையை நோக்கி நடந்தால்
இரவு கொஞ்சம் சீக்கிரம் வருமா?


என்று இருக்க வேண்டும். இல்லையேல்,

மேற்கு திசையை நோக்கி நடந்தால்
இனிக்கும் இரவு இன்னும் நீளுமா?

என்று இருக்கலாம். ஆனால் இரவு நேரத்தில் நடன காட்சி அமைப்பது சிரமமாகியிருக்கும்.

# சின்னச் சின்ன...






▶ ஒருமுறை காந்தியடிகளைப் பார்க்க வந்த ஒருவர், "ஐயா, இந்த உலகத்தில் மன்னிக்க முடியாத பாவங்கள் என்று நீங்கள் எவற்றைக் கூறுவீர்கள்?"என்று கேட்டார்.

காந்தி புன்முறுவலோடு, "மொத்தம் ஏழு பாவங்கள் உள்ளன. அவை - கொள்கைப் பிடிப்பு இல்லாத அரசியல், நேர்மை இல்லாத வியாபாரம், ஒழுக்கம் இல்லாத கல்வி, குருவை மதிக்காமலிருப்பது, மனச்சாட்சி இல்லாத இன்பம், மனிதாபிமானம் இல்லாத அறிவியல், தியாகம் இல்லாத இறைவழிபாடு" என்று பட்டென்று பதில் கூறினார்.

▶ மாவீரன் நெப்போலியன், ஒருமுறை தனது தளபதியிடம், "நம்மிடம் லட்சம் வீரர்கள் இருக்கிறார்கள் அல்லவா?" என்று கேட்டார்.

அதற்கு, அந்தத் தளபதி, "அறுபதாயிரம் பேர்தான் உள்ளனர்" என்றார்.

உடனே நெப்போலியன், "அவர்களோடு என்னையும் சேர்த்துக் கொள். ஒரு லட்சமாகி விடும்..." என்றார்.

தனது வீரத்தின் மீது அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார் நெப்போலியன்.

▶ கல்கியும் எஸ்.எஸ்.வாசனும் மைசூரில் திப்பு சுல்தானின் கல்லறையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தபோது கல்கி சொன்னாராம் "பாவம் இவ்வளவு அழகான கல்லறையைப் பார்த்து ரசிக்க திப்பு சுல்தானுக்குக் கொடுத்து வைக்கவில்லையே"

▶ தத்துவஞானி சோக்ரடீஸிடம் ஒருவர் "எது அழகு?" என்று ஒரு கேள்வியைக் கேட்டார்.

அதற்கு சோக்ரடீஸ் அளித்த பதில் "பானையில் உணவு இருக்கின்றது. அதை எடுக்க உதவுவது எது? தங்கக் கரண்டியா... மர அகப்பையா? எது பயனுள்ளதாக இருக்கின்றதோ அதுவே அழகு!"

▶ ராமகிருஷ்ணர், ஒருநாள் சீடர்களோடு உரையாடிக் கொண்டிருந்தபோது ஒரு வினா எழுப்பினார். "சீடர்களே, நீங்கள் ஒரு ஈயாக மாறிவிடுகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் முன் ஒரு கோப்பையில் அமுதம் இருக்கின்றது. நீங்கள் என்ன செய்வீர்கள்..?"

விவேகானந்தர் சொன்னார், "அவசரப்பட்டு கோப்பையில் விழுந்து உயிரை விட்டுவிடாமல், கோப்பையின் விளிம்பில் அமர்ந்து அமுதத்தைப் பருகுவேன்..." என்றார்.

அதற்கு ராமகிருஷ்ணர் சிரித்துக் கொண்டே சொன்னாராம்: "கோப்பையில் இருப்பதோ அமுதம். அதனை உண்பவர்களுக்கு மரணம் இல்லை. அப்படியிருக்க விளிம்பில் உட்கார்ந்தால் என்ன? விழுந்தால் என்ன?"

▶ தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் சொன்னது: ஒரு சமயம் நான் சென்னையில் உள்ள ஒரு அம்மன் கோவில் திருவிழாவில் இரவு இன்னிசைக் கச்சேரி செய்து கொண்டிருந்தேன். அப்போது பந்தலின் முன்பக்கம் ஒரு கார் வந்து வெகு நேரம் நின்றது. நள்ளிரவு என் கச்சேரி முடியும்போது அவர் நேரே மேடைக்கு வந்தார். நான் வணங்கினேன். "பாட்டு அருமையாக இருந்தது. ஆவலுடன் ரசித்தேன். இவ்வளவு அருமையாகப் பாடுகிறானே பையன். யார் என்று அங்கிருந்தவர்களைக் கேட்டேன். எஸ்.பி. பாலசுப்ரமணியன் என்றார்கள். அதனால் இவனை வாழ்த்த வந்தேன்" என்று சொல்லிவிட்டு என் தோளைத் தட்டி, "நீ பெரிய ஆளா வருவே" என்றார் திருச்சி லோகநாதன்.

▶ இந்திய விடுதலைப் போராட்ட சமயம். ஜவாஹர்லால் நேருவின் தலைமையில் போராட்டத்தில் பங்கேற்று சிறையில் இருந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ரொட்டியில் மண் கலந்திருந்தது.

இதைக் கண்ட நேரு, "ரொட்டியை இப்படிக் கொடுத்தால் எப்படி? சுத்தமான ரொட்டியைக் கொடுங்கள்" என்று சிறை அதிகாரிகளிடம் கேட்டார்.

அதற்கு அதிகாரி ஏளனமாக, "இதில் இருப்பது உங்கள் தாய்மண்தானே... அதற்காகத்தானே போராடி சிறைக்கு வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு இது சுவையாகத்தான் இருக்கும். சாப்பிடுங்கள்..." என்று சொன்னார்.


நேரு, "நாங்கள் போராடுவது மண்ணை மீட்பதற்குத்தானே தவிர, தின்பதற்கு அல்ல" என்று பட்டென்று பதிலளித்தார்.

# ட்விட்டர் என்ற தளத்தில் எத்தனை எழுத்தாளர்களால் குப்பை கொட்ட முடிகிறது?

தமிழர்களுக்கு எப்போதும் படிக்கும் பழக்கம் இருந்துகொண்டே தான் வந்திருக்கிறது. சேர சோழ காலத்தில் இருந்து மொத்த தமிழகமும் படிக்கும் பழக்கத்தை கொண்டிருக்க வில்லை என என்னால் சர்வ சாதாரணமாக எந்த வரலாற்று ஆவணங்களும் இல்லாமல் ஃபேஸ்புக்கில் எழுதிவிட்டு போய்விடமுடியும். இங்கு ஆவணங்கள் தேவையில்லை, ஃபீலிங்க் முக்கியம்.

மொத்த தமிழகமும் எப்போதும் படித்துக்கொண்டிருந்தால் திருக்குறளையும், நான்மணிக்கடிகையையும் ஏன் பள்ளியில் அனைவரும் மனப்பாடம் செய்து கொண்டிருக்க வேண்டும்? பள்ளிப் பாடப்புத்தகத்தில் வந்த பாரதியார் கவிதைகளை தாண்டி எத்தனை பேருக்கு மற்ற கவிதைகள் தெரியும்? எப்போதுமே ஆர்வமுள்ள குறிப்பிட்ட தங்களை உதாரண புருஷர்களாகவோ, குருமார்களைப் போலவோ காட்டிக் கொள்ளாத சூழ்நிலையில் தமிழ்ச்சூழலில் மட்டும் இந்த தொற்றுநோய் ஏன் பரவிற்று என்ற காரணம் தெரியவில்லை. அவர்களின் தனிப்பட்ட மிகையூட்டப்பட்ட காரணங்கள் ஏதேனும் இருந்து தொலையட்டும், அவர்களின் எழுத்து நடை வாசகர்களை குதிகால் புட்டத்தில் படும்படி எகிறியோடச் செய்து விட்டது. தலையணை சைஸ் மோகமுள், அம்மா வந்தாள் போன்ற நாவல்களோடு கல்கியின் பொன்னியின் செல்வன், சுஜாதா, பாலகுமாரன் என படித்து வந்த கூட்டம்தானே தமிழ்க் கூட்டம். அங்கேயிருந்து கையைப்பிடித்து அழகாக அழைத்துக்கொண்டு போகும் வேலையை அடுத்து வந்த ஆட்கள் செய்யவில்லை. தற்போது சிறிய கொஞ்ச கூட்டம்தான் தமிழைப் படித்து வந்திருக்கிறது. இங்கு வேலை சார்ந்த படிப்பை தவிர மற்ற படிப்பு படிப்பது என்பது ஏதோ உலக சுற்றுப்பயணம் போவது போல லக்ஸரி சார்ந்த விஷயமாகி போய் விட்டது. அல்லது இரத்ததானம் செய்வது போலவோ, விதவைத்திருமணம் செய்வது போலவோ புனிதமான விஷயமாக கருதி பலர் படித்துக்கொண்டிருப்பது கொடுமையான விஷயம்.

நிலைமை இப்படி இருக்க கடந்த 20 ஆண்டுகளில் (சும்மா அடிச்சி விட வேண்டியதுதான்) வந்த தமிழ் எழுத்தாளர்கள் தங்களை சங்கராச்சாரியாராகவும் போப் ஆண்டவர்களாகவும் நினைத்துக்கொண்டதன் விளைவை தற்போதைய தமிழ் இலக்கிய உலகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. உலகில் நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர்கள் கூட இடைவெளிக்கு பிறகு ஆதவன், ப.சிங்காரம், நாகராஜன், நகுலன், கோபி கிருஷ்ணன் என தேடிப் பிடித்து படித்துக்கொண்டிருக்கின்றனர் இளைஞர்கள். ஏன் இப்போது தேடிப் பிடித்து படிக்க வேண்டும்? எங்கே ஏற்பட்டது இந்த இடைவெளி? இலக்கியத்தை சொற்ப கூட்டத்துக்கான இடமாக மாற்றி, ஒன்றுமில்லாத விஷயத்தை கடினமான மொழிகளில் சொல்லி, கொஞ்சமேனும் படிக்கும் மக்களையும் விலகி ஓடச்செய்து விட்டு தானும் எழுத்துப்பணியில் இருந்து ஓய்வு பெற்று விட்டு அடக்கமாக இருக்கிறது ஒரு கூட்டம். இலக்கியத்தை ஏதோ மர்ம பொருளாக்கி இருண்ட குகைக்குள் வைத்து விட்டனர். இவர்கள் சாதித்த தெல்லாம் இன்றைய இளைஞர்கள் படிப்பதில்லை என்ற குற்ற உணர்ச்சியை அவர்கள் மனதில் விதைத்ததுதான்.



தமிழர்கள் இரட்டை மனநிலையில் இருப்பவர்கள். உள்ளுக்குள் செம குசும்பு, ஆனால் வெள்ளையும் சொள்ளையுமாக உடுத்திக்கொண்டு கிர்ப்பாக திரிவார்கள். அங்கீகாரத்திற்காக ஏங்குவார்கள், ஆனால் பாராட்டினால் நன்றி கூட சொல்லாமல், நானெல்லாம் அதற்கு தகுதியானவன் இல்லை என சொல்லி பாராட்டுபவர்களையே அவமானப் படுத்துவார்கள். இப்படிப்பட்ட கோஷ்டிக்கு ஒரு "சைக்கொலஜிக்கல் டூலாக" வந்ததுதான் சமூக வலைத் தளங்கள். இது டூல் மட்டும் அல்ல, வேறு மீடியம். அந்த மீடியத்தை பொது மக்கள் நன்கு உணர்ந்து பயன்படுத்திகொண்ட அளவுக்கு எந்த எழுத்தாளராலும் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. ஏன் என்றால் அவர்களுக்கு முளைத்திருக்கும் வேர்ச் சுவல் கொம்பு. இங்கே வந்து இந்தக் கூட்டத்துக்கு ஏதுவான மொழியில் போஸ்ட் போடாமல் தங்கள் விலை போகாத பழைய சரக்குகளை இங்கே கொட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

ட்விட்டர் என்ற தளத்தில் எத்தனை எழுத்தாளர்களால் குப்பை கொட்ட முடிகிறது? ஏனய்யா நீங்கள்தான் தமிழில் கில்லாடிதானே? 140 எழுத்துக்களுக்குள் எழுதுங்கள் என்ற திருவள்ளுவர் காலத்து சவாலையே உங்களால் எதிர்கொள்ள முடியவில்லையே. ட்விட்டர் ஹீரோக்கள் வேறு நபர்கள். இலக்கிய உலகுக்கு சம்பந்தப்படாத இளைய ஆட்கள் ரகளை நிகழ்த்திக் கொண்டு இருக்கும் இடம். ஏன் இவர்களால் ரகளை நிகழ்த்த முடிகிறது? இவர்களுக்கு ஒரு ஒளி பிம்பம் இல்லை, இன்றைய காலகட்டத்து மொழியில் தன் நண்பருடன் பேசுவது போல பேசுகிறார்கள், அவ்வளவுதான்.

கொம்பு முளைத்த வயதான எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் உண்டான இடைவெளியை இட்டு நிரப்புகின்றன இந்த சமூக இணையத்தளங்கள். மொக்கை பதிவிலிருந்து இலக்கியத்தரமான பதிவுகள் வரை ஜமாய்க்கிறார்கள். மூன்று வரிகளுக்குள் வாசகர்களை உள்ளே இழுக்க வேண்டும். சாரு நிவேதிதா, ஜெயமோகன், எஸ்.ராமகிருஷ்ணன் போல அடுத்த தலைமுறை மும்மூர்த்திகள் உருவாக வாய்ப்பில்லை. ஃபேஸ்புக் புண்ணியத்தால் மூவாயிரம் மூர்த்திகள் உருவாவார்கள். இங்கே எழுதப்படும் எழுத்துக்களுக்கு மன எழுச்சி, உணர்வெழுச்சி போன்றவையெல்லாம் உருவாக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அதே சமயம் போலி எழுத்துக்களை உடனடியாக ஜாலியாக கலாய்த்து கதற அடித்து விடுவார்கள்.

நான் எனக்கு தெரிந்த எழுத்தாளர்களிடம் கேட்பது - பாப்லோ நெரூதா கவிதை பாடினால் உழைக்கும் மக்கள் ஒன்று கூடி கேட்பார்கள் என்று புளகாங்கிதமாக கூறுகிறீர்களே, இங்கே நீங்கள் படைக்கும் கவிதைகள் பதிப்பாளருக்கே புரியாமல் பிரசுரமாகிறதே ஏன்?

காவேரிப்பூம்பட்டினத்தில் கொண்டாடி கூத்தடித்த தமிழ் சமூகத்தின் நொஸ்டால்ஜியாவாக வந்திருக்கும் டைம் மெஷின்தான் ஃபேஸ்புக். எவ்வளவுதான் வீறுகொண்டு சண்டை போட்டாலும், இதுவரை ஃபேஸ்புக்கில் கொலை வரை போகவில்லை என்பதுதான் தமிழர்களின் வீரம் மற்றும் விவேகத்திற்கான சான்று.

— அராத்து —

# இதுவா படைப்பு சுதந்திரம்?

**- ஜெயபாஸ்கரன்**

ஒரு படைப்பாளி கவிஞனாக இருந்தால் - அவனது கவிதைகள் அறவயப் பட்டவையாக, ஆளுமை மிக்கவையாக, அறசீற்றம் கொண்டவையாக, அழகியல் உள்ளவையாக, சமூக அக்கறை நிறைந்தவையாக இருக்கும்பட்சத்தில் அவை வரவேற்கப்படுகின்றன; பின்பற்றப்படுவதற்கும், மேற்கோள்கள் காட்டப்படுவதற்கும் உரியவையாகி, நினைவுகளிலும் நூலகங்களிலும் பாதுகாக்கப்படுகின்றன.

ஒரு படைப்பாளி சிற்பியாக இருந்தால் - அவனது சிற்பங்கள் செய்நேர்த்தி மிக்கவையாக, செய்திகளைச் சொல்பவையாக, படைத்தவனின் கடுமையான உழைப்பாற்றலைப் பிரதிபலிப்பவையாக இருக்கும்பட்சத்தில் அவை ரசிக்கப்படுகின்றன, விலைகொடுத்து வாங்கப்படுகின்றன, கோயில்களில் நிலை நிறுத்தப்பட்டு வணங்கப்படுகின்றன.

ஒரு படைப்பாளி பெருங்கதை புனைபவனாக இருந்தால் - அவனது கதாபாத்திரங்கள் அறம் உரைப்பவையாக, மானுட வாழ்வியலை உணர்த்துபவையாக இருந்தால், அவை உயிருள்ள பாத்திரங்களாகவே உணரப்பட்டு உதாரணபுருஷர்களாக்கப்படுகின்றன. அவ்வகையில்தான் என்றைக்கோ எழுதப்பட்ட பல்வேறு வகையான இதிகாசங்களின் கதாபாத்திரங்கள் இன்றைக்கும் நம்முடன் உணர்வுபூர்வமாக உறவாடிக் கொண்டிருக்கின்றன.

நாவல் இலக்கிய உலகில் கதை மாந்தர்களாக வார்க்கப்பட்ட குறிஞ்சி மலர் 'அரவிந்தன்', பொன்னியின் செல்வன் 'வந்தியத்தேவன்', புத்துயிர்ப்பு 'நெஹ்லூதவ்' போன்ற பல உன்னத கதாபாத்திரங்களை நாம் பட்டியலிட முடியும். போற்றிப் பின்பற்ற மட்டுமல்ல, எவரும் பின்பற்றக் கூடாத எச்சரிக்கைகளாகவும் சில கதாபாத்திரங்கள் வார்க்கப்படுவது உண்டு.

அந்தவகையில் கோடிக் கணக்கான மக்களை ஈர்த்துக் கொண்டிருக்கும் தற்போதைய தமிழ்த் திரைப்படங்களின் பாத்திர வார்ப்புகளில் மிகப் பெரியதொரு பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. இன்றைய திரைப்படங்களின் கதாநாயகர்களாக படைக்கப்படுவோரில் பெரும்பாலானவர்கள் குதர்க்கவாதம் செயகிறார்கள்.


எதைச் செய்தேனும் 'எடுபட்டு' விடவேண்டும், 'பெருவெற்றி' பெற வேண்டும் என்கிற வணிக வலுக்கட்டாயமே தமிழ்த் திரையின் படைப்பாளிகளை இப்படியான கதாபாத்திரங்களை படைக்கும் நிலைக்குத் தள்ளியிருக்கிறது. இளவயது ஆண்களையும், பெண்களையும், மாணவ மாணவிகளையும் ஈர்த்து, திரையரங்கில் அவர்களைக் கைதட்டவைத்துப் பெருங்குரலில் சிரிக்கவும் வைத்துவிட்டால் நமது வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுவிடும் என்கிற படைப்பாளிகளின் மனோ நிலையே இன்றைய 'திரை'யின் கதாபாத்திர வார்ப்புகள் பெருவீழ்ச்சியடைந்ததற்கான முதன்மைக் காரணமாக அமைந்துள்ளது.

நமது சமூகத்தில் பிள்ளைகள் பதின்மவயதை அடையும்வரை அவர்களால் பெற்றோர்களுக்கு எத்தகைய சமூக இடர்பாடுகளும் நேர்வதில்லை. அதற்குப்பிறகு அதாவது பதின்மூன்று வயது தொடங்கி ஏறக்குறைய இருபத்தைந்து வயதுவரை பெற்றோர்களுக்கு ஒவ்வாதவர்களாக மாறுகின்றனர். இன்று மிக எளிதாக வசப்பட்டுவிட்ட அலைபேசி, இணையம், முகநூல போன்ற தகவல் தொடர்பு ஊடக வசதிகள் இன்றைய பிள்ளைகளை, அவர்களது பெற்றோர்கள் மற்றும் குடும்ப உறவுகளோடு பேச விருப்பமற்றவர்களாக மாற்றிவிட்டன. அவர்களின் எதிர்கால வாழ்க்கை நலமாக அமைய வேண்டும் என்று கவலையுற்று கருத்து தெரிவிக்கிற, அல்லது கண்டிப்பு காட்டுகிற குடும்ப உறவுகளை, தங்கள் மகிழ்ச்சிக்கு எதிரானவர்களாகக் கருதத் தொடங்கியுள்ளனர்.

> இன்று மிக எளிதாக வசப்பட்டுவிட்ட அலைபேசி, இணையம், முகநூல் போன்ற தகவல் தொடர்பு ஊடக வசதிகள் இன்றைய பிள்ளைகளை, அவர்களது பெற்றோர்கள் மற்றும் குடும்ப உறவுகளோடு பேச விருப்பமற்றவர்களாக மாற்றிவிட்டன. அவர்களின் எதிர்கால வாழ்க்கை நலமாக அமைய வேண்டும் என்று கவலையுற்று கருத்து தெரிவிக்கிற, அல்லது கண்டிப்பு காட்டுகிற குடும்ப உறவுகளை, தங்கள் மகிழ்ச்சிக்கு எதிரானவர்களாகக் கருதத் தொடங்கியுள்ளனர்.

இன்றைய நமது பிள்ளைகள், பெற்றோர்களின் கருத்துகளுக்கும், கண்டிப்புகளுக்கும், அதற்கு முற்றிலும் எதிரான திரைக் கதாநாயகர்களின் தூண்டுதல்களுக்கும் இடையில் அகப்பட்டு அல்லற்படுகின்றனர்.

எதை எதை எடுத்துச் சொன்னால் இளையோரும் மாணவரும் உடனடியாக கேட்டுக் கொள்வார்களோ அதை மட்டுமே சொல்ல வேண்டும் என்பதிலும், எதை எதை எடுத்துக் காட்டினால் அவர்கள் பரவசப்பெருக்கடைந்து பார்ப்பார்களோ அதை மட்டுமே காட்ட வேண்டும் என்பதிலும், யார் யாரை தங்களுக்கு ஒவ்வாதவர்களாக அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களைக் குறிவைத்துக் கேலி செய்கிற வேலையை மட்டுமே செய்யவேண்டும் என்பதிலும் இன்றைய நமது திரைப்படைப்பாளிகள் மிகவும் உறுதியாக இருக்கிறார்கள். போக்கிரித்தனங்கள் நிறைந்தவனாக, பொறுப்பற்றவனாக, குடிகாரனாக, உழைப்பதற்கு விருப்பமற்றவனாக, தனக்கு எவ்வகையிலும் பொருந்தாத தெருச்சண்டைகளில் பலரோடு மோதி வெல்பவனாக, வலிய வலியச் சென்று காதலிப்பவனாக சித்திரிக்கப்படுகிற ஒரு திரைப் பாத்திரம், அதுபோன்ற உணர்வுப் போக்குடைய இளைஞர்களுக்கான வலிமையான மறைமுக அங்கீகாரமின்றி, வேறு என்ன?



தங்களது பிள்ளைகள் நன்றாகப் படிக்க வேண்டும், படிப்புக்கேற்ற வேலைகளைப் பெற்று அவர்களின் வாழ்வு நலமாக அமையவேண்டும் என்பதுதான் நமது சமூகத்தில் பிள்ளைகளைப் பெற்ற அனைவரும் காண்கின்ற பெருங்கனவாகும். ஆனால், அவர்களது கனவுகளுக்கு முற்றிலும் முரணான குணக்கூறுகளைக் கொண்டவர்களைத்தான் அவர்களது பிள்ளைகள் திரையரங்குகளில் கதாநாயகன்களின் வடிவில் பார்த்து ரசித்துப் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது கசக்கின்ற ஒரு நிஜமாகும்.

குடும்பம் எனும் அமைப்பும் விதம் விதமான பணிப் பயிற்சி நிறுவனங்களும் கல்வி நிறுவனங்களும் சேர்ந்து பெரும் பொருள்செலவில் ஆண்டுக் கணக்கில் திட்டமிட்டு வடிவமைத்து உருவாக்கிவரும் இளைய சமுதாயச் சக்திகளை, அவர்களுக்கு வெளியே இருக்கிற ஓர் ஊடகம் ஒரே நாளில் மாற்றிவிடுகிறது. மது அருந்தக் கூடாது என்பதை எழுத்துகளின் வாயிலாகவும், வார்த்தைகளின் வாயிலாகவும் வலியுறுத்தி வாழ்நாள் முழுவதும் சொல்லிக் கொண்டிருக்கும் சமூகவியலாளர்கள், மது அருந்தும் காட்சிகளை விதம்விதமான கோணங்களில் வண்ணமயமாக ஒளி, ஒலி காட்சிகளாகக் காட்டுகிறவர்களிடம் பரிதாபமாகத் தோற்றுவிடுகின்றனர்.

மது, புகை, வெட்டுக்குத்து வன்முறை, போக்கிரிக் கலாசாரம், பொத்தாம் பொதுவான பொறுப்பற்ற பகடித்தனங்கள் போன்ற அனைத்துக் கூறுகளுக்குமான மறைமுகமான விளம்பரப் பொதுமேடையாகவும் அவற்றையெல்லாம் உரத்த குரலில் அங்கீகரிக்கும் நிறுவனமாகவும் இன்றைய நமது தமிழ்த்திரை மாற்றப்பட்டுவிட்டது. இந்தக் கூறுகளோடு காதல் கவர்ச்சி போதையையும் போதுமான அளவுக்குக் கலந்து தந்து அது தன் வணிகத்தைப் பாதுகாத்துக் கொள்கிறது. திரைப்படங்களை வெறும் திரைப்படங்களாக மட்டுமே பார்த்துவிட்டு அவற்றில் இருந்து தங்களைத் தனிமைப்படுத்திக்கொண்டு சுயத்தோடு விளங்குகிறவர்களாக நமது பெரும்பான்மை மக்கள் இல்லை.

ஓர் இளைஞன் நல்ல தகுதிகள் ஏதுமற்றவனாக இருந்தாலும்கூட அவன தான் சந்திக்கும் பெண்ணை விரட்டி விரட்டிக் காதலிக்கும் தகுதியை மட்டும் உடையவனாக இருக்கிறான் என்பதே கடந்த சில ஆண்டுகளாக நமது தமிழ்த்திரையுலகம் தமது கதாபாத்திரங்களின் வாயிலாக முன்வைக்கும் ஆணித்தரமான கருத்தாக இருக்கிறது.

உலகின் எந்த நாட்டுத் திரையுலகமும் காதலைப் பிடித்துக்கொண்டு இதுபோன்ற ஆட்டங்களை ஆடுவதில்லை. சில கோயில்களில் பம்பையும் உடுக்கையும் சேர்ந்து பரவசம் மிகுந்த இசையை வேகவேகமாக எழுப்பி சன்னதம் வந்து ஆடும் சாமியாடிகளை உருவாக்குவது போல, நமது தமிழ்த் திரைப்படங்கள் காதல் உடுக்கையை வேக வேகமாக அடித்து அடித்து காதல் சாமியாடிகளை உருவாக்கி அவர்களை வெறி நடனமாடி வீதி உலா வரச் செய்கின்றன. வேதனை மிகுந்த இத்தகைய போக்குகளின் விளைவுகளைத்தான் நம் சமூகம் அனுபவித்து வருகிறது. பெற்றோரும் அனுபவித்து வருகின்றனர். ஒரு நிமிடம் கண்களை மூடிக்கொண்டு கற்பனை செய்தால் நமது தமிழ்த் திரையுலகின் ஒளிப்பதிவுக் கருவிகள், ஒலிப்பதிவுக் கூடங்கள், பாடல் பதிவுக் கூடங்கள் என ஒவ்வொன்றும் காதல் உணர்வு ஊற்றெடுக்கப் பயன்படுத்தப்படும் உடுக்கைகளாகவே தெரிகின்றன.

சிந்திக்கிற - படிக்கிற, மக்கள் குறைவாகவும், பார்க்கிற - கேட்கிற மக்கள் பெருவாரியாகவும் இருக்கிற நமது சமூகத்தில், அதிலும் படிக்கிற மக்களே கூட பார்க்கிற - கேட்கிற கலாசாரத்திற்குத் தங்களைப் பழகிக்கொண்டுவிட்ட இன்றைய சூழலில் ஊடகங்களிலேயே பெரும் ஊடகமாக - குறிப்பாக அனைத்து ஊடகங்களுக்கும் தாய் ஊடகமாக - நிலைபெற்றுவிட்ட திரைப்படத்தின் சமூகப்பொறுப்பு எத்தகையது என்பது உள்ளார்ந்த அக்கறையோடும், தொலைநோக்கு பார்வைகளோடும் உணரப்படவில்லை. ஒரு அபத்தத்தை எழுதுவதும், பேசி நடிப்பதும், வடிவமைப்பதும் ஒரே ஒரு முறைதான் நடக்கிறது. ஆனால், அந்த அபத்தம் எத்தனை ஆயிரம் முறை மீண்டும் மீண்டும் வெளியாகி மக்கள் மனதில் திணிக்கப்பட்டு நிலைநிறுத்தப்படுகிறது என்பதை ஊடக உலகம் நினைத்துப் பார்ப்பதாகத் தெரியவில்லை.

செய்ய வேண்டியவற்றைச் செய்வதைக் காட்டிலும், செய்யக்கூடாதவற்றைச் செய்யாமல் இருப்பதுதான் மனிதகுலத்தின் உண்மையான வளர்ச்சிக்கு அடிகோலும். அந்த அடிப்படையில் பார்த்தால் இன்றைய நம் தமிழ்த் திரையுலகம் எதை எதைச் செய்து கொண்டிருக்கிறது, எதை எதைச் செய்யாமல் இருக்கிறது என்பது எல்லோருககும் தெரியும். படைப்பாளிகளுக்கு இருககும் படைப்புரிமை என்பது சமூகத்தைப் பாழ்படுத்தும் உரிமையாக மாறலாகாது!

> போக்கிரித்தனங்கள் நிறைந்தவனாக, பொறுப்பற்றவனாக, குடிகாரனாக, உழைப்பதற்கு விருப்பமற்றவனாக, தனக்கு எவ்வகையிலும் பொருந்தாத தெருச்சண்டைகளில் பலரோடு மோதி வெல்பவனாக, வலிய வலியச் சென்று காதலிப்பவனாக சித்திரிக்கப்படுகிற ஒரு திரைப்பாத்திரம், அது போன்ற உணர்வுப் போக்குடைய இளைஞர்களுக்கான வலிமையான மறைமுக அங்கீகாரமின்றி, வேறு என்ன?

# யாழ். மாநகர சபையின் டெங்கு ஒழிப்பு செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு சிறப்பான முறையில் இடம் பெற்றுள்ளதாக யாழ்.மாநகரசபையின் பிரதம பொது சுகாதாரப்பரிசோதகர் க.ஆ.ஜீவநாதன் தெரிவித்துள்ளார்.

இதன்படி கடந்த 11ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை மாநகரசபையால் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளின் தொகுப்பு வருமாறு;

இதில் 11ஆம் திகதி வண்ணார் பண்ணை பொது சுகாதார பரிசோதகர்பிரிவில் ஐந்து பாடசாலைகள், ஒருஅரச நிறுவனம் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு அவற்றில் நுளம்பு பெருகும் இடம், குடம்பிகள் இனம் காணப்படவில்லை. மேலும் வீடுகள், பொது இடங்கள், ஏனைய நிலையங்கள் உட்பட 944 இடங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு 112 இடங்களில் காணப்பட்ட நுளம்புக் காவிகள் அழிக்கப்பட்டன.

மேலும் 05 நிலையங்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டும் இரண்டு நிலையங்களுக்கு எதிராக வழங்குத் தாக்கல் செய்யப்பட்டும் உள்ளது. பாடசாலை மாணவர்களுடன் இணைந்து விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது.

12ஆம் திகதி குருநகர் I குருநகர் II பொது சுகாதார பரிசோதகர்கள் பிரிவில் 05 பாடசாலைகள், 06 அரச நிறுவனங்கள் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டன.

இவற்றில் நுளம்பு பெருகும் இடங்கள், குடம்பிகள் கண்டு பிடிக்கப்படவில்லை மற்றும் 1927 வீடுகள் பொது இடங்கள் ஏனைய நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இவற்றில் 71 இடங்களில் காணப்பட்ட நுளம்பு பெருகும் இடங்கள் மற்றும் 20 இடங்களில் காணப்பட்ட குடம்பிகள் அழிக்கப்பட்டதுடன் 20 இடங்களுக்கு எதிராக அறிவித்தலும், வழங்கப்பட்டது. மேலும் 03 சிரமதான நிகழ்வுகளும் நுளம்புக்குடம்பிகளை அழிப்பதற்கு அபேற் கிறனியுல் என்ற இரசாயனப் பதார்த்தமும் தூவப்பட்டது.

13ஆம் திகதி அன்று நாவாந்துறைப் பொது சுகாதாரப்பரிசோதகர் பிரிவில் மொத்தமாக 1311 வீடுகள், பொதுஇடங்கள், நிலையங்கள் பரீட்சைக்குட்படுத்தப்பட்டதுடன் இவற்றில் 8,2 இடங்களில் காணப்பட்ட நுளம்புபெருகும் இடங்கள், 06 இடங்களில் காணப் பட்ட குடம்பிகள் அழிக்கப்பட்டன.

மேலும் மூன்று நிலையங்களுக்கு எதிராக அறிவித்தல் வழங்கப்பட்டதுடன் ஒரு நிலையத்திற்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டது.

## "காந்தீயம்" வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வெளியீடான காந்தீயம் பத்திரிகையின் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களுக்கான இதழ் வெளிவந்துள்ளது.

இவ்வெளியீட்டின் இலவச பிரதி ஒன்றை தபால் மூலமாகப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 5 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரி எழுதப்பட்ட நீண்ட தபால் உறையை ஆசிரியர் காந்தீயம், அகில இலங்கை காந்திசேவா சங்கம், இல 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும் என காந்தீயம் ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவித்துள்ளார். (10)

# விநாயகர் விக்கிரகம் அகற்றப்பட்டமை இரு சமூகங்களுக்கிடையில் முறுகல்

(வவுனியா)

வவுனியா பாரதிபுரத்தில் குடியேறி வரும் தமிழ் மக்களால் வழிபடுவதற்கென வைக்கப்பட்டிருந்த விநாயகர் விக்கிரகம் இனந்தெரியாதோரால் அகற்றப்பட்டமையினால் இரு சமூகங்களுக்கிடையில் முறுகல் நிலை ஏற்பட்ட சந்தர்ப்பதில் வவுனியா பொலிஸார் தலையிட்டு நிலைமையை சுமுகமாக்கியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா பாரதிபுரத்தில் விக்ஸ் காட்டுப்பகுதியில் காணியற்ற தமிழ் மக்கள் குடியேறி வரும் நிலையில் அங்கு விநாயகர் விக்கிரம் ஒன்றினை வைத்து வழிபாடுகளை மேற்கொண்டு வந்த நிலையில் இப்பகுதியில் குடியேறிவரும் இஸ்லாமிய மக்கள் அவ் விக்கிரகத்தினை அகற்றியதாக தெரிவித்து இரு சமூகங்களுக்கிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதுடன் தடி கம்புகளை ஏந்தியவாறு காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு அவர்கள் சம்பவ இடத்திற்கு சென்று நிலைமைகளை கட்டுப்படுத்தியதுடன் விநாயகர் விக்கிரகத்தினை அதே இடத்தில் வைத்துள்ளனர்.

இதனையடுத்து இரு தரப்பும் எதிர்வரும் திங்கட்கிழமை வவுனியா பிரதேச செயலாளருடன் கலந்துரையாடி இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை இப்பகுதியில் குடியேறிவரும் இருஇனங்களுக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடுகளை அரசியல் வாதிகள் தலையிட்டு சுமுகமாக்கியிருந்த நிலையில் மீண்டும் இப்பகுதியில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது



நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் வரணி சுட்டிபுரம் அம்பாள் அறநெறி மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டதனை காணலாம். (130)

# ஆயுர்வேதம்



## இரத்த ஓட்டம் தடைப்பட்டால்...?

உள்ளங்கால் மற்றும் குதிகால் பகுதிகளில் கடுமையான எரிச்சல், வலி ஏற்படுவது, கால்களில் இரத்த ஓட்டம் தடைப்படுவது போன்றவற்றுக்கு ஆயுர்வேத சிகிச்சை என்ன?

கால் பகுதிகளுக்குத் தேவையான பிராண வாயுவை ஏந்திச் செல்லும் இரத்தக் குழாய்களின் உட்புறச் சுவர் தடித்துப் போனாலோ, உட்புற விட்டம் சுருங்கினாலோ, இரத்தத்தின் வேக அழுத்தம் குறைந்து போகும் தறுவாயில், கடுமையான வலி, எரிச்சல், இரத்த ஓட்டத் தடை போன்ற உபாதைகள் தோன்றக்கூடும். புகை, மதுபானம், அதிகம் நேரம் கால்களைத் தொங்க விட்டு வேலை செய்தல், அதிகம் நடந்து வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம், சைக்கிள் சவாரி, நீச்சல், வண்டி ஓட்டுதல் போன்ற செயல்களால், கால் பகுதிகளிலுள்ள இரத்தக் குழாய்கள் வலுவிழக்கக் கூடும். நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இரத்த நாளங்கள், தசைநார்கள் போன்றவை விரைவில் செயலிழக்கும் ஆபத்திருப்பதால், அவற்றை வலுப்படுத்த வேண்டிய நிர்பந்தமும், இனிப்பின் அளவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டிய அவசியமுமிருக்கிறது.

இரவில் நன்றாக உறங்கி காலையில் எழுந்ததும், இரத்தக் குழாய்களுக்குத் தேவையான அளவு ஓய்வு கிட்டியிருப்பதால், ஆயுர்வேத மூலிகைத் தைலங்களாகிய பிண்டதைலம் மற்றும் நிசோசீராதி தைலத்தை வெதுவெதுப்பாகச் சூடாக்கி பஞ்சில் முக்கி எடுத்து எரிச்சல் வலி உள்ள பகுதிகளில் சுற்றி அதன் மேல் ஒரு துணியை இறுக்கமாக அல்லாமல், மிருதுவாகக் கட்டி சுமார் ஒரு மணி நேரம் ஊற வைத்த பிறகு, பஞ்சை எடுத்து விட்டு, வேறு ஒரு துணியால் எண்ணெய் ஊறிய பகுதியைத் துடைத்துவிடும் எளிய சிகிச்சை முறையால், இரத்தக் குழாய்களை நம்மால் மிருதுவாகச் செய்ய இயலும். அதன் ரப்பர் போன்ற தன்மையை இந்தத் தைல முறையில் ஏற்படுத்தினால், இரத்த ஓட்டம் சீராக வாய்ப்பிருக்கிறது. சுருங்கிய உட்புற விட்டம் விரியத் தொடங்கும்.

மூலிகைத் தைலங்களைக் கால்களில் தாரையாக தொடர்ந்து விழும்படி சுமார் 12 அங்குலம் மேலிருந்து பிடித்து ஊற்றும் சிகிச்சை முறையாலும், கால் எரிச்சல் வலி இரத்த ஓட்டத் தடையைக் குறைக்க உதவிடக் கூடும். தசமூலம் எனும் பத்து மூலிகைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் மூலிகைத் தண்ணீரை, எண்ணெய் ஊறிய பகுதிகளில் தாரையாக விடும் சிகிச்சை முறையும் சிறந்ததே.

அஸ்வகந்தா எனப்படும் அமுக்கரா சூரணத்தைச் சமார் 5 கிராம் அளவில் சிறிது சூடான பாலுடன் கலந்து காலை, மாலை வெறும் வயிற்றில் 48 நாட்கள் சாப்பிட கால் இரத்தக் குழாய்களை வலுப்படுத்த முடியும். இந்தச் சூரண மருந்து மூலிகை மருந்துக் கடைகளில் கிடைக்கும்.

நீரிழிவு உபாதைக்குப் பயந்து உணவில் அதிக அளவில் கசப்பும் துவர்ப்பும் நிறைந்த உணவு வகைகளைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், இரத்தக் குழாய்கள் விரைவில் வலுவிழக்கக் கூடும். அதனால் அவற்றை மிதமாகச் சாப்பிடுவதுடன், நெய்ப்புடன் கூடிய கோதுமை, உளுந்து, எள்ளு போன்ற உணவுகளையும் மிதமாகச் சாப்பிடுதல் நலம். குடலில் வறட்சி ஏற்படாமலிருக்க 10 மி.லீ தான்வந்திரம் அல்லது விதார்யாதி எனும் ஆயுர வேத மூலிகை நெய் மருந்துகளில் ஒன்றை லேசாக உருக்கி, காலை, இரவு உணவுக்கு அரைமணி நேரம் முன்பாக நக்கிச் சாப்பிடுதல் நல்லது. குடலில் ஏற்படும் நெய்ப்பை, இரத்தக் குழாய்களின் உட்புறம் வரை கொண்டு செல்லும் வேலையை வாயு எனும் தோஷம் பெற்றிருப்பதால், அதன் வேலைத்திறன் மங்காத வகையில் இந்த மூலிகை நெய் மருந்துகள் உதவிடக் கூடும்.

இப்படி உட்புறம் மற்றும் வெளிப்புறம் ஏற்படும் எண்ணெய்ப் பசையால் இரத்த நாளங்களில் உண்டாகும் கடினமான தன்மையையும், அவை சுருண்டு கொள்ளும் நிலையையும் நம்மால் தவிர்க்க முடியும் என்று ஆயுர்வேதம் கூறுகிறது.

# உட்கட்டுமான அபிவிருத்திகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்



மீள்குடியேற்றத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளின் ஒரு கட்டமாக முன்னெடுக்கப்பட்டு வந்த பிரதேசங்களின் உட்கட்டுமான பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.


நேற்று முன்தினம் கிளி நொச்சி திருவையாறு மற்றும் பாரதிபுரம் பிரதேசங்களில் யப்பான் அரசின் நிதியுதவியுடன் யூ.என் ஹபிராட் நிறுவனத்தினரால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற தலா 26 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு பொது நோக்கு மண்டபங்களுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அபிவிருத்தி என்பது எமது வருங்கால சந்ததியினருக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும் நாளை எமது சந்ததியினர் எம்மை நோக்கி எங்களுக்காக என்ன செய்தீர்கள் என கேள்வி கேட்பவர்களாக இருக்க கூடாது. அவர்களின் வளமான எதிர் காலத்திற்காக பொறுப்பு வாய்ந்த அனைவரும் அபிவிருத்தியில் அக்கறை கொண்டு செயற்பட வேண்டும் இன்று அபிவிருத்தியின் அவசியத்தை உணர்ந்து அதனை ஏற்றுக்கொள்ளும் அரசியல் சூழல் தோற்றுவிக்கப்பட்டுள்ளது இதனை நாம் மகிழ்வுடன் வரவேற்கின்றோம். மக்கள் அனைத்து வழிகளிலும் ஒரு நிறைவான சமூகமாக மாறுகின்ற போதுதான் தலை நிமிர்ந்து நிற்க முடியும் எனவும் குறிப் பிட்டார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவில் இது போல 19 பொது நோக்கு மண்டபங்கள் அமைக்கப்படவுள்ளன எனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன் கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், கரைச்சி உதவித்திட்டப் பணிப்பாளர் அமலதாஸ் மற்றும் யூஎன் ஹபிராட் நிறுவன உதவி திட்டமுகாமையாளர் க.பத்மானந்தன் மற்றும் கிராமஅலுவலர்கள், கிராம மக்கள், அமைப்பு பிரதி நிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் பல இலட்சம் ரூபா செலவில் தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டு வருவதை காணலாம். (66)

# சாரணர் இயக்கத்தின் ஆண்டு நிறைவு விழா

கொக்குவில் இந்துக் கல்லூரியின் சாரணர் இயக்கத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

சிறப்பு நிகழ்வுகளாக சாரணர் கழகத்தினது மலர் வெளியீடும், சாரணர் இயக்கத்திற்கான இணையத்தள அங்குரார்ப்பணமும், இதுவரை சாரணியத் துறையில் உயர் விருது பெற்ற சாரணர்களின் கௌரவிப்பும் இடம் பெறவுள்ளது. கல்லூரியில் மிக நீண்ட காலமாக செயற்படும் கழகமாக சாரணர் இயக்கம் திகழ்கின்றது. (48)

# விழிப்புணர்வை ஏற்படுத்தும் அணுகுண்டு குறும்படம்

தினேஷ் ஏகாம்பரத்தின் திருப்பதி எண்டர் டெயின்மெண்டின் உருவாக்கத்தில் அணுகுண்டுகள் என்னும் குறும்படம் தயாராகி வருகின்றது.

இளம் சமூகம் வழி தவறிச் செல்வதை மையமாக வைத்து இக் குறும்படம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், குறிப்பாக மது பாவனை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவுமே குறும்படத்தினை இயக்குவதாக இயக்குனர் தினேஷ் ஏகாம்பரம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்தவாரம் இக்குறும்படத்தின் பாடல் ஒன்று யூ ரியூப்ல் வெளியிடப்பட்டதாகவும் அதற்கு பலர் தங்கள் ஆதரவினை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இக்குறும்படத்தின் ஒளிப் பதிவை உமாசதீஸ், இசை யினை கேதீஸ், படத்தொகு ப்பை தேவா ஆகியோர் மேற் கொண்டனர்.

# பரமர் சங்கமம்



"கழுதை தேய்ந்து கட்டெறும்பானது" போலை நாட்டிலுள்ள எத்தனையோ காரண காரியங்கள் எண்டைக்குமே அப்புழத்தான் நடந்து கொண்டிருக்கிறது" இதற்கெல்லாம் அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் மத்தியில் இல்லாத ஒற்றுமைதான் காரணமாகிறது. 'தானும் தின்னான் தின்னுறவனையும் விடான்" எண்டொரு கூற்றும் இருக்குது. குருநகர் பகுதியில் அமந்துள்ள ஆண்கள் பாடசாலை சில வருடங்களுக்கு முன்பாக ஒரு சிலருடைய விடாமுயற்சியால் மகா வித்தி யாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டிருந்தது. சுற்றிலும் றெக்கிள மேஷன் குடியிருப்புச் சூழலில் அமைந்துள்ள மகாவித்தி யாலயம் முன்பாக புனித யாகப்பர் ஆலய வளாகத்துடன் அமைந்திருக்கும் சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையுடன் கலவன் பாடசாலையாக இயங்கியதும் குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம் இருக்கும் இடத்தில் இருந்து பெயர்த்து குருநகர் ,விளையாட்டு மைதானம் அமைந்துள்ள இடத்துக்கு கொண்டு செல்லும் முயற்சிகளில் ஐக்கிய முன்னணி அக்கால தலைமை ஈடுபட்டதற்கு பக்க உதவிகள் வழங்கப்படாமையால் அந்த முயற்சிகளும் மழுங்கடிக்கப்பட்டது.

ஊர் ரெண்டுபட்டால் ஆருக்கு நட்டம்? எதிர்காலச் சந்ததிகளின் கல்வி அபிவிருத்தியில் தூர நோக்கில்லாமல் செயற்பட்ட பாடசாலை அபிவிருத்தி வட்டாரங்கள் கல்லூரிக்கு கிடைத்த திறமை வாய்ந்த அதிபர்களின் சேவைகளையும் பெற முடியாமல் போனவைதான் கடந்த கால வரலாறுகள்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களை உள்வாங்கி ஆரம்ப வகுப்பு தொடக்கம் சாதாரண தரம் உயர்தரம் வகுப்பு வரைக்கும் வளர்ந்து மகாவித்தியாலய தரத்தைப்பிடித்துக் கொண்டுள்ள வித்தியாலயத்தில் உபகரணத்திருட்டுகள் நடைபெற்று வருவதால் வளப்பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை இரவு நேரக்காவலாளி நியமிக்கப்படாமைக்கு அயலில் நெருக்கடியான குடியிருப்புகள் அமைந்தது காரணமானால் வேலியே பயிரை மேயும் என்ற நிலைமையா தோன்ற வேண்டும்? வித்தியாலயத்துக்கு சொந்தமான நீரிறைக்கும் இயந்திரம் திருடப்பட்டுள்ளது.

அதன்காரணமாக மாணவர்கள்,ஆசிரியர்களின் அடிப்படைத் தேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. நிரந்தர அதிபராக இருந்தவர் மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இன்னமும் புதிய நிரந்தர அதிபர் நியமிக்கப்படாத நிலைமையில் மற்றொரு பாடசாலை ஆசிரியர் தற்காலிக அதிபராக செயற்படுவதாகவும் கூறப்படுகிறது.

ஆயிரத்தில் இருந்த் மாணவர் எண்ணிக்கை படிப்படியாக எண்ணூறு, எழுநூறாக்குறைந்திப்போ 178 பேர்கள் என்ற அடிப்படையில்வடபகுதிக்கல்வித்திணைக்களம் ,மகாவித்தியாலயத்தை ஐந்தாம் தரம் வரையான பாடசாலைத் தரத்திற்கு இறக்குவதற்கு ஆலோசித்து வருவதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன. சரிவை எதேச்சையாகச் சந்திக்கலாம் உயர்வதற்கு எத்தனை பாடுகள் படவேண்டும். கழுதை தேய்ந்து கட்டெறும்பாகுமெண்டதும் பொய்யாகவில்லை என்ன நான் சொல்லுறே விளங்குதெல்லே......

# விவாத அரங்கு

யாழ்.மாணவரிடையே தமிழ் அறிவையும் விவாதத் திறனையும் மேம்படுத்தும் நோக்கில் கே.யு. எடியுகேசன் நிறுவனம் பாடசாலைகளிற்கிடையேயான மாபெரும் விவாதப்போட்டியொன்றினை நடத்தவுள்ளது.

போட்டிகள் யாவும் எதிர்வரும் 19 மற்றும் 26ஆம் திகதிகளிலும் நவம்பர் மாதம் 02,09,16,29 ஆகிய திகதிகளிலும் யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம் பெறும்.

இதுவரை விண்ணப்பிக்காத பாடசாலைகள் 19.10.2013 இற்கு முன்னர் கே.யு நிறுவனத்துடன் கே.யு எடியுகேசன், இல 75 கோவில் வீதி, யாழ்ப்பாணம். 0213208342 என்றதொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

# முரசின் இன்றைய பலன்



(16.10.2013 புதன்கிழமை)


விஜய வருஷம் புரட்டாதி மாதம் 30 ஆம் திகதி.பிரதோஷவிரதம்
பூரட்டாதி நட்சத்திரம் பி.இ 03.21 வரை பின் உத்தரட்டாதி
துவாதசி திதி, அமிர்தசித்தநாமயோகம்
இராகுகாலம 12.02- 01.32 வரை. சுபநேரம 04.32- 06.02 வரை.


ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.


| | |
|---|---|
| மேடம் | மீள்பரீட்சைக்கு விண்ணப்பம் செய்ய முன்வரல். சேஷ்டை புரிந்ததனால் காவல்துறைக்கு அழைத்துச் செல்லப்படல். |
| ரிஷபம் | பிறரின் வசை மொழிகளை அலட்சியப்படுத்தியதால் உளப்பாதிப்படையாமை,கருத்துக்களைப் பேசித்தீர்த்துக் கொண்டதால் முரண்பாடு அகன்று விடல். |
| மிதுனம் | எதிர்மறை எண்ணங்களைக் கைவிட்டதால் வெற்றிக்கொடி நாட்டுதல், வர்த்தக நிலையத்தில் திருட்டு முயற்சியைக் காட்டிக் கொடுத்ததினால் ஊழியருக்கு கௌரவம். |
| கடகம் | இருதாரக் குற்றச்சாட்டில் தண்டனை பெறல். போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து பொருட்களைப் பெற முயற்சிப்பதால் சட்டத்தின் பிடியில் அகப்படல். |
| சிம்மம் | தனக்கு கிடைக்க வேண்டிய இடத்தை வேறு ஒருவருக்கு வழங்கியதால் கவலையுறல், விவாகத்திற்காக அயல்நாடு செல்ல விழைத்தல். |
| கன்னி | தொழிற்பயிற்சிச் சான்றிதழ் பெற்றதால் மகிழ்ச்சி, விளங்காத மொழியில் எழுதப்பட்ட கடதாசியில் கையொப்பமிட்டுப்பின் அவதிப்படல். |
| துலாம் | பாவனைக்குதவாத பொருட்களை இனிக்கப்பேசி விற்பனை செய்ய முயல்வார்க்ள், விவாகத்திற்காக கடன்படும் நிலையிலிருத்தல். |
| விருச்சிகம் | கடன் தொல்லை துரத்துவதால் வெளி நாட்டுக்குத்தப்பிச் செல்ல முயலல், எதிர்காலத்திட்டமொன்றை மனதில் வைத்து மாமனார் உதவி செய்யமுன்வரல். |
| தனுசு | தடக்கி வீழ்வதினால் சிரசில் பாதிப்ப ஏற்படல். பிரமச்சாரியத்தைக் கைவிட்டு இல்லற பந்தத்தில் இணைய விரும்புதல். |
| மகரம் | முற்றாகும் நிலைக்கு வந்த விவாகம் அமங்கல நிகழ்வினால் தடைப்படல், அயல்பிடிக்காமையினால் காணியைக் கைவிடும் நிலைப்பாடு. |
| கும்பம் | சம்பளக்குறைபாட்டினால் தொழிலைக் கைவிடுதல், பிராணிகள் குறுக்கிடுவதால் விபத்துப் பற்றிய அபாயம். |
| மீனம் | சட்ட விரோத பொருட்கள் விற்றதால் தண்டம், விவாகத்திற்கு மதம் தடையாக இருத்தலினால் கவலை, சமாந்தரப்பிரயாணத்தினால் எச்சரிக்கை செய்யப்படல். |


31. சந்தோஷ் தம்பதியினருக்கு மூன்று பெண் பிள்ளைகள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு ஆண் சகோதரர்கள் உள்ளனர். எனில் சந்தோஷ் தம்பதியினருக்கு எத்தனை பிள்ளைகள்?
1. 9    2. 5    3. 3

32. தரப்பட்ட கூற்றுக்கு பொருத்தமான வரிப்படத்தை தெரிக.
சூசை என்பவன் தனது சம்பளத்தில் 1/4 பங்கை உணவுக்கு செலவு செய்தான் தொலைபேசிக்கு செலவு செய்ததன் 3 மடங்கு பணத்தை வங்கியில் வைப்பிலிட்டான்.உணவுக்கு செலவு செய்த தொகையினையே உடை வாங்கவும் செலவு செய்தான்.

1. 


2. 


3. 


33. 
தரப்பட்ட தள வடிவங்களைப் பயன்படுத்தி அமைக்கக்கூடிய திண்ம வடிவங்கள் எவை?
1. சதுரமுகி,கூம்பகம்
2. கனவுரு, சதுரமுகி
3. நான்முகி,கனவுரு

34. எல்லா மாணவர்களிற்கும் பொதுவான இயல்பு எது?
1. அதிகமான நண்பர்களைக்கொண்டிருத்தல்
2. ஏதேனும் ஒரு வகுப்பில் கல்வி கற்றல்
3. தினமும் 5 மணி நேரம் பாடம் படித்தல்

❖ **ஒவ்வொரு வினாவிலும் மூன்று கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. முதல் இரு கூற்றுக்களையும் அடிப்படையாகக் கொண்டு மூன்றாவது கூற்றை ஊகித்து கொள்ளமுடியுமெனின் (✓) எனவும் அவ்வாறு இல்லை எனின் (✗) எனவும் அடையாளமிடுக.**

35. நிமால் கணித பாடத்தில் திறமையானவன்
சுமன் தமிழ் பாடத்தில் திறமையானவன்
எனவே நிமால்,சுமன் இருவரும் ஆங்கில பாடத்தில் திறமையானவர்கள் ( )

36. காவியாவும் ஓவியாவும் சகோதரிகள்
திவ்யாவும் காவியாவும் சகோதரிகள்
ஆகவே ஓவியாவும் திவ்யாவும் சகோதரிகள் ( )

37. நீர் திரவம் என்பது போல் பனிக்கட்டி திண்மம் ஆகும் இக்கூற்று
1. சரியானது    2. பிழையானது    3. கூறமுடியாது

38. மாலைக்கண் - விற்றமின் A எனின் கண்டமாலை ........................ இடைவெளிக்கு வரவேண்டியது
1. கல்சியம்    2. அயடீன்    3. புரதம்

❖ **புலமைப்பரிசில் பரீட்சை நேரசூசி தரப்பட்டுள்ளது. விடுபட்ட வெற்றிடங்களை நிரப்புக.**

| | தொடக்கம் | முடிவு | விடயம் |
|---|---|---|---|
| 39. | ............... | மு.ப 10.00 | பகுதி (i) 45 நிமிடம் |
| | 10.00 | 10.30 | இடைவேளை |
| 40. | 10.30 | ................... | பகுதி (ii)1மணி15நிமிடம் |





## தரம் - 5 புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2014

# கல்வி முரசு









❖ **எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.**

1) தரப்பட்ட பிராணிகளை அவற்றின் இயல்பிற்கேற்ப இரண்டு கூட்டங்களாகப்பிரிக்கலாம்

A  B  C  D 

சரியான கூட்டத்தை தெரிவு செய்க.
1) AD,BC    2) AB,CD    3) AC,BD

2) தரப்பட்ட பொருட்ளை மூன்று கூட்டங்களாகப்பிரிக்கலாம்

     
A B C D E F

சரியான கூட்டத்தை தெரிவு செய்க.
1) AD,BF,CE    2) BD,AC,EC    3) BE,AD,CF

❖ **கூடுகளில் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் மூன்று எழுத்துக்களை கொண்ட மூன்று சொற்கள் உருவாவதற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

3.

| | | |
|---|---|---|
| அ | | து |
| ர | | ம் |
| சி | | பு |

1. மு க ம்    2. ச த ம்    3. க வி தை

4.

| | | |
|---|---|---|
| த | கு | தி |
| | | |
| சி | ம் | பு |

2. கதிரை    2. அவரை    3. வடம்

5. அறிவாளிகள் எப்போதும் அமைதியாகவே இருப்பார்கள் என்ற பொருள் தரும் பழமொழி
1. திக்கற்றவனுக்கு தெய்வமே துணை
2. குறைகுடம் தளம்பும் நிறைகுடம் தளம்பாது
3. ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்


6. ஒருவாறு முன் வரிசையில் இடம் பிடித்துக்கொண்டேன் என்பதால் கருதப்படுவது.
1. கஸ்டப்பட்டு முன்வரிசையில் இடம்பிடித்துக்கொண்டேன்
2. ஒருமுறை மட்டும் முன்வரிசையில் இடம்பிடித்துக்கொண்டேன்
3. நேரத்துடன் முன்வரிசையில் இடம்பிடித்துக்கொண்டேன்

7. XXV-XIV இப்பிரசினத்திற்கு சமனான பிரசினத்தை தெரிவு செய்க

1. XV-V 2. XIV-VII 3. IV+VII


8. 2012 ஆம் ஆண்டு 21ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்பத்திற்கு உரியதாகும் எனின் 1954 ஆம் ஆண்டு
1. 20 ஆம் நூற்றாண்டின் 5ஆம் தசாப்தம்
2. 21 ஆம் நூற்றாண்டின் 5ஆம் தசாப்தம்
3. 20 ஆம் நூற்றாண்டின் 6ஆம் தசாப்தம்

9. 19 ஆம் நூற்றாண்டின் இறுதி தசாப்பத்திற்கு உரிய ஆண்டு எது?
1. 1896 2. 1998 3. 1950

10. 

வட்டம் ஒன்றின் ஆரை 4cm எனின் சதுரத்தின் சுற்றளவு யாது?

1. 16 cm 2. 32 cm 3. 24 cm

11. 


தரப்பட்ட பற்சக்கரங்களில் C வலஞ்சுழியாக சுழல்கின்றது எனின் D யும் B யும் பற்றிக்கூறக்கூடியது.
1. B வலப்பக்கமும் D இடப்பக்கமும் சுழல்கின்றது.
2. B உம் D உம் இடப்பக்கம் சுழல்கின்றது.
3. B உம் D உம் வலப்பக்கம் சுழல்கின்றது.

◆ **சில வருடங்களில் டிசம்பர் 31ஆம் திகதி வாரத்தில் என்ன நாள் என்பதை அட்டவணை காட்டுகின்றது.**


| வருடம் | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|---|---|---|
| டிசம்பர்31ம் திகதி | திங்கள் | செவ்வாய் | புதன் | வெள்ளி | சனி | ஞாயிறு | -------- | -------- |

12. இதற்கமைய 2007 டிசம்பர் 31ஆம் திகதியும் 2008 டிசம்பர் 31ஆம் திகதியும் முறையே,
1. திங்கள்,செவ்வாய் 2. திங்கள்,புதன் 3. செவ்வாய்,புதன்

13. இதற்கு ஏற்ப 2000ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி என்ன கிழமை
1. ஞாயிறு 2. சனி 3. திங்கள்

◆ **வரிப்படத்தின் உதவியுடன் 14ஆம்,15 ஆம் வினாக்களிற்கு விடை தருக.**

14. பேருந்து ஒன்று A நகரத்தில் இருந்து B நகரத்திற்கு சென்ற பயணப்பாதையை படம் காட்டுகின்றது. பேருந்து பயணம் செய்த திசைகள் முறையே.





1. மேற்கு,தெற்கு,தென்கிழக்கு,மேற்கு
2. கிழக்கு,வடக்கு,வடமேற்கு,கிழக்கு
3. கிழக்கு,தெற்கு,வடகிழக்கு,கிழக்கு

15. பேருந்து A நகரில் இருந்து B நகரை அடைவதற்கு 10ℓ பெற்றோல் செலவானது எனில் 1ℓ பெற்றோலில் வாகனம் செல்லும் தூரம் யாது?
1. 7 km 2. 10 km 3. 11km

16. 26-247 கட்டத்தில் உள்ள எண்களிற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
1. ஒற்றைஎண் - முதன்மைஎண்
2. ஆங்கில எழுத்துக்கள் - தமிழ் எழுத்துக்கள்
3. சதுரஎண் - முக்கோணஎண்



17. 

தரப்பட்ட சதுரத்தின் சுற்றளவு 48 cm ஆகும்.இச்சதுரத்தை புள்ளிக்கோட்டின் வழியே இரு சமனாக வெட்டிய பின்பு வரும் செவ்வகம் ஒன்றின் சுற்றளவு யாது?
1. 36 cm 2. 48 cm 3. 30 cm

◆ **M+M=18 எனவும் M- N=3 எனவும் N+5=P எனவும் காட்டப்பட்டுள்ளது.**

18. p இன் பெறுமானம் யாது?
1. 9 2. 10 3. 11

19. m+n+p இன் பெறுமானம் யாது?
1. 26 2. 31 3. 28

◆ **சில பழங்களின் விலைகள் கீழே தரப்பட்டுள்ளன.**

| 1 வாழை, 1 தோடை | 1 தோடை, 1 அப்பிள் | 1 அப்பிள், 1 வாழை |
|---|---|---|
| 30.00 | 40.00 | 34.00 |

20. வாழை ஒன்றின் விலை யாது? ..............................
21. அப்பிள் ஒன்றின் விலை யாது? ..............................
22. தோடை ஒன்றின் விலை யாது? ..............................

◆ **பின்வரும் வினாக்களுக்கு அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப செய்படுக.**

23. சூடுமிதிக்கும் இடத்தில் எருதுகளிற்கு வழங்கப்படும் பெயர் காளை எனின் அடைப்பினுள் ( S ) என எழுதுக. பொலிநடையன் எனில் ( T ) என எழுதுக. ( )


24. வருடம் ஒன்றில் 30 நாட்களைக் கொண்ட மாதங்கள் நான்கு இருப்பின் அடைப்பினுள் ( ✓ ) என அடையாளமிடுக. ஐந்து மாதங்கள் இருப்பின் ( ✗ ) என அடையாளமிடுக. ( )

◆ **பாடலின் உதவியுடன் 25 ஆம் 26 ஆம் வினாக்களிற்கு விடையைத் தெரிக.**

சூழையே நீ குடித்தாலும்
குளித்த பிறகே குடியப்பா
ஏழையே நீ ஆனாலும்
இரவில் நன்றாய் உறங்கப்பா

25. இப்பாடலில் நீ என கவிஞர் குறிப்பது
1. சிறுவன் 2. மக்கள் 3 தன்னை

26. இப்பாடலுக்கு பொருத்தமான பழமொழி
1. இரக்கப்போனாலும் சிறக்கப்போ
2. கந்தையானாலும் கசக்கிக்கட்டு
3. உப்பிட்டவரை உள்ளளவும் நினை

27. 


இதனுள் இதுபோன்ற இன்னும் எத்தனை வட்டங்கள் வரைய முடியும்.
1. 9 2. 7 3. 6

28.

| | | |
|---|---|---|
| 1 | | 5 |
| 3 | | 2 |
| 6 | | 3 |

கூட்டிலுள்ள எண்களை குறுக்காகவும் மேலிருந்து கீழாகவும் கூட்டும்போது ஒரே கூட்டுத்தொகை வரும் வகையில் வெற்றுக்கூட்டில் அமைய வேண்டிய எண்கள் கொண்ட விடை எது?

1. 4, 5, 1 2. 5, 5, 1 3. 4, 5, 1

29. 


நாணயம் ஒன்று மேலே சுண்டி விடப்பட்டு தலை, பூ விழுந்த தடவைகள் அருகே தரப்பட்டுள்ளது. நாணயம் எத்தனை தடவைகள் சுண்டப்பட்டது?
1. 6 2. 5 3. 9

30. சிவஞானம் ஏப்ரல் 24 ஆம் திகதி இந்தியாவிற்கு புறப்பட்டு சென்று 5 வாரங்களின் பின்னர் மீண்டும் திரும்பி வந்தார். அவர் வந்தடைந்த தினம் எது?
1. மே 22 ஆம் திகதி 2. மே 24 ஆம் திகதி 3. மே 29 ஆம் திகதி.

# இந்தியா செல்லும் விமான பயணிகள்;
# கவனம் செலுத்தும் சுங்கப் பிரிவு




(கொழும்பு)

இந்தியாவின் சென்னை, மும்பை மற்றும் மதுரை ஆகிய பகுதிகளுக்கு விமானம் மூலம் பயணிப்பவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளதாக இலங்கை சுங்கப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் இந்தியாவிற்கு தங்கத்தை கடத்தும் சம்பவங்களை கருத்திற்கொண்டு, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளரும், சுங்கப பணிப்பாளருமான லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இவ்வாறான சுமார் 50 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கடந்த இரு மாதங்களில் நாட்டிலிருந்து சட்டவிரோதமான முறையில் தங்கத்தை கொண்டுசெல்லும் நடவடிக்கை 20 தடவைகள் முறியடிக்கப்பட்டதாக லெஸ்லி காமினி குறிப்பிட்டுள்ளார்.

சிலர் மிகவும் சூட்சுமமான முறையில் தங்கத்தை தமது உடலில் மறைத்து எடுத்துச் செல்கின்றமையை கடந்த காலங்களில் கண்டறிய முடிந்ததாகவும், அது தொடர்பில் சுங்க உத்தியோகத்தர்கள் அதிக கவனம் செலுத்தியுள்ள தாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைதல், இந்தியாவில் தங்கத்திற்கு விதிக்கப்பட்டுள்ள அதிக வரி உள்ளிட்ட சில காரணங்களால் இந்தியாவிற்கு சட்டவிரோதமான முறையில் தங்கம் கொண்டுசெல்லும் நடவடிக்கை அதிகரித்துள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................................

முகவரி :- ..............................................

பிறந்த ஆண்டு :- ..............................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# மிருதங்க அரங்கேற்றம்



யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மிருதங்க விரிவுரையாளர் நல்லை க. கண்ணதாசனின் மாணவன் ஞானவேல் வசந்தின் மிருதங்க அரங்கேற்றம் வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வவுனியா கலாசார மண்டபத்தில் கோப்பாய் ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் செந்தமிழ்ச் சொல்லவி ச.லலீசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழக ஆங்கிலத் துறை விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன், தண்ணுமை வேந்தன் மா.சிதம்பரநா தன், நாட்டியப் பேராசான் கலைஞர் வேல். ஆனந்தன், வவுனியா தெற்கு பிரதேச செயலர் கா.உதயராசா, வவுனியா நிருத்திய நிகேதன் நுண்கலைக் கல்லூரி அதிபர் சூரியயாழினி வீரசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலாநிதி தமிழ்மணி நா.அகளங்கன், கலாபூஷணம் தேவிமனோகரி நாகேஸ்வரன் ஆகியோர் வாழ்த்துரைகளையும் மிருதங்க வித்துவான் கலாபூஷணம் க.கனகேஸ்வரன் மதிப்பீட்டுரையையும் வழங்குவர்.

அரங்கேற்றம் காணும் வசந் வவுனியா ஞானவேல் பவானி தேவி தம்பதியரின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.(90)

# மலைப்பாம்பு உருவில் பெருங்குடல்
# அறுவைச் சிகிச்சையில் சாதனை



(மட்டக்களப்பு)

நோயாளி ஒருவரின் வயிற்றில் மலைப் பாம்பின் உருவில் சுருண்டு காணப்பட்ட பெருங்குடல் ஒன்று சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டு அந்நோயாளி காப்பாற்றப்பட்டுள்ளார்.

இந்த அதிசய நிகழ்வு நேற்று முன்தினம் சம்மாந்துறை அன்வர் இஸ்மாயில் ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

மருதமுனையைச் சேர்ந்த பிரபல சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.டபிள்யூ.எம்.சமீம் இந்த சத்திர சிகிச்சையை மேற்கொண்டு நோயாளியின் உயிரைக் காப்பாற்றியுள்ளார்.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட குறித்த நோயாளியின் வயிற்றினுள் இருந்த பெருங்குடல் மலைப் பாம்பின் உருவில் ராட்சதமாக மாறி ஆபத்தான கட்டத்தில் இருப்பதை அவதானித்து வியப்படைந்தோம் எனத் தெரிவித்த சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.டபிள்யூ.எம்.சமீம் நாம் விரைந்து செயற்பட்டு மிகவும் நுட்பமாக சத்திர சிகிச்சையை மேற்கொண்டு அதனை முற்றாக அகற்றினோம் எனக் குறிப்பிட்டார். இந்தச் செயற்பாடு மேலும் ஒரு மணி நேரம் தாமதமடைந் திருக்குமானால் நோயாளியின் உயிருக்கு அது ஆபத்தாக அமைந்திருக்கும்.

எனினும் நாம் மேற்கொண்ட அவசர நடவடிக்கை காரணமாக சுமார் நான்கு மணித்தியாலம் சத்திர சிகிச்சை மேற்கொண்டு அந்த மலைப் பாம்பின் உருவில் காட்சியளித்த பெருங்குடலை இறைவனின் உதவியால் வெற்றிகரமாக அகற்றி அவரை உயிராபத்தில் இருந்து காப்பாற்றியுள்ளோம் என்று டாக்டர் ஏ.டபிள்யூ.எம்.சமீம் மேலும் தெரிவித்தார்.

# கடையிற் சுவாமிகள் குருபூசை தினம் இன்று

எல்லாம் வல்ல சிவபெருமானுடைய பேரருட்கருணைக்கு பாத்திரமாகி எல்லையில்லாத பேரானந்த முத்தி நிலையினை உண்மையாக அனுபவித்த பெருந்தகைமிக்க சுவாமிகளான கடையிற் சுவாமிகளுடைய குருபூசைத் தினம் இன்றாகும்.

உலக நியதியை உணர்ந்த தத்துவஞானியான கடையிற் சுவாமிகள் ஈழத்துச் சித்தர் பரம்பரையிலே வந்த ஓர் அற்புத சித்தர் இவருடைய முகத்திலே எப்போதும் ஒரு தேஜஸ் இருக்கும நல்ல வசீகரமான தோற்றத்துடைய இவர் இந்தியாவிலே கன்னடதேசத்திலே ஒரு தலைசிறந்த நீதிபதியாக கடமையாற்றினார் இவர் ஒரு முறை ஒரு குற்றவாளிக்கு மரண தண்டனையை விதித்தார்.

குற்றம் நிரூபிக்கப்பட்டாலும் இவருக்கு மனத்திலே ஓர் ஆழ்ந்த இரக்கமும் கவலையும் வந்துவிட்டது. இறைவன் தந்த உயிரைப் பறிக்க எனக்கு என்ன அருகதையிருக்கிறது? ஆண்டவன் படைப்பை அழிப்பதற்கு நான் யார்? அந்தக் குற்றவாளியின் உயிரை எடுப்பதற்கு எனக்கு என்ன உரிமை இருக்கிறது? ஏன்று சிந்தித்த இவர் தம்முடைய பதவியை இராஜினமா செய்து விட்டு சந்நியாசிகப் புறப்பட்டாராம் என்று சொலலப்படுகிறது.

இவருடைய அருமையையும் பெருமையையும் உணர்ந்த யாழ்ப்பாணத்துப் பெரியகடை வியாபாரியான வைரமுத்துச் செட்டியார் என்பார் அவருடைய திருவடியிலே வீழ்ந்து வணங்கி, "சுவாமிகளே! நீங்கள் எங்களுடைய யாழ்ப்பாணத்துக்கு ஒரு முறை விஜயஞ் செய்ய வேண்டும்" என்று பணிந்து நின்றார். அவர் அதற்கு எவ்வித பதிலும் சொல்லவில்லை.

பின்னர் வைரமுத்துச் செட்டியார் இந்தியாவிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்துவிட்டார். ஒரு வெள்ளிக்கிழமை இந்த அதிசயம் நடந்தது. ஓர் அற்புதமான நிகழ்வு அது.

ஒருநாள் மதியம் வைரமுத்துச் செட்டியார் நல்லூர் கந்தப் பெருமானை வணங்கி விட்டு. இல்லறம் திரும்பிக் கொண்டிருந்தார் அதற்கு முன்னமே சிவபெருமானுடைய அடியவர் என்று சொல்லிக் கொண்டு ஒரு சந்நியாசி இவருடைய அடியவர் என்று சொல்லிக்கொண்டே ஒரு சந்நியாசி இவருடைய இல்லம் சென்று பசிக்கிறது சாப்பிடலாமா? என்று கேட்டுவிட்டு விறுவிறு என்று வீட்டின் உள்ளே வந்து சாப்பிட அமர்ந்து விட்டார். அந்தவேளை அவரின் பக்கத்திலே இன்னோரிலை போட்டு அவருக்கும் சோறுகறி பரிமாறப்பட்டது. ஆளில்லை, ஆனால் உணவு பரிமாறப்பட்டது.

வீட்டுக்கு வந்த வைரமுத்துச் செட்டியாருக்கு தமது இல்லத்தினுள்ளே சுவாமிகள் இருப்பதைக் கண்டு "சுவாமிகளே எப்போது வந்தீர்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார். அதற்கு அவரோ "நீ வருமாறு அழைத்தாய்! வந்துவிட்டேன்" என்று சிரித்த முகத்துடன் பதிலளித்தார். பின்பு உனக்குத் தான் இலையிலே சோறு போடுவித்தேன். வந்திருந்து சாப்பிடு என்றார். உடனே மயிர்க்கூச் செறிய அவர் அமர்ந்து சாப்பிட்டார். அன்று முதலாக அவர் யாழ்ப்பாணம் பெரியகடைப் பகுதியில் வாழ்ந்து வரலாயினார். கடைப்பகுதியிலே வாழ்ந்தமையால் "கடையிற்சுவாமிகள் என்று அழைக்கப்பட்டார்.

தமது கடைசிக் காலத்தை நீராவியடியிற் கழித்த சுவாமிகள் 1891 ஆம் ஆண்டு புரட்டாரதி மாதம் பூரட்டாதி நட்சத்திரத்திலே சுவாமி நிலை அடைந்தார். ஆன்ம ஈடேற்றத்துக்கு வழி காட்டியாகவிருந்த கடையிற்சுவாமிகளை சைவமக்கள் ஒவ்வொருவரும் இன்று நினைவு கூர்ந்து வணங்கி வாழ்த்த வேண்டும்.

* * *

**தெய்வத் தமிழ்ச் சுடர்**
**கலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்**

# அமெரிக்கப் படைகள் நிலை கொண்டால் பாரிய விளைவுகள் ஏற்படும்

## தலிபான்கள் எச்சரிக்கை



2014 இற்கு பிறகும் ஆப்கனில் அமெரிக்கப் படைகள் நீடிக்கும் என்ற ஒப்பந்தத்தை நிறைவேற்றினால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என தலிபான் பயங்கரவாத அமைப்பு தலைவர் முல்லா முகமது ஓமர் எச்சரிக்கை விடுத்துள்ளார். பயங்கரவாத அமைப்பான அல் கொய்தாவை அழிக்க, அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையைச் சேர்ந்த 87,000 வீரர்கள் ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் கெர்ரி, ஆப்கன் அதிபர் ஹமீத் கர்சாய் ஆகியோர் இடையே கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தையில், 2014 ஆம் ஆண்டுக்கு பிறகும் அமெரிக்கப் படைகள் ஆப்கானில் நீடிக்கவும், அவர்களுக்கு ஆப்கானில் உள்ள இராணுவ இடங்களை குத்தகைக்கு விடுவது குறித்தும் இருநாடுகளுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டுளளது. இதையடுத்து இந்த ஒப்பந்தத்தை ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்தில் அடுத்த மாதம் நிறைவேற்ற அதிபர் கர்சாய் முடிவு செய்துள்ளார்.

இந்த உடன்பாட்டுக்கு தலிபான் பயங்கரவாத அமைப்பினர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்காவுக்கு இராணுவ இடங்களை வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதை ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றக் கூடாது.

ஆப்கனில் அமெரிக்கப் படைகள் தொடர்ந்து நீடித்தால் கடும் விளைவுகளை அமெரிக்கா சந்திக்க நேரிடும். முன்பைவிட அதிக உத்வேகத்துடன் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்துவோம். வெளிநாட்டு சக்திகளின் சூழ்ச்சிகளைத் தடுக்க ஆப்கன் மக்கள், அதிபர் தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்று ஓமர் தெரிவித்துள்ளார்.

# அணுத்திட்ட அழுத்தங்கள் தளர்த்துவது பாரிய தவறு

## எச்சரிக்கிறார் நெத்தன்யாஹீ



ஈரானின் அணுத்திட்டங்கள் தொடர்பான அழுத்தங்கள் தளர்த்தப்படுகின்றமை வரலாற்று ரீதியான தவறு என இஸ்ரேல் பிரதமர் பெஞ்ஜமின் நெத்தன்யாஹு எச்சரித்துள்ளார்.

உலகில் அதிகாரமிக்க நாடுகளுக்கும், ஈரானுக்கும் இடையில் ஜெனிவாவில் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ள நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஈரான் மீதான இஸ்ரேலின் அழுத்தங்கள் தொடர்ந்தும் பேணப்பட வேண்டுமெனவும், குறிப்பாக தற்போதைய தருணத்தில் அது மிகவும் முக்கியமானது எனவும் அவர் கூறியுள்ளார்.

குளிர்கால நாடாளுமன்ற கூட்டத் தொடரில் உரையாற்றிய போது அவர் இந்த விடயங்களைக் கூறியுள்ளதாக சர்வதேச தகவல்கள் குறிப்பிடுகின்றன.இதனிடையே ஜெனிவாவில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் திட்ட வரைபொன்றை எட்ட முடியும் என ஈரானின் வெளிவிவகார அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பாதுகாப்பு பேரவையின் நிரந்த உறுப்பு நாடுகள் மற்றும் ஜேர்மனியுடன் நடைபெறவுள்ள இந்தப் பேச்சுவார்த்தையில், ஈரானை பிரநிநிதிப்படுத்தி, பிரதி வெளிவிவகார அமைச்சர் கலந்துகொள்ளவுள்ளார்.

# செங்சிலுவைச் சங்க பணியாளர்கள் 7பேர் சிரியாவில் கடத்தல்




சிரியாவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச்சேர்ந்த 7 பேர் ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டுள்ளதாக, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடத்தப்பட்டவர்களில், ஆறு பேர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வெளிநாட்டுப் பணியாளர்களாவர்.

ஒருவர் செம்பிறைச் சங்கத்தின் உள்ளூர் தொண்டர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, இட்லிப் மாகாணத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பணியாளர்களின் வாகனம் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக அரச ஊடகம் தகவல் வெளியிட்டிருந்தது. கடத்தப்பட்டவர்களை உடன் விடுவிக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கோரியுள்ளது.

# பிலிப்பைன்சில் பாரிய பூமியதிர்ச்சி 20 பேர் பலி; 33 பேர் படுகாயம்



மத்திய பிலிப்பைன்சில் ஏற்பட்டுள்ள பாரிய பூமியதிர்ச்சி காரணமாக குறைந்தபட்சம் 20 பேர் உயிரிழந்துள்ளதுடன், 33 பேர் காயமடைந்துள்ளனர்.

பிலிப்பைன்சின் பொஹோல் தீவில் உள்ள கார்மன் நகரை மையமாகக் கொண்டு நேற்று காலை 8.12 மணிக்கு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவுகோலில் 7.2 ஆக பதிவாகி இருந்ததாகவும், 56 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்டதையடுத்து செபு நகர் அருகில் உள்ள மீன் துறைமுகத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததில் 4 பேர் பலியாகினர். மேலும் செபு மாகாணத்தில் மார்க்கெட்டில் மேற்கூரை இடிந்து விழுந்ததில் 2 பேர் பலியாகினர் மற்றும் 19 பேர் காயமடைந்தனர்.

நிலநடுக்கம் ஏற்பட்டவுடன் மக்கள் அலறியடித்துக் கொண்டு வீடுகளை விட்டு வெளியே ஓடி வந்தனர்.

கார்மனின் தென்மேற்கு பகுதியில் உள்ள லோபோக் நகரில் இருக்கும் 17 ஆவது நூற்றாண்டு தேவாலயம் இடிந்து விழுந்தது.

இது தவிர அப்பகுதியில் உள்ள பல பழைய தேவாலயங்கள் சேதம் அடைந்துள்ளன. நேற்று பிலிப்பைன்சில் தேசிய விடுமுறை என்பதால் பள்ளிகள் மற்றும் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன.

சுற்றுலாவுக்கு பிரசித்தி பெற்ற இடமான போஹோல் தவில் இந்தப் பூமியதிர்ச்சி நிலத்திற்கு அடியில் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக சுனாமி பேரலை ஏற்படாது என்று எதிர்பார்க்கப்படுவதாக பசுபிக் சுனாமி கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

## உலகச் செய்திகள்

## ஒரு பொருளாதார...

பேராசைப்படுவதற்காக ஆண்களுக்கும் பெண்களுக்கும் பரிசளிக்கப்படும்போது பேராசை நியாயமானதாக, தூண்டுகோலாக, உந்துவிசையாக ஆகிவிடுகிறது. பூமியின் இயற்கை வளங்களை அரக்கத்தனமான நுகர்வுக்கு உட்படுத்துவதை புனிதமான ஒன்றாகக் கருதும்போது, சமனற்ற வாழ்க்கை வாழும் இந்தச் சிறுபான்மை மேட்டுக்குடியினரைப் பின்பற்றும்படி நமது குழந்தைகளுக்குக் கற்றுத்தரும்போது, சிறுபான்மையினரான மேல்தட்டு வர்க்கத்தினரின் சேவர்களாகப் பெரும்பான்மை மக்களை வரையறுக்கும் போது நாம் தொல்லையை நாடிப் போகிறோம். நாம் தேடியது கிடைக்கிறது.

உலகைப் பேரரசை நோக்கிய பாய்ச்சலில் முன்னிற்கும் நிறுவனங்களும், வங்கிகளும், அரசாங்கங்களும் (சுருக்கமாகச் சொல்வதானால், நிறுவன அதிகார வர்க்கம்) தங்கள் அதிகாரங்களையும் பண பலத்தையும் பயன்படுத்தி, நமது பள்ளிகளும், ஊடகங்களும் இந்தக் கற்பனையான கருத்தையும் அதன் விளைவுகளையும் ஆதரிக்கும்படி செய்கின்றன. இந்த அரக்கத்தனமான இயந்திரமயமான உலகப் பண்பாட்டின் தீராத பசி கண்ணில் தென்படும் அனைத்தையும் நுகர்ந்துவிட்டு இறுதியில் தன்னைத்தானே விழுங்கிக் கொள்வதைத் தவிர வேறு மாற்று வழி இல்லாத ஒரு கட்டத்திற்கு நம்மைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

பொருட்களை வாங்குவது மறுக்க முடியாத கடமை பூமியைக் கொள்ளையிடுவது பொருளாதார வளர்ச்சிக்கு உகந்தது. இக்கருத்தை நம்மீது திணிக்கச் சாத்தியமான எல்லா வாய்ப்புகளும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த அமைப்பிற்கு ஏலம் கூறும் வேலையைச் செய்ய என்னைப் போன்றவர்களுக்குப் பணம் கொட்டிக் கொடுக்கப்படுகிறது. நாங்கள் எங்கள் வேலையில் தோல்வியடைந்ததால் இன்னும் மோசமான அடியாட்கள் - குள்ள நரிகள் என்று அழைக்கப்படுபவர்கள் - அரங்கிற்கு வருவார்கள். அவர்களும் தோல்வியடையும் பட்சத்தில் அந்த வேலை இராணுவத்தின் தலையில் சுமத்தப்படுகிறது.

இந்த நூல் எழுதப்பட்டதன் நோக்கம் உண்மையை வெளிப்படுத்துவதும், அதன்மூலம் நம் வரலாற்றை மாற்றியமைப்பதுமேயாகும். நாம் எப்படி உலகின் மூலவளங்களின் மேல் தீராப் பசியை உருவாக்கும் பொருளாதார இயந்திரத்தால் சுரண்டப்படுகிறோம், அது எப்படி அடிமைத்தனத்தை முன்னிறுத்தும் அமைப்புகளை உருவாக்குகின்றது என்பதை நம்மில் போதுமான அளவினர் உணர்ந்து கொண்டால், அதை இனிமேலும் சகித்துக் கொள்ளமாட்டோம் என்பது எனக்கு உறுதியாகத் தெரிகிறது. சிலர் மட்டும் செல்வத்தில் மூழ்கித் திளைக்கும்போது பெரும்பாலோர் வறுமையிலும், சீரழிந்துபோன இயற்கைச் சூழலிலும், வன்முறையிலும் வதைபடும் இவ்வுலகில் நம் பாத்திரத்தை மறு ஆய்வு செய்வோம். சமூக நீதி, ஜனநாயகம், அன்பு ஆகியவற்றை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதற்கான பயணத்தில் நம்மை இணைத்துக் கொள்வோம்.

# வியட்நாமில் "நாரி" புயல் மீட்புப் பணியில் இராணுவம்



வியட்நாமை தாக்கிய நாரி புயலால், மக்கள் கடும் அவதிகளை சந்தித்து வருகின்றனர்.

வியட்நாம் நாட்டில் நாரி புயல் தாக்குதல் கடுமையாக உள்ளது. இதனால் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தங்களது இடங்களை விட்டு பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

புயலின் வேகம் மணிக்கு 102 கிலோமீற்றர் என்ற அளவில் இருந்தது.மரங்கள் கீழே சரிந்து விழுந்ததுடன், நூற்றுக்கணக்கான கட்டடங்கள் சரிந்து விழுந்தன.

இதனை தொடர்ந்து இராணுவத்தினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.புயல் மேற்கு நோக்கி நகர்ந்து மேலும் வலுவிழக்கும் என அந்நாட்டு தேசிய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

புயலால் குவாங் நாம் மற்றும் டனாங் நகரம் ஆகியவை அதிக பாதிப்பிற்கு உள்ளாகும் மாகாணங்கள் என முன்பே அறிவிக்கப்பட்டிருந்தது

# கைத்தொழில் பேட்டைகளின் அபிவிருத்தி குறித்து ஆராய்வு



(கொழும்பு)

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழான கைத்தொழிற் பேட்டைகளினது அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றுள்ளது.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் மேற்படி விடயம் தொடர்பில் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

இதன்போது நாடளாவியரீதியிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிற்பேட்டைகளினது தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக கைத்தொழில் பேட்டைகளின் வாடகை, உற்பத்தி, உற்பத்திகளின்தரம், உற்பத்திகளுக்கான மூலப் பொருட்களின் கொள்வனவு உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் உற்பத்திகளின் சந்தைவாய்ப்பு தொடர்பாக குறித்த கைத்தொழில் பேட்டைகளின் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்ட அமைச்சர், அவர்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.

இவ்வாறான 18 கைத்தொழிற பேட்டைகள் நாடளாவியரீதியில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. குறித்த கைத்தொழிற் பேட்டைகள் யாவும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் இயங்கி வரும் நிலையில் அவற்றின் செயற்திறன்களை மேலும் மேம்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், குறித்த கைத்தொழிற் பேட்டைகள் மக்களுக்கான சேவைகளை சிறப்பாக வழங்கும் அதேவேளை, இதனூடாக துறைசார்ந்தவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் செயற்பட வேண்டுமென்பதுடன் இங்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக துறைசார்ந்தோர் எதிர்நோக்கி வருகின்ற இடர்பாடுகள் மற்றும் பிரச்சி னைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்றும் சுட்டிக்காட்டியதுடன், கைத்தொழிற் பேட்டைகளின் எதிர்கால வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் எல்லோரும் ஒன்றிணைந்த பங்களிப்பை வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கைத்தொழிற்பேட்டை பிரதிநிதிகள் தமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டனர்.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் பிரதியமைச்சர் வீரகுமார திசநாயக்க, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர் திருமதி வி.ஜெகராஜசிங்கம், கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் நவாஸ்ரஜாப்தீன், அமைச்சின் இணைப்பாளர் தங்கேஸ்வரி உள்ளிட்ட அமைச்சினதும் கைத்தொழில் அபிவிருத்தி சபையினதும் துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## எழுவைதீவு...

வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட 22 இந்திய மீனவர்களையும் கடற்படையினர் நேற்று முன்தினம் மாலை தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். தலைமன்னார் பொலிஸாரின் விசாரணைகளின் பின் நேற்று மாலை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர்.

இதன்போது, மேற்படி 22 மீனவர்களும் தலைமன்னார் கடற்பரப்பில் இருந்து 10 கடல் மைல் தொலைவில் இலங்கை கடல் எல்லைக்குள் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே அவர்கள் கைது செய்யப்பட்டதாக தலைமன்னார் பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டதில் நீதவான், குறித்த மீனவர்களை இம்மாதம் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அத்துடன் 5 பேர் சுகவீன முற்று இருப்பதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டமையினைத் தொடர்ந்து இவர்களுக்கு தேவைப்படும் பட்சத்தில் சிகிச்சைக்கான உதவிகளை வழங்குமாறு பதில் நீதவான் அறிவித்தார். (பா)

## அபிவிருத்தி...

கலந்து கொண்டார். இதன்போது உலக வங்கி மற்றும் நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடனும் அமைச்சர் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். கடந்த வருடத்தை விட இவ்வருடம் அமெரிக்க மற்றும் பிரித்தானிய நாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளது. இது இலங்கைக்கும் அனுகூலமான விடயமாகும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கான கேள்வி அதிகரிக்கும். கூடுதலான விலையைப் பெறமுடியும். சவுதிஅரேபியப் பிரதிநிதியுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின்போது இலங்கைக்கு வழங்கப்படும் உதவியை அதிகரிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் நீண்டநேரம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும், பிரதி நிதியமைச்சர் சரத் அமுனுகம, தெரிவித்தார். தொழில்நுட்ப கல்வியை அபிவிருத்தி செய்வதற்காக, உலக வங்கி பாரிய உதவிகளை வழங்கவுள்ளது. சுகாதாரத்துறை, நகர அபிவிருத்தி, வீடமைப்பு, போன்ற துறைகளுக்கும், உலக வங்கி உதவிகளை வழங்கவுள்ளதாக பிரதி நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழரின்...

வேண்டும் எனக்கோரினார். கடந்த 12 நாட்களுக்கு மேல் இதே பிரச்சினைக்காக தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் தியாகு உண்ணா விரதம் இருந்து வருகிறார் அவரது உடல் நிலை நலிந்து வருகிறது என எடுத்துக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டி ருக்கிறது.

இந்நிலையிலேயே பிரதமர் தமிழ் மக்கள் மற்றும் தி.மு.க. வின்ரின் கோரிக்கையைக் கருத்தில் கொண்டே கொமன் வெல்த் மாநாட்டில் பங்கேற்பது குறித்து முடிவெடுக்கப்படும் என கருணாநிதிக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

## பட்டினியில்...

இந்தியாவில் பட்டினி கிடப்போரின் எண்ணிக்கை குறைந்துள்ளது. எனினும் அது சீன, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளுக்கு கீழேயே உள்ளது.

உலக பட்டினி சுட்டியில் சீனா, பட்டினி மட்டத்தில் 6ஆம் இடத்தில் உள்ளது. இலங்கை 43 ஆவது, பாகிஸ்தான் 57 ஆவது, பங்களாதேஷ் 58 ஆவது இடங்களை பெற்று கடுமையான பட்டினி மட்டத்திலிருப்பதை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தச் சுட்டி 120 அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பட்டினி மட்டத்தை காட்டுகின்றது. இந்தச் சுட்டியை தயாரிக்கும் போது மந்த போஷனை உடையோரின் விகிதாசாரம், ஐந்து வயதுக்கு குறைந்த பிள்ளைகளில் நிறை குறைந்த பிள்ளைகளின் விகிதாசாரம், ஐந்து வயதுக்கு குறைந்த பிள்ளைகளின் மரண வீதம் ஆகிய மூன்றும் சமஅளவில் கருத்தில் எடுக்கப்பட்டன.

## சம்பூர்...

ஆனால், அதனை நிராகரித்த மனுதாரர் தரப்புச் சட்டவாதி, சுமார் 200 குடும்பங்கள் இன்னமும் குடியமர்த்தப்படவில்லை என்றும் அதற்கான இடங்கள் அடையாளங் காணப்படவில்லை என்றும் கூறினார்.

இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள் மக்களை குடியமர்த்துவதற்கான இடங்களை அவர்களுக்கு அடையாளம் காட்ட உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அரச சட்டவாதிக்கு உத்தரவிட்டனர்.

## சீன, இலங்கை...

இலங்கைக்கான சீனத் தூதுவர் வூ ஜியன்ஹோ (Wu Jianghao) உட்பட சீனாவின் உயர் அதிகாரிகள், வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றம் மிலிந்த மொறகொட ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# ஆனைக்கோட்டையில் கலாசார விழிப்புணர்வு

(மானிப்பாய்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான கலாசார விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் மாலினிதேவி தலைமையில் நேற்றுப் பிற்பகல் 12.00 மணி முதல் ஆனைக்கோட்டை பாலசுப்ரமணிய வித்தியாசாலையில் கருத்தரங்கு இடம்பெற்றது.

இக் கருத்தரங்கில் சிரேஷ்ட உளவளத்துணை ஆலோசகர் வைத்தியர் திருமதி. புவனலோஜினி, சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கியதுடன் ஆனைக்கோட்டை மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினால் ஒளித்திரை காண்பியலும் காண்பிக்கப்பட்டது.

இச் செயற்திட்டம் தொடர்ச்சியாக பிரதேசத்தின் பல்வேறு பாடசாலைகளிலும் இடம் பெறவுள்ளதுடன் நாளை மாதகல் சென் ஜோசப் மகாவித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் மாலினிதேவி தெரிவித்தார். (48)

# வடக்கு மாகாணத்தில் 500 விழிப்புலனற்றோர்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் சுமார் 500 விழிப்புலனற்றோர் உள்ளதாக யாழ் மற்றும் வவுனியா வைத்தியசாலைகளின் கண் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எம். மலரவன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வெள்ளைப் பிரம்பு தினம் தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இந்தத் தகவலை அவர் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வடமாகாணத்தில் மக்களினுடைய பங்களிப்பு மற்றும் அவர்களின் ஆர்வம் என்பவற்றினால் மாற்று திறனாளிகளுக்கான விழிப்புணர்வு வட மாகாணத்தில் சர்வதேச தரத்தில் உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

விழிப்புலனற்றோருகான கிரிக்கெட்போட்டியை நாம் சவுண்போல் கிரிக்கட் ரி - 20 எனப் பெயரிட்டு இம்முறை வவுனியாவில் நடத்தியிருந்தோம். ஏனெனில் விழிப்புலனற்றோரும் சமூகத்தில் ஆளுமையுள்ளவர்கள் என்பதுடன் அவர்கள் சாதாரண மனிதர்களை போல் அனைத்து செயற்பாட்டிலும் ஈடுபடக்கூடியவர்கள் என்பதனை வெளிப்படுத்தும் நோக்கோடு இதனை ஏற்பாடு செய்திருந்தோம்.

இதன் போது இலங்கையின் பல பாகங்களில் இருக்கும் விழிப்புலனற்றோருக்கான பதிவு செய்யப்பட்ட 12 அணிகளில் 8 அணிகள் பங்கேற்றிருந்தன. இவ் அணிகளில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அணியும் பங்கேற்றிருந்தது. அவர்களுக் குப் போதியளவு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்காவிடினும் அவர்களும் பங்கேற்றிருந்தார்கள்.

இவ்வீரர்கள் பந்தில் இருந்து வரும் சத்தத்தை உணர்ந்து விளையாட்டில் ஈடுபடுவார்கள். அதனைப் பார்க்கும் போது சாதாரண வீரர்கள் பங்கேற்பது போல் அவர்கள் சத்தத்தை அடையாளப்படுத்தி விளையாடுவதை அவதானிக்க முடியும்.

இந் நிலையில் நாம் விழிப்புலனற்றோருக்கான நிகழ்வுகளை யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் நடத்துவோம் வவுனியா மாவட்டம் விழிப்புலனற்றோரின் செயற்பாட்டில் முன்மாதிரியாக உள்ளதால் இந்த மாவட்டத்தில் முதலில் நடத்தினோம். மாற்று திறனாளிகளுக்கு இச்சமூகத்தில் அனைத்து உரிமைகளும் சாதாரண மனிதனைப் போலவே உள்ளது என்றார்.

## இலங்கைக்கான...

சனிக்கிழமை பிரித்தானிய இளவரசர் இலங்கை வரவுள்ளதோடு அவர் நவம்பர் 16ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பார்.

இளவரசரும, இளவரசியாரும இலங்கை வரவுள்ளார்.

இவர்கள் பொதுநலவாய மாநாட்டு ஆரம்ப நிகழ்விலும் இரவு விருந்திலும் பங்கேற்பதோடு இன்னும் சில தரப்பினருடன் சந்திப்பு நடத்தவுள்ளனர்.

மேலும் சுகாதார வைத்தியசாலை ஒன்றுக்கும் தேயிலைத் தோட்டம் ஒன்றுக்கும் பிரித்தானிய இளவரசரும் இளவரசியும் விஜயம் செய்யவுள்ளனர்.

இளவரசர் இதற்கு முன்னர் 1998 ஆம் ஆண்டிலும் 2005ஆம் ஆண்டிலும் இலங்கை வந்தார். அத்துடன் இளவரசியார் இலங்கைக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவை என அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.வாசிகளை அனுப்பியது ஆஸி

அவுஸ்ரேலியாவுக்கு அகதிகளாகச் சென்றவர்களில் மேலும் 33 பேர் நாடுதிரும்பியுள்ளனர். பண்டாரநாயக்க கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாகவே அவர்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

அவுஸ்ரேலியா கிறிஸ்மஸ் தீவிலிருந்து விசேட விமானத்தின் மூலமாக பலத்த பாதுகாப்புடன் இவர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

அந்தக் குழுவில் 8 பெண்களும் 25 ஆண்களும் இருந்துள்ளதுடன் சிறுவர்கள் எட்டுபேரும் இருந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள், திருகோணமலையிலிருந்து மீன்பிடி படகுகள் மூலமாக சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவுக்கு சென்றவர்கள் என்றும் அங்கு அரசியல் அகதி அந்தஸ்து கிடைக்காததையடுத்து திருப்பியனுப்பப்பட்டுள்ளனர் என்றும். தெரிவிக்கப்படுகின்றது.

(மற்றுமொரு செய்தி 4ஆம் பக்கத்தில்)

# சிறுமியுடன் குடும்பம் நடத்திய இளைஞன் விளக்கமறியலில்

(உரும்பிராய்)

யாழ்ப்பாணம், உரும்பிராய் பகுதியில் 15 வயதுச் சிறுமியுடன் குடும்பம் நடத்திய இளைஞர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ், உரும்பிராய் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 29 வயது இளைஞர் ஒருவர் அதே ஊரைச் சேர்ந்த 15 வயதுச் சிறுமி ஒருவருடன் குடும்பம் நடத்தி வந்துள்ளார். இதற்கு சிறுமியின் வீட்டாரது சம்மதத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனையறிந்த அயலவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்தனர். இந்த முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் குறித்த இளைஞரை கைது செய்து நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான், குறித்த இளைஞரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், சிறுமியை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் தெரிவித்தார். (25)

# இராசாவின் தோட்டத்தில் இளைஞர் மீது வாள்வெட்டு

யாழ்.இராசாவின் தோட்டம் பகுதியில் வாள்வெட்டுக்கு இலக்காகிய நிலையில் இளைஞர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த வை.துஷ்யந்தன் (வயது 22) என்பவரே இவ்வாறு வாள்வெட்டிற்கு இலகாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியிலுள்ள மதுபான விற்பனை நிலையத்தில் நேற்று மதியம் 2.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரு நபர்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறின் காரணமாக இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (25)

## தவிசாளர், துணைத்தவிசாளர் வெளியேறியபோதும்

# உறுப்பினர் ஒருவரின் தலைமையில் வலி.கிழக்கு பிரதேச சபை மாதாந்த அமர்வு

வலி.கிழக்கு பிரதேச சபையின் செம்ரெம்பர் மாத அமர்வு கடந்த 30 ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையில் தவிசாளர், துணைத் தவிசாளரும், கூட்டத்தை நடத்தாது வெளியேறிச் சென்றபோதும் ஆளும் கட்சியை சேர்ந்த ஐந்து உறுப்பினர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்களும் இணைந்து ஆளும் கட்சி உறுப்பினரான கந்தையா துரைராசா தலைமையில் கூட்டத்தை நடாத்தி முடித்தனர்.

இது தொடர்பாக வலி. கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் என். இராசநாயகம் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

வலி.கிழக்கு பிரதேச சபையின் செப்ரெம்பர் மாத மாதாந்த அமர்வு கடந்த 30 ஆம் திகதி நடைபெறவிருப்பதாக சபையின் செயலாளரால் சகல உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டு அன்றைய தினம் 19 உறுப்பினர்கள் வருகைதந்த நிலையில் சபைச் செயலாளரும், அவருக்கு உதவியாக பிரதம முகாமைத்துவ உதவியாளரும் வருகை தந்திருந்தனர்.

அந்நேரம் கூட்ட மண்டபத்திற்கு வருகை தந்த தவிசாளர் பிரதம முகாமைத்துவ உதவியாளரை கண்டதும் சீறிப்பாய்ந்தார். அவரை உடனடியாக சபையை விட்டு வெளியேறுமாறு பணித்தார்.

அவர் வெளியேறினால் நாமும் வெளியேற வேண்டிவரும் எனவும் அவரது வரவு அவசியமானதும், தேவையானதுமென உறுப்பினர்கள் பலரும் கூறிய போதிலும் அவர் இருந்தால் தன்னால் கூட்டம் நடத்த முடியாது எனத் தெரிவித்து வரவுப் பதிவேட்டில் கையொப்பம் இடமாமலும் சபையை ஒத்திவைக்காமலும் சபையை விட்டு வெளியேறிச் சென்றார்.

இதனை அடுத்து துணைத் தவிசாளரரை தலைமை தாங்குமாறு உறுப்பினர்கள் ஏகமனதாக கோரிக்கை விட்டனர். துணைத்தவிசாளரும் தான் தவிசாளரை கூட்டி வருவதாக கூறி வெளியேறிச் செல்ல மேலும் சில உறுப்பினர்கள் வெளியேறினர்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் 5 பேரும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 5 பேருமாக 10 உறுப்பினர்கள் 15 நிமிடங்கள் காத்திருந்தும் எவரும் சபைக்கு வராததால் இவர்கள் வேண்டுமென்றே கூட்டம் நடாத்த மறுத்து சபை அமர்வுகளை அசட்டை செய்வதால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 10 இன் பிரகாரம் தவிசாளரும், துணைத் தவிசாளரும் சபைக்கு வருகைதரவில்லையென கருதி வருகைதந்த ஆளும் கட்சி உறுப்பினர்களில் ஒருவரான கந்தையா துரைராசா கூட்டத்திற்கு தலைமைதாங்குமாறு ஏகமனதாக தெரிவு செய்தனர்.

தொடர்ந்தும் கூட்டம் வழமையை விட அமைதியாகவும், சுமுகமாகவும் எவ்வித கருத்து முரண்பாடும் இன்றி நடைபெற்றுக்கொண்டிருந்த போது உள்ளுநுழைந்த ஆளும் கட்சி உறுப்பினரான கந்தையா நாகரத்தினம் தலைவரிடமிருந்து சுயவிபரக்கோவையை இழுத்துப் பறித்துக்கொண்டு ஓட்டமெடுத்தார்.

தொடர்ந்து கொடுப்பனவுகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பிலான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவ்வேளையில் கமராவுடன், உள்நுழைந்த தவிசாளர் சபையோரை படமெடுத்துச் சென்றார். அதன் பின்பும் பல முக்கியமான சம்பளக் கொடுப்பனவு, ஊழியர் வெற்றிடம் நிரப்புதல், உரும்பிராய் சந்தைக்கடைத் தொகுதி என்பன பற்றிக் கலந்துரையாடி முடிவுகள் எட்டப்பட்டன.

தொடர்ந்து ஆளும் கட்சி உறுப்பினர் தம்பிராசா திருநாவுக்கரசின் நன்றியு[illegible]யுடன் கூட்டம் இனிதே நிறைவடைந்த போது உறுப்பினர்கள் கடந்த இரண்டு ஆண்டுகால கூட்டங்களில் இன்றைய கூட்டமே சிறப்பாகவும், ஒரு இணக்கமான நிலையிலும் நடைபெற்றதென மகிழ்ச்சி தெரிவித்ததுடன், இவ்வாறான தவிசாளர்களின் துஷ்பிரயோகங்களுக்கும் அசட்டைகளுக்கும் அரச உயர்மட்டங்களில் இடமளிக்கக்கூடாதெனவும் பேசிக்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்சாரக் கட்டணத்தை செலுத்துவது யார்?

(கிளிநொச்சி)

ஏ- 9 வீதியின் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியிலிருந்து நீதிமன்றம் வரையில் பொருத்தப்பட்ட மின்விளக்குகளுக்கான மின்சாரக் கட்டணங்களை செலுத்துவதில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ள நிலைமையை அடுத்து இலங்கை மின்சார சபையினால் மின்விளக்குகளுக்கான மின்சாரம் கடந்த வியாழக்கிழமை துண்டிக்கப்பட்டது.

இதுதொடர்பாக கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் தெரிவிக்கையில்,

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கரடிப்போக்குச் சந்தியிலிருந்து நீதிமன்றம் வரையிலும் 144 மின் விளக்குகள் ரூபா 3.4 மில்லியன் செலவில் ஜூன் மாதம் 6 ஆம் திகதி பொருத்தப்பட்டது.

இதற்கான மாதாந்த மின் கட்டணமாக ரூபா 4.5 இலட்சத்தினை கரைச்சி பிரதேச சபையினால் செலுத்த முடியுமா என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கடிதம் மூலம் எங்களிடம் கேட்டிருந்தார்.

எமது பிரதேச சபைக் கூட்டத்தில் இந்த மின்விளக்குக்கான மின்சாரக்கட்டணத்தில் பிரதேச சபையினால் மாதாந்தம் ரூபா 1 இலட்சம் ரூபா செலுத்த முடியும் என தீர்மானமெடுத்து அரசாங்க அதிபருக்கு பதில் கடிதம் அனுப்பியிருந்தோம். இருந்தும் அதற்கான பதில் வரவில்லை.

மின்சார சபைக்கான மின் கட்டணமாக ரூபா 10 இலட்சத்திற்கும் அதிகமான தொகை செலுத்தப்படாமல் இருந்தது.

இந்நிலையில் இலங்கை மின்சாரசபை கடந்த 3 ஆம் திகதி வியாழக்கிழமை இந்த மின் விளக்குகளுக்கான மின் இணைப்பினை துண்டித்தது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# 15 மாதக் குழந்தைக்கு சோறால் வந்த விபரீதம்

15 மாத குழந்தையின் தொண்டையில் சோறு இறுகியதனால் அக்குழந்தைக்கு பெற்றோல் கொடுத்த விபரீதமான சம்பவமொன்று அம்பாந்தோட்டையில் இடம்பெற்றுள்ளது.

தனது தம்பியின் தொண்டையில் சோறு இறுகியதனால் தண்ணீர் என்று நினைத்து ஏழு வயதான அக்கா பிளாஸ்டிக் போத்தலில் இருந்த பெற்றோலை கொடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து அந்தக் குழந்தை மரணமடைந்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கூட்டமைப்பு விஞ்ஞாபனம்; வழக்கு விசாரணை 30 இல்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு எதிரான வழக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த வட மாகாணசபைத் தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றை சமர்ப்பித்திருந்தது.

இந்த விஞ்ஞாபுனம் நாட்டின் அரசியல் சாசனத்திற்கு விரோதமானது எனத் தெரிவித்தும், நாட்டைத் துண்டாட முனைப்பு காட்டுவதாகவும் தெரிவித்து வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு எதிராக ஆறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாணவன் மீது தாக்குதல்: சக மாணவனின் கைங்கரியம்

(யாழ்ப்பாணம்)

யாழில் மாணவன் ஒருவன் மீது சக மாணவன் ஆள்வைத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.நகரிற்கு வெளியில் அமைந்துள்ள பிரபலமான பாடசாலையொன்றில் கல்விபயிலும் கொக்குவில் பகுதியினைச் சேர்ந்த மாணவன் ஒருவரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதுடன் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

உயர்தரத்தில் கல்வி பயிலும் மேற்படி இரு மாணவர்களுக்கிடையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வாய்த்தர்க்கம் ஏற்பட்டிருந்ததாக பாதிக்கப்பட்ட மாணவன் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (25)

# பிக்குவால் சீரழிக்கப்பட்ட சிறுவன் வைத்தியசாலையில்

(வவுனியா)

வவுனியா அட்டமஸ்கடவில் பௌத்த மதகுருவால் நடத்தப்பட்டு வரும் சிறுவர் இல்லமொன்றில் பராமரிக்கப்பட்டு வந்த 12 வயதுடைய சிறுவனொருவன் அப்பகுதயில் உள்ள பௌத்த விகாரையொன்றின் பௌத்த மதகுருவினால் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

வவுனியா அட்டமஸ்கட பகுதியில் உள்ள விகாரையொன்றின் விகாராதிபதியால் நடத்தப்பட்டு வந்த சிறுவர் இல்லமொன்றில் பராமரிக்கப்பட்டு வந்த சிறுவனொருவன் நீண்ட நாட்களாக ஓரினச்சேர்க்கைக்கு உட்படுத்தப்பட்டு வந்த நிலையில் அச்சிறுவன் சிறுநீர் கழிப்பதற்கு சிரமப்பட்டமையினால் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந் நிலையில் அச் சிறுவன் விகாராதிபதியினால் நீண்ட நாட்களாக பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு வந்தது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து வவுனியா வைத்தியசாலையினால் வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ளதுடன் சிறுவனின் தாயாரால் வவுனியா பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

எனினும் சம்பந்தப்பட்ட பௌத்த குரு கைது செய்யப்படவில்லை என்பதுடன் மேற்படி விடயம் தொடர்பாக தகவல்களை தெரிவிப்பதற்கும் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் தயக்கம் காட்டிவருகின்றனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஒக்ரோபர் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.